

+16 இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்
கலைஞரும் திருச்சியும்...
வழங்குபவர்
ப. கதிர்வேல்,
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
KALKI
10.6.2007
ரூ.8.00
80 பக்கங்கள்
Indica
இந்த இதழுடன்
இலவசம்!
ஒரு பாக்கெட்
இன்டிகா ஹேர்டை
செல்லைத் தள்ளு...
மார்க்கை அள்ளு!



வரவேற்புகளுக்கென்றே
வடிவமைக்கப்பட்டவை
ஃபேஷன் / திருமண
வரவேற்பு நகைகள்
ரூ.2999 /-
முதல்
SWARNALAYA
Jewellery
ld, Diamond, Ruby, Emerald and 1Gram Jewellery Collections
katnarayana Road, T.Nagar, Chennai - 17. Ph : 4212 5353 /
www.swarnalayajewellery.co.in

கல்கி
தரம் நிரந்தரம்

+16

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

17.6.2007

உங்கள் பார்வைக்கு...

டோண்ட் மிஸ் இட்!



நீங்க அவசியம் பார்க்கணும்...
பார்த்துப் படிக்கணும்...
படிச்சு சொல்லணும்...

யாருக்கு?



ஒரு வாரம்
வெயிட் பண்ணுங்க,
தெரிஞ்சுடும்!

வாரிசுச் சான்றிதழ் வாங்குவது

அரசாங்க வேலையில் உள்ள ஒருவர் இறந்து விட்டால், அவரின் வாரிசுக்குக் கருணை அடிப்படையில் வேலை வாங்குவதற்கோ அல்லது இறந்து போனவரின் கணக்கில் வங்கியில் உள்ள பணத்தை எடுப்பதற்கோ, சொத்துக்களை பெயர் மாற்றிக் கொள்ளவோ, வாரிசுச் சான்றிதழ் அவசியம் தேவை. அதனைப் பெறுவது எப்படி?

- வாரிசுச் சான்றிதழ் வாங்குவதற்கு உங்கள் பகுதிக்குரிய வருவாய் ஆய்வாளரை அணுக வேண்டும். இவர் தாலுகா அலுவலகத்தில் இருப்பார்.



- இறந்து போனவரின் வாரிசுகள், மனைவி ஆகியோர் 'இறந்தவர் எங்களுக்கு இன்ன வகையான உறவு. நாங்கள்தான் அவரின் வாரிசு. எனவே, உரிய சான்றிதழ் வழங்க வேண்டும்' என்று வெள்ளை பேப்பரில் இரண்டு ரூபாய் கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும். ரேஷன் கார்டு நகலை யும் இணைப்பது நல்லது.

- மனுவைப் பெற்றுக் கொள்ளும் வருவாய் ஆய்வாளர், விண்ணப்பித்த அனைவரையும் கூப்பிட்டு தனித் தனியே அவர்களிடம் ஸ்டேட்மென்ட் வாங்கிப் பதிவு செய்து கொள்வார். மகன், மகள் தொலைதூரத்தில் இருந்தால், எங்கு இருக்கிறார்களோ அந்தப் பகுதி மாஜிஸ்திரேட் அல்லது உரிய அதிகாரி முன்பு ஸ்டேட்மென்டைப் பதிவு செய்து, அவர்கள் கையெழுத்துடன் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பலாம். இதற்கிடையில் கிராம நிர்வாக அலுவலர் இறந்தவர்

…ப்படி?

வசித்த முகவரிக்குச் சென்று விசாரிப்பார். இறந்தவரின் மனைவி, மகன், மகள் பெயரையெல்லாம் சரி பார்த்துக்கொள்வார். சுற்று வட்டாரத்தில் இருக்கும் பத்துப் பேரிடம் விசாரித்து விண்ணப்பதாரர்கள் சொல்வது சரி அல்லது தவறு என்ற தனது அறிக்கையை அனுப்புவார். இந்த விசாரணை முடிய பதினைந்து நாட்கள் ஆகிவிடும்.

● பின்னர் வருவாய் ஆய்வாளர், தனது அறிக்கையை தாசில்தாருக்கு அனுப்புவார். தாசில்தார் அதைப் பரிசீலித்து வாரிசுச் சான்றிதழ் வழங்குவார். இதற்கு முப்பது நாட்கள் கால அவகாசம் ஆகலாம்.

● சிலர் இறந்துபோன பின்புதான், இரண்டாவது மனைவி இருப்பது தெரிய வரும். இரண்டு மனைவிகளும், இறந்து போனவர் தமக்குரியவர்தான் என்பதற்கான ஆதாரங்கள் வைத்திருக்கும் நிலையில் விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்று விடும். நீதிமன்றம் விசாரித்து, குடும்பங்களின் நிலையைக் கருத்தில்கொண்டு, இரண்டு மனைவிகளுக்கும் பிறந்த மகன், மகள்களை வாரிசாக அறிவித்து விடுவதும் உண்டு.

● இறந்து போனவரின் பெருமளவு சொத்துக்கள் யாருக்கு என்று கேள்வி வரும்போது, வாரிசுகளின் போராட்டம் வலுக்கும். இந்த நிலையில் தாசில்தார் கொடுக்கும் சான்றிதழுக்கு மதிப்பு அதிகம். இவர் வட்டாட்சியர் மற்றும் வட்ட நிர்வாக நீதிபதியாக இருப்பதால், இவர் கொடுக்கும் வாரிசுச் சான்றிதழை நீதிமன்றம்கூட கேள்வி கேட்க முடியாது. ஏனெனில், ஒரு வாரிசுச் சான்றிதழ் கொடுப்பதென்றால், கடுமையான நடைமுறைகளைக் கையாண்டுதான் கொடுக்க வேண்டும்.

- கௌசி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு. மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0823, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

செல்லைத் தள்ளு..

அண்ணா யுனிவர்சிட்டி அதிசயம்!



✱ ஸ்ருதி, கார்த்திகா, ரேஷ்மா

"அண்ணா பல்கலைக் கழகத்தில் கொண்டு வரப்பட்ட செல்ஃபோன் தடைக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. மாணவர்களின் தேர்ச்சி இருபத்தி ஐந்து சதவிகிதம் வரை அதிகரித்திருக்கிறது'' என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் விஸ்வநாதன் அண்மையில் வெளியிட்டிருக்கும் ஒரு தகவல் பலருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. 2005ஆம் ஆண்டு, விஸ்வ

நாதன் துணைவேந்த ராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் சில அதிரடி யான விதிமுறைகளை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்தார். அவற்றில் மிக முக்கிய மானது கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் செல்ஃபோன்களைப் பயன்படுத்தத் தடை விதித்தது. அதனை ஆதரித்தவர்களும் உண்டு; விமர்சித்தவர்களும் உண்டு.

இதுபற்றி மேலும் அறிந்துகொள்ள அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் விஸ்வநாதனைச் சந்தித்துப் பேசினோம். ''பொதுவாக, கல்லூரியில் படிக்கிற காலம் வாழ்க்கையைப் பற்றிய எந்தவிதமான கவலைகளும் பொறுப்புகளும் இல்லாத காலம் என்று மாணவர்கள் நினைப்பார்கள். ஆனால், அந்தக் கருத்துகளெல்லாம் இன் றைய சூழ்நிலைக்கு ஒத்து வராது. இன்று உலகம் போட்டிகள் நிறைந்ததாக இருக் கிறது. படித்து முடித்துவிட்டு வேலை இல் லாமலிருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. எனவே, கல்லூரியில் படிக்கும் சமயத்திலேயே

மார்க்கை அள்ளு!

போட்டிகள் நிறைந்த உலகுக்கு மாணவர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டியது கட்டாயம்! அதே சமயம், இன்று மாணவர்களின் கவனத்தைச் சிதறச் செய்யும் விஷயங்கள் ஏராளமாக உள்ளன. அதில் முக்கியமானது செல்ஃபோன். ஒரு மாணவர், ஒரு நண்பருடன் ஒரு நாளைக்கு ஐந்து நிமிடங்கள் பேசுவதாக வைத்துக் கொள்ளலாம்; அவருக்குப் பத்து, பன்னிரண்டு நண்பர்கள் இருந்தால், தினம் ஒரு மணி நேரம் செல்ஃபோனிலேயே செலவழிந்து விடுகிறது. இப்படி நேரத்தை வீணாக்காமல், தினமும் அந்த ஒரு மணி நேரத்தைப் படிப்பதற்குப் பயன்படுத்தினால், வாழ்க்கையில் எத்தனையோ விஷயங்களைச் சாதிக்க முடியும்?'' என்கிறார் துணை வேந்தர்.

''இன்று ஒரு மாணவன் தொழில்நுட்ப அறிவினைப் பெற்றால் மட்டும் போதாது; மற்றவர்களுடன் தொடர்புகொள்ள நல்ல மொழிவளமும், பேச்சுத்திறனும் கொண்டிருக்க வேண்டும். பல மாணவர்கள் நன்றாகப் படித்து, தேர்வில் நல்ல மார்க்குகள் வாங்கினாலும் அவர்களுக்கு நல்ல மொழிவளம் இல்லை. எனவே, அண்ணா பல்கலைக்கழகத்தில் கம்யூனிகேஷன் திறமையை வளர்க்க 'லாங்வேஜ் லேப்'கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்றும் துணைவேந்தர் தெரிவிக்கிறார்.

''மாணவர்களுக்கு மட்டும்தான் தடை என்று இல்லை; ஆசிரியர்களும்கூட வகுப்புகளுக்கு செல்ஃபோன்களை எடுத்துக்கொண்டு செல்லக்கூடாது; அல்லது வகுப்பில் செல்ஃபோன்களை ஆஃப் செய்துவிடவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வளவு ஏன், நான் வகுப்புக்குப் போகிறபோது, செல்ஃபோன் எடுத்துக் கொண்டு செல்லமாட்டேன். ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகளுடைய சௌகரியத்துக்காக ஹாஸ்டல்களில் சுமார் தொண்ணூறு டெலிபோன்களை புதிதாக வைத்திருக்கிறோம். டெலிபோன் விஷயத்தில் மட்டுமில்லை. கல்லூரிகளில் 'கல்சுரல்ஸ்' என்ற பெயரில் ஆபாசமான சினிமா பாடல்கள் பாடுவது, டான்ஸ் ஆடுவது ஆகிய விஷயங்களுக்கும் தடைவிதித்துவிட்டேன். மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளை மேலோட்டமாகப் பார்க்கிறபோது சற்றுக் கடுமையாகத் தோன்றினாலும், நல்ல பலன்களை அளித்துள்ளன'' என்கிறார்.

சில மாதங்களுக்கு முன்பு கல்லூரிகளில் ராகிங்கைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய முன்னாள் சி.பி.ஐ. இயக்குநர் ஆர்.கே.ராகவன் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து, பல தரப்பினரையும் சந்தித்துப் பேசி தனது அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. அதில், கல்லூரி வளாகங்களில் ராகிங்கைத் தடுக்கும் வழிமுறைகளுள் ஒன்றாக மாணவ - மாணவிகள் கையில் செல்ஃபோன் வைத்துக் கொள்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. இது குறித்து துணை

• விஸ்வநாதன்



தகவல் தொடர்புக்குத்தான்... வீண் அரட்டைக்கு அல்ல...

அண்ணா பல்கலைகழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இருநூறுக்கும் அதிகமான பொறியியல் கல்லூரிகளுக்கும் இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும் என்றாலும், கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்திலும், மற்றும் ஒரு சில கல்லூரிகளிலும் தவிர, மற்ற இடங்களில் கடுமையாக அமல்படுத்தப்படவில்லை என்று பல மாணவர்களிடமும் பேசியபோது தெரிய வருகிறது. செல்ஃபோன் தடைக்கு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என்ன சொல்கிறார்கள்?

''வகுப்பறையில் செல்ஃபோன் நிச்சயம் ஒரு தொந்தரவுதான். அவற்றைக் கல்லூரி வளாகங்களில் தடை செய்வது சரிதான்'' - மாணவி ஸ்ருதி.

''சென்னை நகரிலிருந்து வெகுதூரத்தில் பல பொறியியல் கல்லூரிகள் முளைத்துள்ளன. பயண நேரம் ஒரு மணி நேரத்துக்கும் அதிகம் ஆகிறது. எனவே, ஏதாவது எமர்ஜென்சி என்றால், கையில் செல்ஃபோன் இருப்பது மிகவும் சௌகரியம். அதேசமயம் வகுப்பறையில் செல்ஃபோன்களைக் கண்டிப்பாகத் தடை செய்ய வேண்டியதுதான்'' - மாணவி ரேஷ்மா.

''பள்ளி கல்லூரி வளாகங்களில் செல்ஃபோன் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் அவ்வப்போது செய்திகள் வருகின்றன. செல்ஃபோன்கள் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டியதும் அவசியம்'' - கார்த்திகா.

''செல்ஃபோன் என்பது தகவல் தொடர்புக்குத்தான்; வீண் அரட்டைக்கு இல்லை என்பதை குழந்தைகளுக்குப் புரியவைக்க வேண்டியது பெற்றோரின் கடமை. வகுப்பறைக்குள் செல்ஃபோனைக் கொண்டுபோவது என்பது படிக்கும் மாணவர்களுக்கும் சரி, ஆசிரியர்களுக்கும் சரி தொந்தரவுதான். ஆனால், அதன் காரணமாக இருபத்தைந்து சதவிகிதம் அளவுக்கு மாணவர்களின் தேர்ச்சி அதிகரிக்குமா என்பது விவாதத்துக்குரியது'' - சரவணவேல்.

* சரவணவேல்



* மாலதி சிவராமன்



''படிக்கிற பசங்களுக்கு செல்ஃபோன் எதற்கு? காலையில் கிளம்பி கல்லூரிக்குப் போனால், மாலையில் வீடு திரும்பப் போகிறார்கள். அப்புறம் செல்ஃபோன் எதற்காக? ஃப்ரெண்ட்ஸ்களுடன் அரட்டை அடிக்கவா? வேஸ்ட்!'' - மாலதி சிவராமன்.



வேந்தரிடம் கேட்டபோது, ''அண்ணா பல்கலைக் கழகத்தில் ராகிங் என்பதே கிடையாது. ராகிங் தடுப்புக் குழுக்கள் அமைத்தும், மாணவர்களிடையே ராகிங் கொடுமைகளைப் பற்றி எடுத்துரைத்தும் சீனியர் மாணவர்கள் ராகிங்கில் ஈடுபடாமல் செய்கிறோம். அது மட்டுமின்றி பொதுவாக கல்லூரிகளில் ஆண்டு முழுவதும், ராகிங் நடப்பதில்லையே! முதல் ஒரு சில மாதங்களுக்குப் பிறகு நின்றுவிடுமே! அதுவரை அவசியப்படும்போது செல்ஃபோனைப் பயன்படுத்துவதில் நோ பிராப்ளம்!'' என்கிறார்.

- எஸ்.சந்திரமௌலி

அட்டை மற்றும் படங்கள் :

ஸ்ரீஹரி

கலாசாரக் களஞ்சியம்!



* சித்ரா மாதவன்



* பிரேமா கஸ்தூரி

வெளிநாட்டுக்குச் சென்று உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு நம் தென்னிந்திய கலாசாரத்தை போதிப்பதற்கான இலவசப் பயிற்சி முகாம் ஒன்று, வரும் ஜூலை ஒன்றாம் தேதியன்று நடைபெறவிருக்கிறது.

அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலிருந்து அழைப்பு வந்து, கல்வி கற்கச் செல்லும் இளம் தலைமுறையினர், அங்கு போய்ச் சேர்ந்த பிறகு, நம் தென்னிந்திய பாரம்பரிய பழக்க வழக்கங்கள், கலாசாரங்களைப் பற்றிக் கேட்டால் 'திருதிரு'வென முழிக்க நேரிடுகிறது. இந்த நிலையை மாற்றவே இந்தப் பயிற்சி முகாம்!

முகாமில் இலவசமாக ஒரு புத்தகம் அளிக்கப்படுமாம். இதில் இந்திரா பார்த்தசாரதி, கணபதி ஸ்தபதி, எஸ்.முத்தையா, ராண்டார் கை, என்.விட்டல், லட்சுமி தேவநாத், ஃபாதர் ஆனந்த் அமல்ராஜ், டாக்டர் புவனேசுவரி என்று 47 அறிஞர்கள், பல துறைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

''இது பாடப் புத்தகம் அல்ல. இளைய தலைமுறையினர் தென்னிந்திய பாரம்பரியம், கலாசாரம், சரித்திரம் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகத் தயாரிக்கப்பட்டது'' என்கிறார் ராமு அறக் கட்டளையைச் சேர்ந்த ஆர்.டி.சாரி.

''வெளிநாட்டுக்குச் சென்ற பிறகு, நம் பின்னணியைப் பற்றி அடிக்கடி எழுப்பப்படும் கேள்விகளுக்கு, இளம் தலைமுறையினர் பதில் அளிக்க இயலாமல் தவிப்பதை அறிந்து, அவர்களுக்குக் கைகொடுக்க இந்தத் தொகுப்பு நிச்சயம் உதவும்!'' என்கிறார்கள் புத்தகத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் சித்ரா மாதவனும் டாக்டர் பிரேமா கஸ்தூரியும்.

முதல் 2000 மாணவ - மாணவியருக்கு மட்டுமே வழங்கப்படும் இந்த ஒரு நாள் இலவசப் பயிற்சியும் இலவசப் புத்தகமும் தென்னிந்திய மாணவர்களுக்கு மட்டும் தானாம்.

பல்கலைக்கழகத்திலிருந்து வந்திருக்கும் கடிதம், விசா அனுமதி இரண்டும் வைத்திருக்கும் இளைய தலைமுறையினர் Tag Centre, 69, டி.டி.கே. ரோடு, சென்னை - 18 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். shworkshop@tagcorporation.net என்கிற ஈமெயில் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

– சாருகேசி



பிரசாரத்தின்போது...

சூடு பறந்த பா.ம.க.வின் மது ஒழிப்புப் பிரசாரம்...

பல கட்சிகளில் உள்ள பிரமுகர்கள் டாஸ்மாக் கடைகளை ஏலம் எடுக்க முடியுமா அல்லது ஏற்கெனவே இருக்கும் கடைகளில் பார்கள் வைக்க முடியுமா என்று சிபாரிசுக்காக அலைந்து கொண்டிருக்க, தம் கட்சிக்காரர்கள் யாரும் குடிக்கக் கூடாது; டாஸ்மாக் கடைகளில் தின்பண்டங்கள் விற்கும் கடைகள்கூட வைக்கக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருக்கிறார் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ்! இது மட்டுமல்லாமல் கட்சியின் மகளிர் அணியினரை தமிழகம் முழுவதும் அனுப்பி மது ஒழிப்புப் பிரசாரமும் செய்துவரச் செய்திருக்கிறார்.



சிலம்புச் செல்வி

நிர்மலா ராஜா



பா.ம.க. மகளிர் அணியின் முக்கிய பிரமுகர்கள் பத்துப் பேர், ஐந்து பிரிவுகளாகச் சென்று மது ஒழிப்பு பிரசாரத்தை முடுக்கி விட்டிருக்கிறார்கள். கோவையிலிருந்து சென்னை வரை ஒரு பிரிவு, நாகப்பட்டினத்திலிருந்து சென்னை வரை ஒரு பிரிவு, தூத்துக்குடியிலிருந்து புதுக்கோட்டை வரை ஒரு பிரிவு, கன்னியாகுமரியிலிருந்து தேனி மாவட்டம் வரை ஒரு பிரிவு மற்றும் ஓசூரிலிருந்து சென்னை வரை ஒரு பிரிவு என்று ஒவ்வொரு குழுவும் நான்கு நாட்கள் தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்திருக்கிறது. ஒரு பிரிவுக்கு இரண்டு மகளிர் பொறுப்பாளர்கள்; உடன் ஒரு கலைக் குழு. இவர்கள் பிரசாரம் எந்த வகையில் அமைந்தது? கோவையிலிருந்து பிரசாரம் செய்தபடியே சென்னைக்கு வந்த பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் சக்தி கமலம்பாளிடம் கேட்டோம்.

"ஊரின் முக்கியப்

“குடும்பங்களை அழித்துவிட்டு டி.வி. பெட்டி எதற்கு?”



* சக்தி கமலாம்பாள், பானுமதி சத்தியமூர்த்தி...

பகுதியில் பிரசார வண்டியை நிறுத்தி விடுவோம். பின்பு கலைக் குழுவில் உள்ள தவில் அடிப் பவர் ஓசையை எழுப்பி ஊரைக் கூப்பிடுவார். அதன் பிறகு நாடகம் நடக் கும். குடிகார குடும்பத் தலை வனால் குடும்பம் எப்படி பாதிக் கப்படுகிறது என்பதையும், கடைசியில் அவன் குடியால் இறந்து போவதையும் விளக்குவோம். குறிப்பாக மனைவியை அவன் அடிக்கும்போது பையன் போய்த் தடுத்து, அப்பாவிடம் உதை வாங்குவது நெஞ்சை உலுக்குவதாக இருக்கும். சில ஊர்களில் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் அழுதேவிட் டார்கள்'' என்கிறார் சக்தி கமலம்மாள்.

“கூடவாசலில் நாங்கள் பிரசாரத்தை முடித்தபோது டாஸ்மாக் கடைக்குச் சென்று கொண்டிருந்த பெரியவர் ஒருவர், மனம் திருந்தி, 'உங்கள் பிரசாரத் தால் இன்று ஒரு நாளாவது குடிக்காமல் இருக்கேங்க' என்று பணத்தை எங் களிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். உத்திரமேரூரில் பல இளைஞர்கள் 'குடிக்க மாட்டோம்' என்று சத்தியம் செய்து விட்டுச் சென்றனர். இந்தச் சம்ப வங்கள் எங்களை நெகிழ வைத்துவிட்டன'' என்கிறார் பானுமதி சத்தியமூர்த்தி என்கிற மகளிர் பொறுப் பாளர்.

சிலம்புச் செல்வி என்கிற பொறுப் பாளர் ''தேனிக்கு அருகில் செம்பட்டி கிராமத்தில் ஒரு நபர் 'கூட்டணிக் கட்சியாக இருந்துக்கிட்டு எப்படி நீங் இப்படியெல்லாம் பிரசாரம் செய்ய லாம்?' என்று எங்களைச் சத்தம் போட் டார். அவரைக் காவல்துறை இழுத்துச் சென்று விட்டது. மற்றபடி எந்த ஊரிலும் எந்தப் பிரச்னையும் இல்லை. பல ஊர்களில் 'அம்மா இந்தப் பிரசாரத் தைத் தொடர்ந்து செய்யுங்கம்மா... விட்டுடாதீங்கம்மா' என்று பெண்கள் எங்கள் கைகளைப் பிடித்துக் கொண்டு



* நாடகத்தில் ஒரு காட்சி...

‘மதுவின் மூலம் வருமானம் வருகிறது என்ற வாதத்தைக் காட்டி மதுக் கடைகளை திறந்து வைப்பது சரியல்ல’

அழுதார்கள். வத்தலகுண்டில் பல இளைஞர்கள் எங்களுடனேயே வந்து அடுத்த பல கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள்'' என்றார்.

கிராம மக்கள் - அதுவும் பெண்கள் மிகவும் விழிப்பாக இருப்பதாகச் சொல்லும் பொறுப்பாளர் நிர்மலா ராஜா, '' 'அரசாங்கம், இலவசத் தொலைக் காட்சி, மலிவு விலை அரிசி என்றெல்லாம் கொடுக்கிறது. மதுக்கடை வருமானம் இருப்பதால்தானே இது சாத்தியம் ஆகிறது? குடும்பங்களை அழித்து விட்டு டீ.வி.பெட்டி எதற்கு?' என்று கலசப் பாக்கம் அருகில் ஒரு பெண் கேட்டபோது நான் பிரமித்துப் போய் விட்டேன்'' என்கிறார்.

பிரசாரத்துக்குப் போன கலைக் குழுவுக்குப் பயிற்சி அளித்தவர்கள் சந்தோஷ்-அருணா. சுமார் அறுபது பேரை ஒரு மாதத்துக்கு மேல் தைலாபுரம் பயிலரங்கத்துக்கு அழைத்து நாடகப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். மதுத் தீமையை விளக்கும் பாடல்களையும் கேஸட்டில் பதிவுசெய்து பிரசாரத்தின்போது பயன் படுத்தியிருக்கிறார்கள்.

''இந்த மது எதிர்ப்புப் பிரசாரம் இப் போதுதான் செய்யப்படுவதாக சிலர் சொல்கிறார்கள். இது தவறு! 1989-ல் கட்சி துவங்கிய மூன்றாவது மாதம், எங்கள் மகளிர் அணியினர் மதுக் கடைகளின் முன் பிரசாரம் செய்தார்கள். 2004-ல் டாஸ்மாக் கடைகளைப் பூட்டுப் போடும் போராட்டத்தில் நூற்றுக்கணக் கான மகளிர் சிறை புகுந்தார்கள். எனவே இது தொடர் போராட்டம்! மதுவின் மூலம் வருமானம் வருகிறது என்ற வாதத்தைக் காட்டி மதுக் கடைகளைத் திறந்து வைப்பது சரியல்ல. முற்றிலும் ஒழிக்க முடியாவிட்டாலும், உடனடி யாக முதலில் பார்களை ஒழிப்பது என்று கலைஞர் ஆரம்பித்தால் வரும் தலை முறை அவரை வாழ்த்தும்!'' என்கிறார் டாக்டர் ராமதாஸ்.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்



நீ... நான்... நிலா...

டைட்டில் மாதிரியே மென்மையான சினிமா. 'மனுஷங்களோட காதலையே எவ்ளோ நாள்தான் பார்ப்பீங்க... ஒரு மாறுதலுக்கு ஆவிகளோட காதலைப் பாருங்க'ன்னு கிளம்பியிருக்கார் டைரக்டர் சிவகுமார். விபத்துல இறந்து போற புதுமுக நாயகன் பரதன், தன் நினைவுகள்லயே வாழற தன் காதலி மெக்னா வாழ்க்கை நல்ல படியா அமைய முயற்சி எடுக்கறார். அவங்களை நேசிக்குற இன்னொரு நாயகனோடு சேர்த்து வைக்க என்னென்னமோ பண்றார். ஆனா முடிவு ரொம்ப வித்தியாசமானது.

ஆவியா அலையற பரதனுக்கு முதல் படத்துலயே வெயிட்டான ரோல். கனம் தெரியாம கனிவா பண்ணியிருக்கார். நாயகி மெக்னா அழகா இருக்கார்; தொடர்ந்து நீடிக்கனுமேன்னு பயமா இருக்கு. இரண்டாவது நாயகனுக்கு துடிப்பு இருக்கு. அதே நேரத்துல நடிப்பும் வருது. காமெடிக்கு கருணாஸ். அங்கங்கே சிரிக்க முடியுது. தினா இசை, ஓகே. ஆனா தேவையில்லாத இடத்துல, தேவையில்லாம வந்து பாடல்கள் இம்சை பண்ணுது. எம்.ஜி.கன்னியப்பன் வரிகள்ல 'ஊரை மறந்தோம்' நினைவுகளைக் கிளறுது. ஒளிப்பதிவு ஊடால புகுந்து தனிக்கத் தெரியாம உள்ளபடியே ஐக்கியமாகி உணர்வுகள வருடுது. காத்து கருப்பு (சீரியல்), 'அன்பே ஆருயிரே'ன்னு பல நிகழ்வுகள் இந்தப் படம் பார்க்கும் போது நம் கண் முன்னால ஊடாடுது. இருந்தாலும் ரசிக்க முடியுது. ஆவி கதைங்கிறதால கண்ணுக்குத் தெரியற வரை காதுல பூ சுத்துறாங்க. நாம எடுத்து எடுத்து விடறோம்... ம்ஹூம்... அவங்க சுத்திக்கிட்டே இருக்காங்க. திகிலே இல்லாம காதல் நிரம்பி வழிய வழிய ஒரு கதை தந்ததுக்கு, அதுவும் வித்தியாசமா தந்ததுக்கு டைரக்டர் சிவகுமார் தோள்ல தட்டலாம். கூடவே சொல்லப்படாத கதைகள் எவ்ளோ இருக்கு. அதுலயும் கவனம் செலுத்தலாமேன்னு காதுல ரகசியம்(!) சொல்லலாம்.

- லஜ்ஜாவதி

+2க்குப் பிறகு...

மைய தொழில்நுட்பக் கல்லூரி

சென்ட்ரல் பாலிடெக்னிக் என்றால் எல்லோருக்கும் பரவலாகத் தெரியும். தமிழகத்தில் இருபத்திரண்டு இடங்களில் பாலிடெக்னிக்குகள் உள்ளன. சென்னையில் இரண்டு இடங்களில் இருக்கின்றன. ஒன்று தரமணியிலுள்ள மைய தொழில்நுட்பக் கல்லூரி. மற்றொன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரி. இந்த இருவகைக் கல்லூரிகளிலும் பொதுவாக உள்ள ஒரே படிப்பு கம்ப்யூட்டர் சயின்ஸ்தான்.

தரமணி பாலிடெக்னிக்கில், 'சிவில் இன்ஜினியரிங்,' 'மெக்கானிக்கல் இன்ஜினியரிங்,' 'எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங்,' 'எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங்,' 'கம்ப்யூட்டர் சயின்ஸ் அண்ட் இன்ஜினியரிங்' ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன.

அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் மெகோட்ரானிக்ஸ், தகவல் தொழில்நுட்பம் ஆகிய படிப்புகள் கற்றுத் தரப்படுகின்றன.

மூன்றாண்டு படிப்புகள் இவை. பத்தாம் வகுப்பு படித்திருந்தால் போதும். மேத்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி ஆகிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ப்ளஸ் டூ முடித்தவர்கள் இரண்டாம் வருடப் படிப்பில் சேர்ந்து கொள்ளலாம். 'லேட்டரல் என்ட்ரி' எனப்படும் இந்த வகை அட்மிஷனுக்காக, பத்து சதவீத இடங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் (பாலிடெக்னிக்கில் டிப்ளோமா முடித்தவர்கள் இதேபோன்ற முறையில் பொறியியல் பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டில் நேரடியாகச் சேர முடியும்).

சென்னை தரமணியில் உள்ள பாலிடெக்னிக்கில் மூன்றரை வருட சான்ட்விச் கோர்ஸ்களும் உள்ளன. அவை மெக்கானிக்கல் இன்ஜினியரிங் மற்றும் ஃபிஷரிங் தொழில்நுட்பம் ஆகியவை. இவற்றில் தொழிற்சாலைகளுக்கு நேரடியாகவே அழைத்துச் சென்று நடைமுறைப் பாடங்கள் நடைபெறுவதால் அனுபவம் கூடுகிறது. செயல்பாடு பிடித்துப் போனால் அந்தத் தொழிற்சாலையிலேயே வேலையும் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. ஆனால், மற்ற டிப்ளோமா படிப்புகளைவிட அரை வருடம் அதிகமாகப் படிக்க வேண்டியிருக்கும்.


பாலிடெக்னிக்குகளை நடத்தும் தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ், வேறு நான்கு சிறப்புக் கல்வி நிறுவனங்களும் செயல்படுகின்றன. அவை 'இன்ஸ்டிடியூட் ஆஃப் லெதர் டெக்னாலஜி,' 'இன்ஸ்டிடியூட் ஆஃப் கெமிக்கல் டெக்னாலஜி,' 'இன்ஸ்டிடியூட் ஆஃப் ப்ரிண்டிங் டெக்னாலஜி,' 'இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்ஸ்டைல் டெக்னாலஜி.'



ஜி.எஸ்.எஸ்.

சித்த மருத்துவம்

'பேச்சுலர் ஆஃப் சித்தா மெடிசன் அண்ட் சர்ஜரி' என்ற பட்டப் படிப்பு தமிழகத்தில் அரசு மற்றும் சில தனியார் கல்லூரிகளால் நடத்தப்படுகிறது. இந்தப் பட்டப்படிப்பைப் படித்தவர்கள் தமிழகத்தில்தான் ப்ராக்டீஸ் செய்ய முடியும். ஏனென்றால்



லேட்டரல் என்ட்ரீ என்றால் என்ன?

இங்கு மட்டும்தான் இதற்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

பல சித்த மருத்துவக் குறிப்புகள் தமிழ்ப் பாடல்களாக உள்ளதால் பத்தாம் வகுப்பிலோ அல்லது பன்னிரண்டாம் வகுப்பிலோ தமிழைப் பாடமாகப் படித் திருக்க வேண்டும். இந்தப் பட்டப் படிப்பை சென்னை அரும்பாக்கத்திலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரியிலோ, பாளையங்கோட்டையிலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரியிலோ படிக்கலாம். சில தனியார் கல்லூரிகளும் உள்ளன.

ஆயுர்வேதம்

'பேச்சுலர் ஆஃப் ஆயுர்வேதிக் மெடிசன் அண்ட் சர்ஜரி' என்ற பட்டப்படிப்பு இருக்கிறது. மூலிகைகள் குறித்த ஆராய்ச்சிகள் உலக அளவில் நடக்கின்றன. பன்னாட்டு மருந்து நிறுவனங்களும் இந்த வகை ஆராய்ச்சிகளுக்குப் பெரும் தொகையைச் செலவழிக்கின்றன. எனவே ஆயுர்வேதத்துக்குப் புது கவனம் கிடைத்து வருகிறது. பெரியார் நகர் (சென்னை), சூலூர் (கோயம்புத்தூர்), ஸ்ரீ பெரும்புதூர், நஸ்ரத்பேட்டை, சன்னாசிப்பட்டி (திருச்சி) ஆகிய இடங்களில் தனியார் கல்லூரிகள் இந்தப் பட்டப்படிப்பை வழங்குகின்றன.

ஹோமியோபதி

'பேச்சிலர் ஆஃப் ஹோமியோபதி மெடிசன் அண்ட் சர்ஜரி' என்ற இந்தப் பட்டப்படிப்பை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம் - மதுரை வழங்குகிறது. போரூர், மேற்குத் தாம்பரம் (சென்னை), குகை (சேலம்), நாமக்கல், ஆத்தூர் மற்றும் குலசேகரம் (கன்னியாகுமரி), காந்திபுரம் மற்றும் சூலூர் (கோயம்புத்தூர்) போன்ற பகுதிகளில், தனியார் சுயநிதிக் கல்லூரிகள் ஹோமியோபதியில் பட்டப்படிப்பை அளிக்கின்றன.

(படிப்புகள் தொடரும்)



கல்கி



2007 ஜூன் 10
சர்வஜித் வைகாசி 27
மலர் : 65
இதழ் : 45

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்


புதிய ஜமீன்தார்கள்!


நந்தி கிராமில் டாடா நிறுவனத்துக்கு விவசாய நிலங்களை ஒதுக்கித் தந்து, பலத்த எதிர்ப்புக்கு உள்ளாயிற்று மேற்கு வங்க அரசு. கலவரம், உயிர்ச் சேதம் என்று பிரச்னை வளர்ந்து, கடைசியில் திட்டம் ரத்தாயிற்று.

உ.பி.யில் அதே விதமான நில ஒதுக்கீட்டை ரிலையன்ஸ் நிறுவனத்துக்காக முலாயம்சிங் அரசு செய்திருந்தது. மாயாவதி ஆட்சிக்கு வந்ததும் அதை ரத்து செய்துவிட்டு, "தொழிலதிபர்கள் வேண்டுமானால் சந்தை விலைக்கு நிலத்தைப் பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளட்டும்; அரசு கையகப்படுத்தி சலுகை விலையில் அவர்களிடம் விற்காது" என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

ஆனால், தமிழ்நாட்டில் விஷயம் நேர்மாறாக இருக்கிறது. இராணிப்பேட்டையில் இரண்டு கொரிய நிறுவனங்களுக்கு ஆற்காடு வீராசாமி நூறு ஏக்கர் நிலம் ஒதுக்குவதாக வாக்களித்திருக்கிறார். இதற்காக அரசு மக்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தும்! காஞ்சிபுரம் அருகே ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவ, ஒரு துபாய் நிறுவனம் ஒன்று, 350 ஏக்கர் நிலம் வாங்க தமிழக அரசு அனுமதித்துள்ளது!

ஐம்பதாயிரம் பேருக்கு இந்த மண்டலத்தில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்கிறார்கள். ஆனால், அதற்கு 350 ஏக்கர் நிலம் என்பது மிக மிக அதிகம். ஐ.டி. சார்ந்த தொழிலகங்கள் ஐம்பது ஏக்கர் நிலத்தில் மட்டுமே





அமைக்கப்படும் என்றும் மீதி நிலம் வாழிடம், பள்ளி, ஷாப்பிங் மால் போன்றவற்றுக்கு என்றும் விவரிக்கிறார்கள்!

பெரிய தொழிலதிபர்கள் சலுகை விலையில் அரசிடமிருந்து நிலம் பெறும் ஏற்பாட்டை இரு தரப்பினரும் துஷ்பிரயோகம் செய்வது வழக்கமாகிவிட்டது. அதிகார வர்க்கம் இலஞ்ச - ஊழலில் ஈடுபடுகிறது. தொழிலதிபர்களோ, தேவைக்கதிகமான நிலத்தை வாங்கிக்கொண்டு, பிற்காலத்தில் அதன் விலை உயரும்போது, லாபம் சம்பாதிக்கிறார்கள். நிலத்தின் விலை கட்டுக்கடங்காமல் உயரவும் இவர்கள் காரணமாகிறார்கள். இது ஏழைகளையும் சராசரி மக்களையும்தான் வதைக்கிறது.

'உணவு உற்பத்தி, விவசாயப் பெருக்கம் நோக்கி அரசின் திட்டப் பணிகள் திசை திரும்ப வேண்டும்' என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேசிய தமிழக முதல்வர், தமிழகத்தில் என்ன செய்கிறார்...? விவசாயம் சார்ந்த பகுதியில், அதற்குச் சம்பந்தமே இல்லாத ஒரு தொழில்நுட்ப நிறுவனம் கிளை பரப்ப வழி செய்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுக்குப் பலமான அஸ்திவாரம் அமைக்கிறார்.

ஒரு குடிசை அமைத்துக்கொள்ளக்கூட நிலமின்றி அவதிப்படும் இலட்சக்கணக்கானோர் வாழும் நாடு இது. இங்கு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புறம்போக்கு நிலம் பொதுமக்களின் சொத்து. அதைக் கண்ணை மூடிக்கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிலதிபர்களுக்கு வாரி வழங்குவது மக்களுக்குச் செய்யும் துரோகம்! தனியார் நிலமாயினும் பெரிய தொழிலதிபர்கள் 300 ஏக்கர் 500 ஏக்கர் என்று தேவைக்கு அதிகமாக வாங்கி, வளைத்துப் போட அனுமதிப்பது பெரும் அநீதி!

பெரிய தொழிலதிபர்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஏராளமான வேறு பல சலுகைகளையும் பெறுகிறார்கள். மொத்தத்தில், விவசாய ஜமீன்தாரி முறையையும் பெரிய மிராசுதாரர்களையும் ஒழிக்கப் போராடி சட்டமும் இயற்றிய நமது ஆட்சியாளர்கள், இன்றைக்குப் புதிய சலுகைகள் மூலம் நவீன ஜமீன்தாரி தொழிலதிபர்களைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்! ●



* 'வாழ்த்துகள்' படத்தின் இசை சேர்ப்புப் பணியின்போது சீமான்...

"நான் நெருப்பு

'தம்பி'யில் தீப்பந்தத்தை ஏந்தி வந்த சீமான் கைகளில், இப்போது கொத்துக் கொத்தாகப் பூக்கள்! உறவுகளின் உன்னதத்தை எடுத்துச் சொல்வதற்காக 'வாழ்த்துகள்' என்கிற ஒரு மென்மையான படத்தை ஆரம்பித்திருக்கிறார். மாதவன், பாவனா நடிக்கும் இப் படத்தைப் பற்றி நம்மிடம் பகிர்ந்து கொண்டார் சீமான்.

"ஒருமுறை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவருக்கு இல்லாத வசதி வாய்ப்புகளா? கூட்டுக் குடும்பமாக அவர் வாழ்ந்ததைப் பார்த்தபோது அந்த அமைப்பில் உள்ள சந்தோஷங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. எழுத்தாளர் சுப.வீரபாண்டியன் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒன்று கூடுகிறார்கள். அந்த நாளை குதூகலமாகச் செலவழிக்கிறார்கள். இந்தக் குடும்பங்களில் சாத்தியப்படக்கூடிய விஷயங்கள் ஏன் எல்லாக் குடும்பங்களிலும் நிகழ்வதில்லை? 'பொருளீட்ட மட்டும் நாம் வாழவில்லை; தன்னைப்போல் பிறரையும் நேசிக்க வேண்டும்' என்பதுதான் படத்தின் மையக் கரு''என்கிறார்.

'தம்பியில் முழு திருப்தி கிடைத்ததா?' என்று கேட்டால், ''பொருளாதார நெருக்கடி ஏதும் இல்லாமல் இருந்திருந்தால் நிச்சயம் 'தம்பி' மேலும் அழுத்தமான, பிரம்மாண்டமான படமாக வந்திருக்கும். சீமான் படம் என்றால் கதாநாயகன் எப்போதும் சிவப்புக் கண்களோடு வெறித்தனமாக அலைய வேண்டும் என்கிற கோட்பாட்டை முறியடிக்கத்தான், இப்போது கவிதையாக ஒரு படம் எடுக்க வந்திருக்கிறேன். உங்கள்

"நல்ல சிந்தனைகள் செல்லுபடியாகாது என்று சொல்பவர்களுக்கு எங்கள் படங்களின் வெற்றியை பதிலாகத் தருகிறோம்!"

போல..."

அலைவரிசையில் உங்கள் காதுக்கு அருகே வந்து கதை சொல்லும் பாணி படத்தில் இருக்கும். யுவன்ஷங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் அனைத்தும் மென்மையாக உருவாக்கப்பட்டுள்ளன. கவர்ச்சி மீது துளியும் அக்கறை இல்லாதவராக கதாநாயகி வேண்டும் என்பதற்காக பாவனாவைத் தேர்வு செய்திருக்கிறேன்'' என்கிற சீமான்,

''படக் குழுவில் எல்லோரும் சுத்தமான தமிழில் உரையாடுகிறார்கள் நாயகன், நாயகிகள் உள்பட'' என்கிறார்.

''நான் நெருப்புபோல. எல்லோரையும் என் இயல்புக்கு மாற்றிவிடுவேன். தம்பி படப்பிடிப்பின்போது மாதவனுக்கு தமிழ் மொழி மீதான மரியாதையை ஏற்படுத்தினேன். பூஜா நிறைய தமிழ் கற்றுக்கொண்டார். 'வாழ்த்துகளி'லும் பாவனாவை முதன்முறையாகச் சொந்தக் குரலில் பேச வைக்கப் போகிறேன்'' என்கிறார்.

தம் சொந்தக் கருத்துகளைத் திரையில் பதிவு செய்வதற்குத்தான் சீமான் பிரியப்படுகிறார். ''நான், பாலா, சேரன், தங்கர்பச்சான் ஆகியோர் தமிழ் சினிமாவில் ஒரு புரட்சி செய்து கொண்டிருக்கிறோம். எங்கள் வழிக்கு சினிமாவையும் ரசிகனையும் திருப்பிக் கொண்டிருக்கிறோம். நல்ல சிந்தனைகள் செல்லுபடியாகாது என்று சொல்பவர்களுக்கு எங்கள் படங்களின் வெற்றியையே பதிலாகத் தருகிறோம். 'வாழ்த்துகள்' முடிந்து ஒரு பெரிய திட்டத்துக்கு என்னைத் தயார்படுத்தி வருகிறேன். கோபம், பகலவன், புரட்சி ஆகிய எனது அடுத்த படங்கள் என்னுடைய இன்னொரு பரிமாணத்தைக் காண்பிக்கும்.''

- ச.ந.கண்ணன்





"தலைவரே! இந்த சம்மருக்கு ஓய்வு எடுக்க கோடை வாசஸ்தலம் எதுக்கும் போகலையா?"


"எனக்கு மக்கள் நலம்தான் முக்கியம். ஒரு வார போராட்டத்துக்காக ஊட்டிக்கும், எட்டு நாள் போராட்டத்துக்காக கொடைக்கானலுக்கும் அவசரமாப் போக வேண்டி இருக்கு!" - கு.அருணாசலம்

ஜில் போராட்டம்

"ஏன் சிஸ்டர் திடீர்னு எனக்கு ஆபரேஷன் வேண்டாம்னு டாக்டர் சொல்லிட்டார்?"

"டாக்டருக்கு திடீர்னு வேற இடத்தில் இருந்து பணம் வந்துட்டதாம்!"

- எம்.அசோக்ராஜா





"ஐயோ... இன்ஸ்பெக்டர் சார்... நம்ப போலீஸ் ஸ்டேஷன்லே வெடிகுண்டு வெச்சிருக்காங்களாம்."

"எங்கேய்யா..."

"இன்னும் அஞ்சு நிமிஷத்துல தெரியும்னு சொன்னான்."

- கே.ராஜகோபால்


"என்னப்பா இது! டீயில ஈ கிடக்கு!"

"நீங்க கவலைப்படாதீங்க சார். அதை டேபிளுக்கு அடியில இருக்கற பல்லி வந்து சாப்பிட்டுட்டுப் போயிடும்."

- மா.கண்ணன்




சுஜாதா



எங்கே போனாள்?

இந்தக் காலத்து இளம்பெண்கள் நேரத்தில் வீட்டுக்கு வரவில்லை என்றால் தாய்மார்கள் என்னவெல்லாம் கவலைப் படுவார்கள். பஸ் கிடைக்கவில்லையோ, பர்ஸைத் தொலைத்துவிட்டாளோ! அல்லது எதிர்வீட்டுப் பையன் ஒருத்தன் இங்கேயே பார்த்துக் கொண்டிருப்பானே... அவன் புதிதாக ஸ்கூட்டர் வாங்கியிருக்கிறான்... அழைத்துச் சென்று விட்டானோ... இவள் வீட்டுக்கு வருவதற்குள் எத்தனை மன உளைச்சல்... இந்தக் காலத்து அன்னையரின் கவலைகள் இவை. கண்ணன் வாழ்ந்த அந்தக் காலத்தில் மதுராபுரியில் அன்னையரின் கவலைகள் வேறு விதமானவை. பெரியாழ்வாரைக் கேட்டால் சொல்வார்.

ஒரு தாய் தன் மகளைத் தேடுகிறாள். இந்தப் பெண் எங்கே போய்த் தொலைந்தாள்? வீடே வெறிச்சென்றிருக்கிறதே. எல்லாக் கதவுகளையும் திறந்து போட்டுவிட்டு எங்கே போனாளோ? யார் பின்னே சென்றாளோ! அப்படித் தன்னை அறியாமல் பின்னே செல்லும்படி இவளைக் கவர யாரால்



முடியும்? மல்லர்களோடு ஒரு குழந்தை சண்டைபோட்டு ஜெயித்ததாக மதுரா புரியில் பேசிக்கொள்கிறார்களே... அந்தக் குழந்தையைத் தேடி அங்கேதான் போயிருக்க வேண்டும்.

'நல்லது ஓர் தாமரைப்பொய்கை
நாண் மலர் மேல் பனி சோர,
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு,
அழகழிந்தால் ஒத்ததாலோ!
இல்லம் வெறியோடிற்றாலோ!
என் மகளை எங்கும் காணேன்;
மல்லரை அட்டவன் பின் போய்
மதுரைப் புறம் புக்காள் கொல்லோ?'

(தாது - உள்ளிதழ், மொட்டு, அட்டவன் - வென்றவன்)

தாமரைப் பொய்கையில் மலர்களின் மேல் பனி படர்ந்து, அல்லி மலரும் மொட்டுகளும் உதிர்ந்து அழகு இழந்ததுபோல வீடு வெறிச்சோடிப் போயிற்று. என் மகளை எங்கும் காணவில்லை. மல்லர்களை ஜெயித்தவன் பின்தொடர்ந்து மதுரைக்குப் போய்விட்டாளோ!

பெரியாழ்வார் தன் மகள் ஆண்டாளை நினைத்துக்கூட இந்தப் பாடலைப் பாடியிருக்கலாம்.

(படிக்கலாம்)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி அறிவிப்பு 2007



தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம் என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

விதிமுறைகள் :

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால் அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. - ஜெராக்ஸ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணைய தளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக் கூடாது.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP. ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32


- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 5 ஆண்டு மலரில் வெளியாகும். படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

முதல் பரிசு ரூ.10.000/- இரண்டாம் பரிசு ரூ.7.500/-
மூன்றாம் பரிசு ரூ.5.000/-



"ஒரு நோய்க்கு சிகிச்சை செய்யும்போது, உள்ளே மறைந்திருக்கும் மற்ற நோய்களையும் குணமாக்குவதுதான் அக்குபஞ்சரின் சிறப்பு!"



அர்ச்சனாவுக்கு இன்றைக்கெல்லாம் பார்த்தால் முப்பது வயதுதான் இருக்கும். ஆனால், அடிக்கடி நோய் நொடி என்று சதா டாக்டரிடம் சென்றுகொண்டிருப்பார். கொத்துக் கொத்தாக மாத்திரைகள் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். ஒரு நாள் அவருக்கு பித்தப்பையில் கல் இருக்கிறதென்றும், அதனால் பித்தப்பையை எடுத்துவிட வேண்டும் என்றும் டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிய அர்ச்சனாவுக்கு, பக்கத்து வீட்டு அலுமேலு மாமிதான் மாற்று மருத்துவ முறையான அக்குபஞ்சரில் தீர்வு இருக்க வாய்ப்புண்டு என்று கூறி, அவரை அக்குபஞ்சர் மருத்துவரிடம் அழைத்துச் சென்றிருக்கிறார். அக்குபஞ்சர் ட்ரீட்மெண்ட் ஆரம்பித்த இரண்டே மாதத்தில் அர்ச்சனாவின் பித்தப்பை எடுக்கப்படாமலேயே கற்கள் காணாமல் போயிருக்கின்றன.

''மாற்று மருத்துவ முறைகளுள் பாரம்பரியமான ஒன்று அக்குபஞ்சர் சிகிச்சை. நம் பகத்தன்மை வாய்ந்தது. பல நோய்களுக்கு அக்குபஞ்சரில் நல்ல தீர்வு உண்டு'' என்கிறார் சீனாவிலுள்ள ஷாங்காய் பல்கலைக் கழகத்தில் அக்குபஞ்சர் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவரான டாக்டர் எம்.என். சங்கர். தொடர்ந்து அவரிடம் பேசியதிலிருந்து...

''நம் உடலில் ஜீரண மண்டலம், ரத்த ஓட்ட மண்டலம் போல சக்தி ரேகை மண்டலம் என்றும் ஒன்று உண்டு. இந்த மண்டலத்தில், சக்தி ஓட்டத்தின் தடையுள்ள இடத்தைக் கண்டறிந்து, உடலில் அதற்குரிய புள்ளியைத் தூண்டும்போது, சக்தி ஓட்டம் சீராகி உடல் நல்ல நிலைக்குத் திரும்புகிறது. இதுதான் அக்குபஞ்சர் மருத்துவத்தின் அடிப்படை.''

இம் மருத்துவ முறையில் நோய்களைக் கண்டறிய என்ன விதமான டெஸ்ட்டுகள் எடுக்கப்படுகின்றன?

''நாடிப் பரிசோதனையைத் தவிர வேறெந்த டெஸ்ட்டுகளும் தேவையில்லை. இரண்டு கைகளிலும் உள்ள பன்னிரண்டு நாடிகளைக் கவனித்தாலே பிரச்னைகளைத் துல்லியமாக உணரலாம்.''

அக்குபஞ்சரில் ஊசி கொண்டு எப்

ஆரோக்கியம் தரும் அக்குபஞ்சர்...


படிச் சிகிச்சையளிக்கப்படுகிறது?

''இந்த ஊசிகள் எஃகு, வெள்ளி, தாமிரம் போன்றவற்றால் தயாரிக்கப்படுபவை. இவை சமயத்தில் தங்கத்தால்கூட தயாரிக்கப்படுகின்றன. இந்த ஊசிகளை ஒருமுறை பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறிந்துவிட வேண்டும். மின்னிணைப்பு கருவிகள் மூலம்கூட இதனை உடம்பில் செலுத்தலாம். சதை, எலும்பு, நரம்பு என்று எந்த ஒரு பாகத்துக்கும் சேதமின்றி, இந்த ஊசிகள் நோயாளிகளின் உடம்பில் உள்ள நாளங்களில் பதிய வைக்கப்படுகின்றன. இவை உடல் உணர்வுகளை மிக நுட்பமாகத் தூண்டி விடுகின்றன. ஊசி வழியே மின் காந்த அலைகள் ஊடுருவிச் சென்று அதிர்வுகளை உண்டாக்கி, பிரச்னைக்குரிய புள்ளி தூண்டப்பட்டு நோய் குணமாக்கப்படுகிறது.''

இம் மருத்துவ முறையில் குணமான நோய், மீண்டும் வர வாய்ப்புண்டு என்கிறார்களே?

''இது தவறான கருத்து. ஒரு நோய்க்கு சிகிச்சை செய்யும்போது உள்ளே மறைந்திருக்கும் மற்ற நோய்களையும் குணமாக்குவதுதான் அக்குபஞ்சரின் சிறப்பே. ஒரு பிரச்னைக்கு மருத்துவம் பார்க்கும்போதே, இது எப்படி ஆரம்பித்தது என்பதில் தொடங்கி, வேர் வரை அக்குபஞ்சரில் சிகிச்சையளிக்கப்படுகிறது. எந்த வித பக்க விளைவுகளும் இருக்காது. அதனால்தான் மாற்று மருத்துவ முறைகளில் அக்குபஞ்சர் இன்றைக்குச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றது.''

* டாக்டர் எம்.என்.சங்கர்



அக்குபஞ்சரின் பூர்வீகம் இந்தியா என்று சொல்லப்படுகிறதே...இது எந்தளவுக்கு உண்மை?

''நூறு சதவீதம் உண்மை. நமது பொக்கிஷம் அக்குபஞ்சர். ஆனால் நாமே அதனை சரிவர மதிக்காமல் விட்டதுதான் சோகம்.

ஆனால், சீனர்கள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். இந்தியாவில் அந்தக் காலத்திலேயே அக்குபஞ்சரின் அடிப்படையில்தான் பல விஷயங்களும் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒற்றைத் தலைவலி வராமலிருக்க நெற்றிச் சுட்டி அணிவிக்கப்பட்டிருக்கிறது. கண் நரம்புகளைத் தூண்டுவதற்குத் தோடும், கழுத்தில் அணிவிக்கப்படும் நகைகள் மூளை நரம்புகளைத் தூண்டவும், வளையல் ஹார்மோன் குறைபாடுகளைக் களையவும், மெட்டி கர்ப்பப்பையை பலப்படுத்தவுமே அணிவிக்கப்பட்டிருக்கின்றன. முன்புபோல் இல்லாமல் இப்போது அக்குபஞ்சர் மருத்துவம் நம்மவர்களுக்குத் தெரிய ஆரம்பித்திருக்கிறது என்பதே ஆறுதலான விஷயம்தான்.''

- நிரஞ்சனா

குழந்தை

பட்டுக்கோட்டை அறந்தா

அந்த நகராட்சித் தொடக்கப் பள்ளியின் காலை நேர ஆயத்த மணி ஒலித்தது.

பள்ளித் திடலில் மாணவ - மாணவியர் அவரவர் வகுப்புவாரியாக, வரிசையாக வந்து நின்றனர்.

தலைமை ஆசிரியர் தேசியக் கொடி ஏற்றியதும், அனைவரும் கொடி வணக்கம் செய்தனர்.

தேசிய கீதம் பாடினர் ஐந்தாம் வகுப்பின் மூன்று மாணவியர்.

உடற்பயிற்சி ஆசிரியரின் கவனம் ஒவ்வொரு வரிசையாகச் சென்றது. நான்காம் வகுப்பு ஆண்கள் வரிசையில் மூன்றாவதாக நின்றிருந்த ரவி, தன் முன்னால் நின்றிருந்த பாலுவை கிள்ளியதையும், பதிலுக்கு பாலுவும் திரும்பி ரவியைக் கிள்ளியதையும் அவர் கவனித்திருந்தார்.

தேசியகீதம் முடிந்து தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுத்தவுடன் எல்லோரும் அவரவர் வகுப்புக்குச் சென்றனர்.

ரவியையும் பாலுவையும் அழைத்தார் உடற்பயிற்சி ஆசிரியர்.

''தேசியகீதம் பாடும்போது நீங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் கிள்ளி விளையாடுறீங்களா... இனிமேல் இது மாதிரி செய்ய மாட்டேன்னு நூறு தோப்புக் கரணம் போடுங்கடா...''

ரவியும் பாலுவும் ஆசிரியர் சொற்படி செய்தனர்.

'எக் காரணம் கொண்டும் தேசிய கீதம் பாடும்போது, நாம் வேறு எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது. தேசிய கீதத்தை அவமதிப்பது நம் தாயையும், தாய் நாட்டையும், நம் தேசத் தலைவர்களையும் அவமதிப்பது போலாகும்' என்ற அறிவுறுத்தலுக்குப் பிறகு ரவியும் பாலுவும் வகுப்புக்குத் திரும்பினர்.

வகுப்பு முடிந்து ரவி வீட்டுக்கு வந்து கொண்டிருந்த வழியில், டீக்கடை பக்கத்தில் ஒரே கூட்டமும் கூச்சலுமாக இருந்தது. என்னவாக இருக்கும் என்ற ஆர்வமிகுதியில் ரவி கூட்டத்துக்குள் ஊடுருவினான்.

அங்கே சுமார் ஐம்பது - ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்த இடம் பூராவும் தேயிலை வாசத்துக்குப் பதில் சாராய வாசம் நாசியைத் துளைத்தது.

'கரணம் தப்பினால் மரணம்' என்பதுபோல இருந்தது அவர்களின் வாதப் பிரதிவாதங்கள்.

ஏறக்குறைய இருவருமே சரிசமமாகத் தரங்கெட்ட வார்த்தைகளைப் பிரயோகித்தனர்.



மனசு!

அவர்களில் ஒருவர் ஆளுங்கட்சிக்காரர் என்பதும், மற்றொருவர் எதிர்க்கட்சிக்காரர் என்பதும் அவர்கள் உடுத்தியிருந்த கட்சிக் கரை வேட்டி காட்டிக்கொடுத்தது.

'யார் தலைவர் உசத்தி?' இதுதான் அந்தக் கலகத்துக்குக் காரணம். ஆனால், ரவிக்கு மட்டும் என்ன காரணமென விளங்கவில்லை. கட்சி, தலைவர் இதெல்லாம்.... அவனுக்குப் புரியாத அரசியல் மொழி.

வாய்ச் சண்டை போட்டுக்கொள்ளும் அவர்கள் இருவரும் கைச்சண்டை போடாமல் அமைதியாவது நல்லது என விரும்பினான் ரவி.

காலையில் உடற்பயிற்சி ஆசிரியர் அறிவுறுத்தியது அவனுக்குள் பொறி தட்டியது. ஒரு திடீர் உந்துதலில் சட்டென்று தேசிய கீதம் பாட ஆரம்பித்தான்.



'ஜன கண
மன அதிநாயக ஜய
ஹே
பாரத பாக்ய விதாதா'

கூடியிருந்த அனைவரும் தேசியகீதம் பாடும் ரவியை ஆச்சரியமாகப் பார்த்தனர். யாரையும் பொருட்படுத்தாது அவன் நீர்க்கமான குரலில் பாடிக் கொண்டிருந்தான்.

'பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்சல வங்கா'

'தேசியகீதத்துக்கு அவர்கள் இருவரும் மரியாதை செய்தாக வேண்டும்' என்ற எண்ணம்தான் அவனுக்கு அடிநாதமாக இருந்தது.

''டேய்! எங்க தலைவனோட கால் தூசுக்கு சமம்டா உங்க தலைவன்...''

''அடப்போடா... என் தலைவன் ஒருத்தனுக்கு உன் அம்புட்டுக் கட்சியும் சமம்டா...''

அவர்களின் உரையாடலில் இந்த வாக்கியங்களில்தான் கொஞ்சம் பண்பாடு காணப்பட்டது.

'விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா'

அவர்களின் பேச்சு முற்றிக் கைகலப்பாக மாறியது. கட்டிப் புரண்டு தெருவில் உருண்டனர். ரவி பாடுவதை நிறுத்தவில்லை. 'கண்டிப்பாக தேசியகீதத்துக்கு மரியாதை கொடுப்பார்கள்' ஏதோ அதீத நம்பிக்கையில் பாடிக் கொண்டிருந்தான்.

'தவசுப நாமே ஜாகே
தபசுப ஆஸிஸ மாகே
காஹே தவஜய காதா'

அந்த இருவரில் ஒருவர் ஓடிப்போய் விறகுக் கடை வாசலில் கிடந்த உருட்டுக் கட்டை ஒன்றை எடுத்துவந்து, தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து அடுத்தவரின் மண்டையில் அடித்தார். கபாலம் தெறித்து குருதி சிதறியதில் ரவியின் வெள்ளைச் சட்டையில் சிவப்பு சிவப்பாய்...

'ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே'

அனிச்சையாகப் பாடி முடித்த ரவி தன் பள்ளிச் சீருடையைக் குனிந்து பார்த்தான். அதில் படிந்திருந்த இரத்தத் துளிகள் அவனுக்கு வியப்புக் குறிகளாகவும் வினாக் குறிகளாகவும் தெரிந்தன. அதில் ஒரு துளி மட்டும் நம் நாட்டின் வரைபடம் போலிருந்தது... ○

பற்பசை பயங்கரம்!

"உலகில் எல்லாவற்றிலும் பிரச்னை இருக்கலாம். என்னிடம் மட்டும் ஏன் இருக்கக் கூடாது!' என்று பல்லை இளிக்கிறது பற்பசை! இதில் கொஞ்சூண்டு விஷம் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் சீனாவிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பற்பசைகளை Food and Drug administration அமைப்பு பரிசோதனை செய்து பார்த்த போது இந்த உண்மை வெளிப்பட்டிருக்கிறது!

Diethylene glycol - இதுதான் அந்த சமாசாரத்தின் பெயர். மேட் இன் சீனா என்னும் கவர்ச்சிகரமான முத்திரையுடன் வலம் வரும் சில பற்பசைகளில் இந்த Diethylene glycol கலக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பற்பசை உலகெங்கும் உலா வந்துகொண்டிருக்கிறது.

கவனிக்கப்படவேண்டிய அம்சம், இவை குழந்தைகளுக்கான பற்பசை இவற்றைத் தடை செய்ய FDA உத்தரவிட்டுள்ளது. அங்காடிகளிலிருந்து நூற்றுக் கணக்கான பற்பசைகளைப் பறிமுதல் செய்து, மொத்தமாக அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற வருடம் இப்படித்தான். பனாமாவில் இருமல், ஜலதோஷத்துக்காக விற்கப்படும் மருந்து பாட்டில் ஒன்றில் இந்த (Diethylene glycol) குட்டிச்சாத்தான் ஊடுருவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மொத்தம் 2,60,000 பாட்டில்கள் பளபளவென்று தயாராகிவிட்டன. கொஞ்சம் கொஞ்சமாக மருந்துக் கடைகளுக்கு அனுப்ப ஆரம்பித்துவிட்டார்கள். திடீரென்று யாருக்கோ எங்கோ பொறி தட்டியிருக்கிறது. ஒரு சாம்பிள் பாட்டிலைக் கொண்டுபோய் பரிசோதித்திருக்கிறார்கள். 'ஐயோ, கடைகளுக்கு அனுப்ப வேண்டாம்' என்று அவர்கள் அலறுவதற்குள் நூறு பேர் குட்டிச்சாத்தானை உட்கொண்டு இறந்துவிட்டார்கள்! அப்

என்பதுதான். மொத்தம் ஐந்து வண்ணங்களில், ஐந்து ருசிகளில் (சாக்லேட், ஐஸ்க்ரீமுக்கு அடுத்து குழந்தைகள் அதிகம் விரும்பிச் சாப்பிடும் ஐட்டம் டூத்பேஸ்ட், தெரியும்தானே?) சந்தைகளில் இறக்குகிறார்கள். அவற்றுள் ஒன்று அச்சு அசல் பபுள்கம் சுவைக்கும் உணர்வை ஏற்படுத்துமாம்!

'எக்ஸல்', 'மிஸ்டர் கூல்'-அந்தப் புகழ்பெற்ற சீன தயாரிப்புகள் தான் இவை. நல்லவேளை, இது வரைக்கும் யாருக்கும் பெரிதாக எந்த அபாயமும் ஏற்படவில்லை. குட்டி பிரஷ்ஷில் வழிய வழிய பிதுக்கிக்கொண்டு வழக்கம்போல் குழந்தைகள் சுவைத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனாலும், படி எதுவும் ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பற்பசைத் தடை என்கிறது FDA அமைப்பு.

அமெரிக்காவுக்குப் பற்பசை விற்கும் நாடுகளில் சீனா இரண்டாவது இடத்தில் இருக்கிறது. பல மில்லியன் டாலர் வர்த்தகம் கொழிக்கிறது.

எல்லாம் சரி, இந்தக் குட்டிச்சாத்தானை விட்டொழித்துவிட்டால் என்ன? அத்தனை சுலபத்தில் அதைச் செய்ய முடியாது என்கிறார்கள் சீன நிறுவனத்தினர். காரணம், விலை குறைச்சல். அதைச் சேர்க்காவிட்டால், அதற்குப் பதில் க்ளிசரின் கலக்க வேண்டியிருக்கும். விலை ஜாஸ்தி. கட்டுப்படியாகாது.

'அடப்பாவிகளா! இப்படிப் பேரை ரிப்பேர் ஆக்கிவிட்டீர்களே' என்று

விஜயா ஜெகன்

கடிந்துகொண்ட சீன அரசாங்கம், விசாரணையை ஆரம்பித்திருக்கிறது. டி.வி.யில், செய்தித்தாள்களில் வரும் பற்பசை விளம்பரங்களை ஒவ்வொன்றாக எடுத்து வைத்துக்கொண்டு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களை





படம் : ஸ்ரீஹரி

அழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

பற்பசை மட்டுமல்ல... எல்லா உணவுப் பொருள்களையும் அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்துப் பரிசோதித்துப் பார்த்ததில், அதிர்ச்சி! விலங்குகளுக்கான உணவு வகைகளில் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கு கேடு விளைவிக்கும் கெமிக்கல்கள் கலந்திருந்தன.

வர்த்தகம் நல்லவிதமாக நடைபெற வேண்டுமென்றால், இந்தப் பற்பசை, விவகாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் இல்லையா? சீன அரசின் கவலை இதுதான்!

Damyang City Success என்னும் அமைப்புதான், மிஸ்டர் கூல் மற்றும் எக்ஸல் பற்பசைகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. உலகெங்கும் இவர்களின் சந்தை பரவியிருக்கிறது. அரசு அதிகாரிகள் உடனடியாக இந்த நிறுவனத்துக்குள் ஊடுருவி, ஷட்டரை மூடி விட்டு, பரிசோதனைகளில் இறங்கி விட்டார்கள்.

ஷி என்னும் பெண்மணியும் அவர் கணவரும் இணைந்து ஆரம்பித்த நிறுவனம் இது. ஐந்து, ஆறு ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. சீனக் குழந்தைகள் அனைவரும் வெண்மை நிற பற்களைக் காட்டி ஈஈஈ என்று சிரிப்பதற்குக் காரணம் இந்த ஷி கம்பெனிதான்.

அமெரிக்கா முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை இவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை; புலம்புகிறார்கள்.

அவர்கள் சண்டைபோட்டு ஒரு முடிவுக்கு வரட்டும். அதுவரை, ஆலும் வேலும் எங்காவது கிடைக்கிறதா என்று நாம் தேட ஆரம்பிப்போம். ●

ஜிகினா – 9

சுகமான சுமைகள்!

ரா.பார்த்திபன்

என் படம்னா அதைக் குடும்பத்தோட பார்க்கணும்னு ஆசைப்பட்டு ஒரு படம் எடுத்தேன். அந்தப் படத்தை என் குடும்பம் மட்டும்தான் பார்த்தது. வேற எந்தக் குடும்பமும் பார்க்கலை.

படத்தோட பேரு 'சுகமான சுமைகள்.' வெளியான பிறகு, எனக்குச் சொல்ல முடியாத சுமைகள்.

செவுத்துல செவப்பா பட்டைப் போட்ட எந்தக் கோயிலா இருந்தாலும் கை தானா கன்னத்துல போட்டுக்க ஆரம்பிக்கும். அது ஒரு அனிச்சைச் செயல் மாதிரி. தற்செயலா ஒரு தடவை செவுத்துல செவப்புப் பட்டை போட்டிருந்த எடத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கிட்டேன். அப்புறம்தான் எடத்தைக் கவனிச்சேன். அது ஒரு போலீஸ் ஸ்டேஷன்.

சோகத்துக்கு நடுவுல சின்னதா சிரிப்பு. அந்த அளவுக்கு மனசு மருகிக் கிடந்தப்ப எனக்கு நண்பர்னு சொல்லிக்கிட்டிருந்த ஒருத்தர் என்னிடம்...

''சார், சென்னைப் புறநகர்ல தெரிஞ்ச ஒரு சாமியார் இருக்கார். நீங்க ஒரு தடவை போய்ப் பார்த்தீங்கன்னா எல்லாப் பிரச்னையும் தீர்ந்துடும். நிறைய மினிஸ்ட்டருங்க அவரைப் பாத்துட்டுப் போறாங்க. ரொம்ப பவர்ஃபுல்.''

''ஏற்கெனவே பவர்ல இருக்கிற மினிஸ்ட்டருங்க எதுக்கு அவரைப் போய் பார்க்கணும்?''

நான் கிண்டலடிக்க,

''இப்படில்லாம் கேட்டீங்கன்னா எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஒரே ஒரு தடவை நீங்களும் அண்ணியும் வந்து பாருங்களேன்.''

சம்மதிப்பதற்கான சமாதானங்கள் தொலைக்காட்சி சீரியலாக நீள, அந்தப் புறநகர் சாமியார் இடத்தில் 'ஸாரி' மடத்தில் நாங்கள் பணிவாய்க் காத்திருந்தோம். வரும் முன் பார்ப்போம் என அந்த அறையை என் கண்கள் வட்டமிட்டதில், ஒரு சாமிப் படமும் அங்கு இல்லை. எல்லாம் அந்த சாமியார் படங்களாகவே இருந்ததில் என் புருவங்கள் இரண்டும் கேள்விக்குறியாக வளைந்தன.

ஒரு திரைப்படப் புகைப்படக் கலைஞரின் அதி அழகியல் நுட்பத்துடன் ஒவ்வொரு ஃப்ரேமும் இருந்தது.

அவரது கண்கள் மட்டும், ஒரு '8' போல் விரல்கள் பிணைந்திருக்கும் இரு கைகள் மட்டும், காவி வேட்டிக்குள் இருந்து எட்டிப் பார்க்கும் இரண்டு கால்கள் மட்டும், புறமுதுகிட்டு அவர் அமர்ந்திருப்பது மட்டும், கடைசியாக அவரது முழு உருவம்.

எல்லாப் படங்களிலும் மலை மலையாக உதிரிப்பூக்கள் ஒட்டப்பட்டிருந்தன. தன்னைத்தானே சாமியாக வணங்கும் ஒரு சாமியாரைப் பார்ப்பது வியப்பாக மட்டும் இல்லாமல் ஏதோ ஒரு நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

ஒரு தெலுங்குப் பட வில்லனின் வாசனை அந்த அறைக்குள் முதலில் நுழைந்தது. பிறகு அவர் வந்தார். ஆஜானுபாகுவாக இருந்த அவர், மைசூர்பாகுவாக இனிமையாகப் பேசினார். கேசரிப் பவுடர் போட்டுக் கிண்டியதைப் போல கண்கள் இளம் சிவப்பில் மிதந்தன.

அதை மூடிவைத்து ஒரு வேக்காட்டுக்குப் பின் திறந்தபடி, ''சொல்லுங்க'' என்றார்.

'சொல்'-வதற்குள் ''எல்லாம் எனக்குத் தெரியும். உங்களுக்கு யாரோ செய்வினை பண்ணியிருக்காங்க.''

அதிர்ச்சி எங்களை ஆட்கொண்டது.

''உங்க வீட்லயிருந்து ஒரு



பிடி மண்ணை எடுத்துட்டு வாங்க. யார் செஞ்சதுன்னு சரியா சொல்லித்தரேன்.''

அவர் பேச்சில் ஏதோ பிடிப்பு ஏற்பட, பிடி மண்ணுடன் மீண்டும் ஆஜரானோம். அந்த மண்ணைத் தன் உள்ளங்கையில் வைத்து, கண்ணை மூடிப் பார்த்தவர், சில நொடிகளுக்குள் 'ஷாக்' அடித்தவர் போல கை உதற, மண் சிதறியது. எங்கள் இருவரையும் மாறி, மாறிப் பார்த்தவர், ஒரு மாதிரியாகவும் சிரித்தார்.

''நெறைய வெச்சிருக்காங்க. தொழில் நாசமாக கெட்ட காரியம் பண்ணியிருக்காங்க'' நாங்கள் இருவரும் புதிருக்குள் விழுந்தோம்.

''யார் செஞ்சிருப்பாங்க...? ஏன் செஞ்சிருப்பாங்க...?''

''எடுக்கலாம். ஆனா பொதுவா நான் யார் வீட்டுக்கும் போகாது'' என்று கூறியபடி கோழியாகி அந்த மண்ணையே கிளறிக் கொண்டிருந்தார்.

நாங்கள் கிட்டத்தட்ட கெஞ்சிய பிறகு, ஒப்புக் கொண்டார், எங்கள் வீட்டின் விஜயத்துக்கு.

அப்படி அவர் வருவதானால் நாங்கள் என்னவெல்லாம் வாங்கி வைக்க வேண்டும் என்று அவரே ஒரு 'லிஸ்ட்' எழுதிக் கொடுத்தார்.

அந்த அனுமார் வாலைச் சுருட்டி, பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, வேக மாக வெளியேறினோம். ஆனால் எங்கள் மனக்கடல் உள்வாங்கியது வருத்தத்தில். அவர் எங்கள் வீட்டுக்கு வரும் வரை எங்கள் கண்களும் கேசரி பவுடரைப் போட்டுக் கிண்டியதைப் போல சிவந்தே இருந்தது உறக்கமின்மையால்.

வந்தார். "எல்லாம் ரெடியா?" என்றார். வழக்கமான பூஜை பொருட்களுடன் மூன்று நிறங்களில் மூன்று சாத உருண் டைகளை உருட்டி வைத்திருந்ததைக் காட்டினோம். அந்தக் குறிப்பட்ட பூஜைக் காக குறிப்பிட்ட கரை போட்ட வேட்டி யையும் வாங்கி வைத்திருந்தோம்.

"பாத்திரம் நிறைய செப்புத்தகடுகள் புழுவாய் நெளிந்தன. ஒட்டியிருந்த மண்ணையெல்லாம் துடைத்துவிட்டு என்னை அதைப் படித்துப் பார்க்கச் சொன்னார்."



காட்டிய வேட்டியைக் கட்டிக்கொண்டு பூஜை அறைக்குள் நுழைந்தார். நுழையும் முன், "அந்த கார்டன்ல மூணு அடிக்கு ஒரு குழியத் தோண்டி வைங்க. வேலைக் காரங்க வேணாம். நீங்களே தோண்டுங்க" என்று சொல்லிவிட்டு அந்த மூன்று சாத உருண்டைகள் உள்ள தட்டை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். முப்பது நிமிடம் கழித்து வெளியே வந்தார்.

எனக்கு நானே குழியைப் பறித்து விட்டு, (அதாவது தனியனாக) நின்று கொண்டிருந்த என்னிடம் அந்தச் சாத உருண்டைத் தட்டை நீட்டி குழியில் போடச் சொன்னார். அதில் தீர்த்தம் ஊற்றி மண்ணை மூடி, சூடம் காட்டி, "சூ... மந்திரக்காளி" சொல்லி சற்று கழித்து என்னிடம் அந்தக் குழிக்குள் கையை விட்டுத் தேடிப் பார்க்கச் சொன்னார். சற்று நேரம் தேடிய பின், அந்த புதை பொருள் ஆராய்ச்சியில் புதைந்திருக்கும் பொருள் தெரியாமல், அண்ணாந்து அவரைப் பார்த் தேன். 'இன்னும்' என அவர் இமை சுருங்கி விரிந்தது. இன்னும், இன்னும் தேட விரல் இடுக்கில் ஏதோ தகடுபோல் தட்டுப்பட்டது. வெளியில் எடுத்து அவரி டம் நீட்டினேன். அவரும் பழிக்குப் பழி யாகத் தண்ணீர் இருந்த ஒரு பாத்திரத்தை என்னிடம் நீட்டினார்.

அதில் போட்டுவிட்டு இன்னும் தேடி, இன்னும் இன்னும் போட்டேன். பாத்திரம் நிறைய செம்புத் தகடுகள் புழுவாய் நெளிந் தன. ஒட்டியிருந்த மண்ணை எல்லாம் துடைத்துவிட்டு என்னை அதைப் படித்துப் பார்க்கச் சொன்னார்.

'உன் சினிமா தொழில் சின்னாபின்ன மாக', 'நீ நாசமாப் போக', 'உன் புள்ளைங்க உருப்படாமல் போக', 'நீ ஜன்னி வந்து சாக', 'உன் பொண்டாட்டி புள்ளைங்க அழிஞ்சு போக...'

இப்போது இதை எழுதும்போதே என் கைகள் நடுங்குகிறது என்றால், அதை வாசித்தபோது என் மனம் என்னவாய் வெடித்திருக்கும்!

துடித்தபடி நானும் என் மனைவியும் கேட்டோம். "யாருங்க...? யாருங்க...? யாருங்க எங்களுக்கு இப்படி செஞ்சிருப்

பாங்க?''

அமைதியாக எழுந்தவர், எங்கள் தலைமீது அவரின் கையை வைத்து (ஏற்கெனவே நாங்கள் தலையில் கை வைத்தபடிதான் அமர்ந்திருந்தோம்)

''எல்லா செய்வினையையும் நான்தான் எடுத்திட்டேன்ல... அப்புறம் ஏன் கவலைப்படுறீங்க? இனிமே நீங்க நல்லா இருப்பீங்க!'' எனக் கூறிவிட்டு ஒரு வேப்பிலை மரமாய் வெளியேறினார்.

என் மனைவியின் அழுகையின் பின்னணியில் நான் மீண்டும் மீண்டும் அந்தத் தகடுகளைப் படித்தபடி, படிக்காமல் வெறித்தபடி இருந்தேன்.

யாராக இருக்கும்? இவ்வளவு வன்முறையான வார்த்தைகள் வர எது ஏதுவாக இருந்திருக்கும் என்று என் மண்டைக்குள் ஜல்லடை போட்டேன். முதலில் இந்தக் கையெழுத்து யாருடையது?

எங்கோ பார்த்த மாதிரி ஞாபகம்... அதுவும் சமீபமாக...

சலித்த பிறகு ஜல்லடையில், ஒரே மாதிரியான சுழித்தல் உள்ள நான்கைந்து எழுத்துக்கள் ஒட்டிக் கொண்டிருந்தன.

திடீரெனத் தலையில் தேங்காய் அடித்து உடைத்ததுபோல் ஒரு அனுமார் வால் பேப்பர்.

சாமியார் எழுதிக் கொடுத்த, அந்த 'லிஸ்ட்' பேப்பரை எடுத்துப் பார்த்தேன். என் கண்கள் மின்னின. அந்தத் தகடுகளையும், பேப்பரையும் ஒப்பிட்டேன். என் மனைவியைக் கூப்பிட்டேன்.

''ஆமா! ரெண்டு கையெழுத்தும் ஒரே மாதிரிதான் இருக்கு!''


வலமிருந்து இடமாக பூமிப் பந்து சுழல்வதை எங்கள் தலைச் சுற்றலால் கவனிக்க முடியவில்லை.

பணம் சம்பாதிக்கும் ஆசையில் அதிபுத்திசாலித்தனம், செம்புத் தகடுகளாய் மாறி, சாத உருண்டைக்குள் நுழைந்து பூமிக்குள் புதைந்து மீண்டும் எங்கள் கைகளில். இதை நான் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால், அந்தச் சாமியாரின் மந்திர சக்தியால் இனி எங்கள் குடும்பம் சுபிட்சமாக இருக்கும் என்ற அளவில் நாங்கள் சந்தோஷமாக இருந்திருப்போம். அதிபுத்திசாலித்தனம், ஆபத்துகளை விளைவிக்க ஆயத்தமாக, ஆயுதமாக ஆகிவிடுமோ...?

சாமியார் சென்ற திசையைப் பார்த்தோம். தி.நகர் சென்று விட்ட அவருடைய கார் கிளப்பிய புழுதியில் புழுக்கமும் வேதனையும் பரவி, விரவி வியாபித்திருந்தது.

ஐயோ, கடவுளே... நீயே வந்து சொல்லிவிடு... மனிதநேய பணிகளைத் தவிர, வேறு மந்திரக் கரடிகளில் கடவுள் இல்லையென்று நீயே வந்து சொல்லிவிடு...

(மின்னும்...)



''கட்டிங் பண்ணிக்க வந்த தலைவர் ஏன் கோபமாக எழுந்து போயிட்டார்?''

''வேட்டியை கழுத்துல போட்டப்ப யாரும் கை தட்டலயாம்!''

- சீர்காழி வி.ரேவதி

சூர்யகுமார்



கணவனின் காதலி!

கதவு திறந்த நித்யா திகைத்தாள். வெளியே ஓர் அழகான பெண்.

"வாங்க" என்றாள்.

உள்ளே வந்த சப்னா, தான் திலீப்பைத் தேடி வந்திருப்பதாகச் சொன்னவுடன் சுதாரித்துக் கொண்டாள் நித்யா. நினைத்த மாதிரியே அவள் தன் கணவனது காதலி!

சினிமாக்களில் வருவது போலவே கல்லூரி நாட்களில் காதலித்துப் பிரிந்திருக்கிறார்கள். பிரிவுக்குக் காரணம் இருவரிடத்திலும் இருந்த ஈகோவாம்!

நித்யா சட்டென்று தன்னை திலீப்பின் உறவுக்காரப் பெண் என்றாள். திலீப்புக்குத் திருமணமாகி விட்டதை மறைத்தாள். சப்னா இன்னும் அவன் மேல் காதலுடன் இருப்பது தெரிய, அவன் வந்ததும் ஒரு நாளாவது அவர்கள் நேரில் பேசிக் கொள்ளட்டும் என்று முடிவெடுத்தாள்.

செல்லை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து -

"சப்னா தெரியுமா சப்னா! வந்திருக்கா. உடனே வாங்க" என்றதும் திலீப் அதிர்ந்தான். தன் மனைவிக்குத் தன் காதல் தெரிந்து விட்டால்?

"எல்லாம் தெரிஞ்சாச்சு. நமக்குக் கல்யாணமானதை நான் மறைச்சுட்டேன். வந்து அவளை எங்காவது வெளியில அழைச்சிட்டுப் போய்ப் பேசிட்டு வாங்க."

"என்ன சொல்ற நித்யா."

"சொல்றதைச் செய்ங்க."

சற்றே நடுக்கத்துடன் வந்த திலீப்பை சமாதானப்படுத்தி சப்னாவுடன் அனுப்பி வைத்தாள் நித்யா.

அன்றிரவு -

வீட்டுக்குத் தனியாக வந்த திலீப் முறைத்தான்.

"என்ன நான் செய்தது கொஞ்சம்கூட நல்லாயில்லையா? அவ பெரிய ஈகோ பிடிச்சவன்னு முகத்திலேயே எழுதி ஒட்டியிருந்தது. அதனால்தான் அவகூட உங்களை அனுப்பினேன். பாதியிலேயே சண்டை போட்டுட்டுப் போயிருப்பாளே."

"எப்படி நேர்ல பார்த்த மாதிரியே சொல்றியே நித்யா கண்ணு..." என்று அருகில் வந்த கணவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.



என்ன கேடு நேரப்போகிறதோ!

அமரர் கல்கி

நம் தேசத்திலுள்ள கல்வி முறை நோய் பிடித்துப் போயிருக்கிறது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அந்த நோயைத் தீர்க்க வேண்டும் என்பதையும் அனைவரும் அங்கீகரிக்கிறார்கள். இந்த இரண்டு விஷயங்களிலும் அநேகமாக எல்லாருக்கும் ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கிறது. கருத்து வேற்றுமையே கிடையாது. அதாவது: (1) நமது கல்வி முறை நோய் பிடித்த கல்வி முறை: (2) அந்த நோயைத் தீர்த்து நமது கல்வி முறையை ஆரோக்கியப் படுத்த வேண்டும்.

ஆனால், என்ன நோய் என்பதிலும் அதைக் குணப்படுத்தும் வழி என்ன என்பதிலும் அளவில்லாத அபிப்பிராய பேதம் இருக்கிறது. நோய்க்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயர் சொல்கிறார்கள். குணப்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வைத்திய முறையைச் சொல்கிறார்கள்.

நாமும் ஒரு வைத்திய முறையைக் குறிப்பிடுகிறோம். நாமும் ஒரு மருந்தைச் சொல்கிறோம். நாம் சொல்லும் மருந்து இயற்கை மருந்து. நமது கல்வி முறையிலுள்ள சகல நோய்களையும் தீர்க்கக் கூடிய மருந்து. ஆகையால் அதை 'சஞ்சீவி' என்று அழைக்கிறோம்.

நமது கல்வி முறை அன்னியர்களாகிய ஆங்கிலேயர்களால் இந்த நாட்டில் புகுத்தப்பட்ட கல்வி முறை.

நமது தேச நிலைமைக்கும் பண்பாட்டுக்கும் பொருந்தாத கல்வி முறை.

சிறுவர் - சிறுமிகளின் மூளைக்கு அதிகமாக வேலை கொடுத்து மூளை வறளும்படிச் செய்யும் கல்வி முறை.

"நீங்க அந்த நடிகைக்கு ஃபேமிலி லாயராமே! சிவிலா? கிரிமினலா?"

"நம்ம ஸ்டேட்டுக்குள்ள அவங்களுக்கு நடக்குற டைவர்ஸை மட்டும் பார்த்துக்கறேன்!"

- பி.ஜி.பி.இசக்கி



பேனாப் பிடித்து எழுதுவதைத் தவிர மற்றபடி கைவிரல்களுக்கு வேலையில்லாமலும் கைத்திறமை வளராமலும் அடித்த கல்வி முறை.

சமூகத்தில் ஒரு சிறு பகுதியாரை அதிகம் படித்தவர்களாகவும் மற்ற பெரும்பாலான ஜனங்களை எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவும் ஆக்கிவிட்ட கல்வி முறை.

நமது நாட்டின் பொருளாதார நிலைமைக்குச் சற்றும் பொருத்தமில்லாதபடி ஏராளமான பணச்செலவு செய்ய வேண்டியிருக்கும் கல்வி முறை.

இத்தகைய எல்லா வியாதிகளையும் தீர்க்கக்கூடிய ஒரே சஞ்சீவி மருந்து உண்டா என்பது கேள்வி.

"உண்டு" என்பது நமது பதில்.

நமது கல்வி முறையின் நோயைப் பற்றி முன்பெல்லாம் பொதுஜனத் தலைவர்களும், மக்களால் மதிக்கப்பட்ட அறிஞர்களும் பேசுவது வழக்கம். சுவாமி விவேகானந்தர் முதல் காந்தி மகான் வரையில் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்; எழுதியிருக்கிறார்கள்.

ஆனால், முற்காலத்திலெல்லாம் அரசாங்கப் பீடங்களில் இருந்தவர்களும் அதிகார வர்க்கத்தினரும் நம் கல்வி முறையின் சீர்திருத்தம் பற்றிப் பேசியதில்லை.

சுதந்திர இந்தியாவில் கல்வி மந்திரிகள் கல்வி முறையைப் பற்றிப் பேசுகிறார்கள்; பேச வேண்டியதுதான். ஆசிரியர்கள், உபாத்தியாயர்கள் அதைக் குறித்துப் பேசுகிறார்கள்; பேசிவிட்டுப் போகட்டும்.

ஆனால், கவர்ன்மெண்ட் காரியதரிசிகளும் கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசத் தொடங்கும்போது, நம்முடைய கல்விமுறைக்கு இன்னும் என்ன கேடு நேரப் போகிறதோ என்று நாம் பயப்பட வேண்டியதாயிருக்கிறது.

- 24.07.49 கல்கி இதழிலிருந்து...



"நாம எடுக்கிற குழந்தைகள் படத்துல வர்ற மிக்கி மௌஸ், மற்ற விலங்குகளிடம் கடன் வாங்கிட்டுத் திருப்பிக் கொடுக்காம ஏமாத்துது..."

"அப்ப நம்ம படத்துக்கு 'டிமிக்கி' மௌஸ்னு பேர் வச்சிடலாம் சார்!"

- வி.சி.கிருஷ்ணரத்னம்



• கோ.பாரதிமோகன்

மௌன அடுக்குகளைக்
கலைத்துவிட்டு
ஒதுங்கிக் கொள்கிறாய்
யாதொன்றுமறியா
ஜோதிடக் கிளியாய்


சரிந்த மௌனத்தின்
கருப்பை கிழித்து வெளியேறுகிறது
உரத்த குரல்

செவிகளற்ற
வெளியின் திசையளந்து
முடங்கி அமரும்
களைத்த சொற்களின் சிறகு

பிறிதொரு பொழுதில்
பிரியத்தாலோ
பாபமுணர்ந்தோ
துளிர்க்கக்கூடும் சில செவிகள்

ஆயின்
எச்செவியுணருமோ
உயிர்த்த சொற்களுள்
ஊடாடி இழையும் மௌனத்தை

மௌனத்தின் சிறகடிப்பு!



அருள்வாக்கு

சந்தோஷம் - ஆனந்தப் படுவதும், திருப்தி கொள்வதும் நெருக்க மாகத் தொடர்பு கொண் டவைதான் என்றாலும் இரண்டும் ஒன்று என்று சொல்ல முடியாது என்று நிறைந்த நிறைவாக, முடிந்த முடிவாக திருப் திப்படும் ஆத்மானந்தம் ஒன்றில்தான் இரண்டும் ஒன்றே ஆகிவிடுகின் றன. மற்ற விஷயங் களில் ஆனந்தத்துக்கும் திருப்திக்கும் கொஞ்சம் வித்தியாசமிருப்பதாகத் தான் பார்க்கிறோம். மந்த மாருதம் வீசினால் ஆனந் தமாயிருக்கிறது என்

திருப்தி!

எந்த ஓர் ஆசையும் உண்டாவதற்குக் காரணம் என்ன? நாம் சந்தோஷத்தைத் தேடுவதுதான் சந்தோஷம் என்பதைவிட ஆனந்தம் என்பதுதான் சரியான வார்த்தை. ஏனென்றால் நாம் 'சந்தோஷம்' என்பதுதான் ஆனந்தம், இன்பம், Happiness (happiness-க்கு மேலே bliss, அதற்கு மேலே Joy) என்று நினைத்துக் கொண்டிருந்தாலும் அப்படியில்லை. சந்தோஷம் என்பது 'திருப்தி' என்றே பொருள்படுவது. தோஷம் (Tosham) என்றால் திருப்தி. நல்ல ஆழ்ந்த திருப்தி போமே ஒழிய, திருப்தியாயிருக்கிறது என்று சொல்ல மாட்டோமல்லவா? எதிர்பார்க்கிற ஆசைப்பூர்த்திக்கு மட்டுமே 'திருப்தி' என்பது பொருந்துகிறது. எதிர்பாராமல் கிடைப்பதை 'திருப்தி' என்று சொல்லாமல் 'ஆனந்தம்' என்று மட்டுமே சொல்கிறோம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

தென்னாப்பிரிக்க



✱ மாநாட்டில்...

"எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் தென்னாப்பிரிக்காவில்தான் உள்ளனர். உங்களுக்குத் தெரியுமா...? தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் மகனும் ஹெச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டவர்தான்!" என்று அதிர்ச்சியுடன் சொல்கிறார் டாக்டர் காமராஜ். தமிழகத்தைச் சேர்ந்த பாலியல் நிபுணரான இவர், தம் மனைவி டாக்டர் ஜெயராணியுடன் 19-ஆவது குழந்தைப்பேறின்மை மற்றும் மலட்டுத் தன்மை மாநாட்டுக்காகத் தென்னாப்பிரிக்காவுக்கு அண்மையில் சென்று வந்திருக்கிறார். பயண அனுபவங்களைப் பற்றி நம்மோடு பகிர்ந்து கொண்டார்...

"இந்தியாவைப் போலத்தான் தென்னாப்பிரிக்காவும். அங்கும் குழந்தைப் பேறு இல்லாததைப் பெரிய குறையாக எடுத்துக் கொள்கிறார்கள். மணமான ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறக்கவில்லை எனில் ஆளாளுக்கு ஒரு யோசனை சொல்லவும் ஆரம்பித்து விடுகின்றனர்.

இங்கு திருமணமாகாத டீன் ஏஜ் பெண்கள் கருத்தரிப்பது அதிக அளவில் உள்ளது. அரைகுறை ஆடையுடுத்திய இளம் பெண்களைச் சாலைகளில் காண முடிகிறது. அந்தப் பெண்களிடம் அத்து மீறும் உரிமைகளை சாலையிலேயே எடுத்துக் கொள்ளும் காதலர்கள் அதிர்ச்சியடைய வைக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்காவை வறுமையும், இன வெறியும் அதிகமாக உள்ள நாடு என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால், அங்கு போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்தது, நிறைய முன்னேற்றங்கள் நடந்தேறி இருக்கின்றன என்பது. தென்னாப்பிரிக்காவின் சாலைகளும், நெறிப்படுத்தப்பட்ட போக்குவரத்தும் வியக்க வைக்கின்றன.

1994-ஆம் ஆண்டிலேயே இனவெறி முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது என்றாலும், இதுநாள் வரை முக்கியமான பதவிகளில் வெள்ளையர்களே அமர்ந்திருக்கிறார்கள். கறுப்பர்களில் பெரும்பாலானோர் வேலையில்லாமல் இருக்கின்றனர். அவர்களில் சிலர் திருடுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக டர்பன், கேப்டவுன், ஜொகனாஸ்பர்க் போன்ற நகரங்களில் திருட்டுத் தொழில் அதிகம்!

ஒரு டாக்டரின் பயண அனுபவம்!

அதிர்ச்சிகள்...!

IFFS என்ற பெயருடன் அமெரிக்காவில் இயங்கி வரும் ஒரு மருத்துவ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த மருத்துவ மாநாட்டில், குழந்தைப் பேறின்மைக்கான சிகிச்சைகள் குறித்த பல கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார்கள். எங்கள் துறையில் அவ்வப்போது குறிப்பிடத்தக்க திருப்புமுனைகள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. கணவனிடமிருந்து விந்து வெளியேறவில்லையெனில், ஊசியின் மூலம் கணவனின் விந்தை எடுத்து சினை முட்டையுடன் இணைய வைத்து, கரு உருவாக்கும் முறை 1992-ல் அறிமுகமானது. தற்போது லேசர் சிகிச்சையும் (Lazer Hatching Techonology) அறிமுகமாகி இருக்கிறது.

இப்படிப்பட்ட சமீப மருத்துவத் தொழில்நுட்பங்கள், அவற்றின் நடைமுறை சாதக-பாதகங்கள், புதிய மருந்துகளின் வெற்றி விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி உலகின் பல நாடுகளிலிருந்தும் வந்துள்ள மருத்துவர்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள இம் மாநாடு உதவியது.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுவதற்காக ஓர் அரசியல்வாதி அழைக்கப்பட்டிருந்தார். இவர் பாலியல் கல்வி போன்றவற்றை தென்னாப்பிரிக்காவில் அறிமுகப்படுத்த முன்னோடியாக இருந்தவராம். அவர் பேசும்போது, 'ஒரு பெண் பலாத்காரம் செய்யப்படுவதை உங்களால் தடுக்க முடியவில்லையெனில், பலாத்காரம் செய்யும் ஆணுக்கு ஓர் ஆணுறையாவது கொடுங்கள்' என்றார்! எங்கள் அனைவருக்கும் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக இருந்தது தென்னாப்பிரிக்க பயணம்'' என்கிறார் டாக்டர் காமராஜ்.

- ஜி.எஸ்.எஸ்

குழந்தை பேறின்மையைத் தவிர்க்க டாக்டரின் ஆலோசனைகள்...

★ இன்று மிகவும் சோம்பேறித்தனமான வாழ்க்கை முறையாலும், உட்கார்ந்து கொண்டே வேலை செய்வதாலும் உடல் பருமன் அதிகரித்து இரத்த அழுத்தமும் மலட்டுத்தன்மையும் ஏற்படுகின்றன. லாப் டாப்பை மடியில் வைத்து வேலை செய்ய வேண்டாம். லாப் டாப்பிலிருந்து உருவாகும் வெப்பம் ஆண் விதைகளைப் பாதிக்கின்றது.

★ தினமும் நான்கு மணி நேரத்துக்கு மேல் செல்ஃபோன் பயன்படுத்தினால் ஆண்களுக்கு மலட்டுத்தன்மை உண்டாகலாம்.

★ மகப்பேறுக்கு உதவ பெண்கள், ஆடை நீக்கப்படாத பாலை அருந்த வேண்டும். தினமும் ஐஸ்கிரீம் சாப்பிடலாம். கலோரி அதிகமாகுமெனில் வேறு எதையாவது குறைத்துக் கொள்ளலாம்.



நூல் அரங்கம்

கல்கி இதழில் தொடர்கதையாக வெளிவந்த கி.ராஜேந்திரனின் நாவல்கள் அனைத்தையும் வானதி பதிப்பகம் நூல்களாக வெளியிட்டுள்ளது.



ஸைக்கோ ஸாரநாதன்

விடுமுறையைக் கொண்டாட, கொடைக்கானலுக்குக் குடும்பத்துடன் செல்கிறார் 'அன்னம்' பத்திரிகையின் உதவி ஆசிரியர் பத்மநாபன்.

நாற்பத்திரண்டு கொலைகளைச் செய்த ஸைக்கோ சாரநாதனும், மனோதத்துவ மருத்துவர் குஹாவைக் கொன்ற கையோடு, மாறுவேடத்தில் கொடைக்கானல் வந்து சேர்கிறான்.

தன் வாலிப மகன் ரங்கனுடன் அதே கொடைக்கானலுக்கு வருகிறார் டி.ஐ.ஜி. நடராஜன். பத்மநாபனின் பருவவயது மகள் மீனா, ரங்கனைக் காதலிக்கிறாள்.

கொடைக்கானலில் அடுத்தடுத்து மூன்று கொலைகள் நிகழ்கின்றன. ஸைக்கோ சாரநாதன்தான் கொலைகளைச் செய்தவன் என்ற வதந்தி பரவுகிறது.

கொலையாளி ஸைக்கோ சாரநாதனா அல்லது வேறு யாராவதா? டி.ஐ.ஜி. நடராஜன் உண்மைகளைக் கண்டுபிடித்தாரா இல்லையா? ரங்கன்-மீனா காதல் வெற்றியா, தோல்வியா?

ஸைக்கோ சாரநாதன் சுவாரசியமாகப் பின்னப்பட்டிருக்கிறது.

வாசகர்களை ஈர்க்கும் க

கொடைக்கானலின் அத்தனைச் சுற்றுலா இடங்களையும், அவற்றின் பின்னணியுடன் கதையோடு, கதையாகக் கோத்திருப்பது ரசிக்க வைக்கிறது.

அமிர்தலிங்கம்தான் ஸைக்கோ சாரநாதன் என்று தெரிந்துவிட்ட நிலையில், அவன் குழந்தை அனுசூயாவுடன் விளையாடும் காட்சிகளில் நெஞ்சில் திக்... திக்...

கோக்கர்ஸ் வாக் பள்ளத்தாக்கில் குழந்தை அனுசூயா தவறி விழுவதும், அங்கே அவள் விழித்த கண்களோடு கிடக்கும் கனகத்தைப் பார்ப்பதும், அனுசூயாவை ரங்கனும், பத்மனாபனுமாகச் சேர்ந்து காப்பாற்றுவதும் - இமைக்கவும் மறந்து படிக்க

* அமரர் கல்கி நூற்றாண்டு விழாவில் வானதி பதிப்பக அதிபருக்குக் கௌரவம்



“ கிளைமாக்ஸை நெருங்க நெருங்க கதையைப் படிக்கும் நாம், நாற்காலியின் நுனிக்கு நகர்ந்து விடுகிறோம்! ”





…தையோட்டம்!



வைக்கும் பகுதிகள்.

கிளைமாக்ஸை நெருங்கநெருங்க படிக்கும் நாம், நம்மையறியாமல் நாற்காலி நுனிக்கு நகர்ந்து விடுகிறோம்.

அங்கங்கே நகைச்சுவை, அங்கங்கே அழகான காதல்; அங்கங்கே சுற்றுலா உணர்வு. ஸைக்கோ சாரநாதன் ஒரு சுவையான பொழுதுபோக்குப் புதினம்.

- சுபா

ரவி குல திலகன்

வரலாற்று நவீனம் எழுதுவ தென்பது அவ்வளவு சுலபமான விஷயமில்லை. நல்ல வரலாற்றுப் பிரக்ஞையுடன், கற்பனை ஆற்றலும் மிகுந்திருக்க வேண்டும். வரலாற்று நிகழ்வுகளில் தென்படக்கூடிய இடை வெளிகளைச் சரித்திர முரண்பாடு இல்லாமல் அணுகி, மனோதர்ம விளக்கங்களைத் தருவதற்கானப் படைப்பாற்றல் ஓர் அடிப்படைத் தேவை.

கல்கி ராஜேந்திரனுக்கு இந்த வித்தை கை வந்திருக்கின்றது என்பது இந்த நாவலின் மூலம் தெரிகிறது. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சார்ந்த சங்ககாலச் சோழர்களுக்குப் பிறகு சோழர்களைப் பற்றி எந்தக் குறிப்பும் தமிழ்நாட்டு வரலாற்றில் இல்லை. ஒன்பதாம் நூற்றாண்டில்தான், பிற்காலத்தியச் சோழர்களில் முதல்வனாக விஜயாலயன் குறிப்பிடப்படுகிறான்.

கி.ராஜேந்திரன் எப்படி ஒரு நல்ல நாவலைப் புனைந்திருக்கின்றார் என்பது இந்தச் சரித்திரப்பின்னணியை அறிந்தால் தான் புரிந்துகொள்ள முடியும்.



விஜயாலயன், ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன், வரகுண பாண்டியன் ஆகியவர்களைத் தவிர பெரும்பாலும் மற்றவர்கள் நாவலாசிரியரின் கற்பனை விரிவாக்கங்கள். சரித்திர நிகழ்வுகளுக்குப் பொருந்த படைக்கப்பட்டிருக்கும் அற்புதமான கதாபாத்திரங்கள்.

விஜயாலயனை விரும்புவதும் வெறுப்பதுமாகிய இரு காட்டமான உணர்வுகளுக்கிடையே தத்தளிக்கும் அவன் பட்டத்து ராணியாகிய உத்தமசீலி ஒரு வித்தியாசமான பாத்திரப்படைப்பு. விஜயாலயனின் வீரத்தைக் கண்டு வியக்கிறாள். ஆனால் அவனுக்கு இயல்பாகவே அமைந்துவிட்ட ஈவு, இரக்கமற்ற கொடூரமும், தீ விபத்தில் விளைந்த விகாரத் தோற்றமும் அவனிடம் அவள் அருவருப்புக் கொள்வதற்குக் காரணமாகின்றன. விஜயாலயனின் மனைவியைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஏதும் இல்லாத நிலையில் கதாசிரியர் அப் பாத்திரத்தைப் பொருத்தமாகவே அமைத்திருப்பதாகப்படுகிறது.

விஜயாலயனே ஒரு வித்தியாசமான கதாநாயகன். அவன் ஆணழகன் அல்லன். தான் நிறைவேற்ற விரும்பும் காரியத்துக்காக எது செய்தாலும், அது நியாயந்தான் என்று நினைக்கிற ராஜதந்திரி. ராஜேந்திரன், தற்காலத்துக்கும் பொருந்தி வரும் ஓர் அப்பட்டமான அரசியல்வாதியைத் தான் கதாநாயகனாகக் காட்டியிருக்கிறார்! இதுவே இந் நாவலை மற்றைய சரித்திர நாவல்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

- இந்திரா பார்த்தசாரதி

சாருலதா

திரு.கி.ராஜேந்திரன் 1969-ல் கல்கியில் தொடர்கதையாக எழுதிப் பெரும் வாசகர் வரவேற்பைப் பெற்ற 'சாருலதா' வானதி பதிப்பகம் மூலம் நூல் வடிவமாகி இருக்கிறது. இந்த நாவலில் பல ஜன்னல்கள், காந்தியம், மேல் தட்டு வாழ்க்கை, பெண் மேலாண்மை. தேயிலைத் தோட்டச் சூழல், குதிரைப் பந்தய விவரங்கள், விதவைத் திருமணம், பிளாக் மெயில், பங்குச் சந்தைச் சூதாட்டம், நட்புக்கும் காதலுக்குமான போராட்டம், சமகாலத்தின் சமூக விமர்சனம் இப்படி ஒரு காலகட்டத்தின் ஜன்னல்கள் வழியே பார்த்த பல பார்வையில் நுட்பமான செய்திகளையும் பதிவு செய்திருக்கிறார். கையில் எடுத்தால் படித்து முடித்து விட்டுத்தான் வைக்க வேண்டும் போல வாசகர்களை ஈர்த்துச் செல்கிறது கதையோட்டம். மர்மத்திற்கும் திருப்பங்களுக்கும் பஞ்சமில்லை.

கதாநாயகி சாருலதா தன் அழகையே கூட மூலதனமாக்கத் தயங்காத பெண். அதே சமயம் தன்னை எந்த ஆணும் பயன்படுத்திக் கொண்டு ஏய்த்துவிடக் கூடாது என்று எச்சரிக்கையாக இருப்பவள். அவளுடைய ஆழ் மன உணர்வுகள் மிகச் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

காந்தியம் தோற்காது என்று நிலை நாட்டும் டாக்டர் வேணுகோபாலின் மூலமாக வளரும் கருத்தோட்டம் வாசிக்கிற எவருக்கும் ஒரு நம்பிக்கையை வழங்கும். திரைப்படமாகவோ டீ.வி. சீரியலாகவோ இது மேலும் சிறந்த வெற்றி ஈட்டக் கூடும்.

- வையவன்

கல்கி ராஜேந்திரனின் இதர நூல்கள்: 'விண்ணும் மண்ணும்' வெளியீடு : வானதி பதிப்பகம், சென்னை - 17

'இருட்டு அரண்மனைகள்' வெளியீடு : கங்கை புத்தக நிலையம்.

விஜய், அஜீத், விக்ரம் படங்களில் கண்டிப்பாக இவர் இருப்பார்... கதாநாய கனுக்காக தன் உயிரைத் தியாகம் செய் யக்கூட இவர் தயங்கமாட்டார்.

''ஏன் ஸ்ரீமன், இப்படித் தொடர்ந்து ஒரே மாதிரி கேரக்டர் பண்றீங்க?'' என்றால் சிரிக்கிறார்.

''விஜய், அஜீத், விக்ரம் எல்லாருமே எனக்கு நல்ல நண்பர்கள். என்னோட வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத் துக்கறவங்க. இன்னொன்னு நீங்க சொல்ற மாதிரி துண்டு, துக்கடா வேடங்கள் இல்ல நான் பண்றது; ரொம்ப முக்கியமான, ரசிகர்கள் மனசுல நிக்கிற மாதிரியான வேடங்கள்'' என்று விளக்கமளிக் கும் ஸ்ரீமன், 'ஹீரோ' இமேஜ் குறித்தும் பேசுகிறார். ''சேது படத்துக்குப் பிறகு ஹீரோவா நடிக்க எனக்கு நிறைய வாய்ப்பு வந்தது. 'காற்றுக்கென்ன வேலி'ன்னு ஒரு படம் பண் ணேன். அவார்டெல்லாம்கூட கிடைச்சது. அதுக்கப்புறம் சரியா அதுவும் அமையல. நான் கேக்க



"உலகத்தில் எங்கும் கிடைக்காத சுகம்!"

–நெகிழ்கிறார் நடிகர் ஸ்ரீமன்

றேன், ஹீரோ வாய்ப்புதான் ஒரு கலைஞனை ஆனந்தப்படுத் துமா என்ன? எந்த கேரக்டர்னா லும் அதுல சிறப்பா செஞ்சு திறமையை வெளிப்படுத்தறதுலதான் என்னோட சந்தோஷம் இருக்கு'' என்கிறார் ஸ்ரீமன்.

''உங்களுக்கு டைரக்‌ஷன் ஆசை அதிக மாமே...''

''யார் சொன்னது? தயாரிப்பாள ராகணும்ங்கறதுதான் என்னோட நோக்கம். கூடிய சீக்கிரம் ஒரு படத்தைத் தயாரிக்கப் போறேன்.''

''குடும்பத்தைப் பத்தி..''

''நானொரு கூட்டுக் குடும்பவாசி. இதுல இருக்கிற சுகம் உலகத்துல வேற எந்த விஷயத்திலும் கிடைக்காது. எனக்குக் கிடைச்ச பாக்கியம் எல்லாருக்கும் கிடைச் கணும்னு நான் ஆசைப்படுறேன்!''

- ஆ.முத்துராமலிங்கம்

படம் : பொள்ளாச்சி சுந்தரம்



தேவமருந்து
பரிசுப் போட்டி முடிவுகள்

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி 20-ல் கலந்து கொண்டு, குழந்தைகளின் நினைவாற்றல் வளர எளிய குறிப்பு எழுதி முதல் பரிசாக தன்வந்திரி டாலர் பெறும் வாசகர்: எஸ்.சங்கர், மதுரை. அவரது குறிப்பு:

மஞ்சள் கரிசலாங்கண்ணி, வல்லாரைக் கீரையை உணவுடன் சேர்த்தோ அல்லது தனியாகவோ சாப்பிட்டு வர, நினைவாற்றல் பெருகும். குழந்தைகளுக்கு தினமும் தூதுவளை இலைகள் ஐந்தை சாப்பிடக் கொடுத்தால் படிப்புத் திறன் வளரும். ஐந்து கிராம் வல்லாரையுடன் ஒரு அக்ரூட் பருப்பைக் கலந்து வேகவைத்த நீரைப் பருகினால் அபார நினைவாற்றல் பெறலாம்.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் 'தேவமருந்து முதல் பாகம்' புத்தகத்தைப் பெறும் வாசகர்: எஸ்.இராஜேந்திரன், மணிக்கிராமம். அவரது குறிப்பு:

மாதுளம் பழம் சாப்பிட்டு வர, நினைவாற்றல் அதிகரிக்கும். தூதுவளைப் பொடியை சோற்றுடன் பிசைந்து சாப்பிட நினைவாற்றல் அதிகரிக்கும்.

குழந்தைகளுக்குத் தூதுவளை, வல்லாரை, கறிவேப்பிலைப் பொடி செய்து சோற்றில் பிசைந்து கொடுத்தால் நினைவாற்றல் அதிகரிக்கும். வெந்நீரில் தேன் கலந்து தினமும் காலையில் அருந்தலாம். வல்லாரை 150 கிராம், வசம்பு 15 கிராம், இரண்டையும் பொடியாக்கித் தேனில் கலந்து உண்ணலாம். பாதாம்பருப்பு, வெண்டைக்காய், உருளைக்கிழங்கு, தினமும் சாப்பிட்டால் நினைவாற்றல் அதிகரிக்கும்.

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி -21-ல் கலந்து கொண்டு, குழந்தைகளின் விரல் சூப்பும் பழக்கத்தினை நிறுத்த எளிய வழிமுறையை எழுதி, முதல் பரிசாக தன்வந்திரி டாலர் பெறும் வாசகர்: ஏ.ரங்கநாதன், நெசப்பாக்கம். அவரது குறிப்பு:

விரல் சூப்பும் பழக்கமுள்ள குழந்தையின் விரலில் அவை அறியா வண்ணம் வேப்ப எண்ணெயைத் தடவி விட வேண்டும். கசப்பை உணர்ந்து நிறுத்தி விடும். தொடர்ந்து சில முறைகள் செய்யலாம். நாளடைவில் விரல் சூப்பும் பழக்கம் அடியோடு மறைந்துவிடுவதோடு வேப்ப

குழந்தைகளின் நினைவாற்றலை வளர்க்க...



எண்ணெய் உடல் நலத்துக்கும் உகந்ததாகையால் பின் விளைவுகள் வராது.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் 'தேவமருந்து முதல் பாகம்' புத்தகத்தைப் பெறும் வாசகர்: எம்.ராஜிமோகன், ஈரோடு. அவரது குறிப்பு:

நம்முடைய வேலையையொட்டி குழந்தைகளை நினைத்த நேரத்தில் தூங்க வைக்கக் கூடாது. சாப்பிட்ட பிறகு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் சிரித்து விளையாடி நன்றாக அலுப்பு தட்டிய பிறகு தூங்க வைக்க வேண்டும். இதையும் மீறி விரல் சூப்பினால், கையிட்லல் சிறிதளவு வேப்ப எண்ணெய் தடவவும்.

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி 22-ல் கலந்துக் கொண்டு, படுக்கையில் சிறுவர் / சிறுமியர் சிறுநீர் கழிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்கான வழிமுறையை எழுதி, முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பெறும் வாசகர்: டி.சாந்தி, விளமல், திருவாரூர். அவரது குறிப்பு:

சிறுவர் / சிறுமி இரவில் படுக்கைக்குச் செல்லும் முன் தண்ணீர் குடிப்பதைக் குறைக்கவோ, முடிந்தால் தவிர்க்கவோ செய்வதுடன் ஒரு முறை சிறுநீர் கழிக்கச் செய்ய வேண்டும். அலாரம் வைத்து நாம் எழுந்து அவர்களை எழுப்பி சிறுநீர் கழிக்கச் செய்ய வேண்டும். படிப்படியாக இடைவெளியை அதிகரிக்க வேண்டும். மேலும் இதனால் படுக்கையும், உடையும் வீணாவதுடன் அதன் மூலம் அறைகளில் நோய் தொற்றும், அதன் வாடையை தொடர்ந்து சுவாசிப்பதன் மூலம் நுரையீரல் நோயும் வரும் என்பதை கூறி அவர்கள் புரிந்து கொள்ளும்படி கூறவேண்டும்.



இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் 'தேவமருந்து முதல் பாகம்' பெறும் வாசகர்: சூடாமணி, மல்லேஸ்வரம். அவரது குறிப்பு:

பெற்றோர் வழிகாட்டியபடி தினமும் இரவில் என் மகன் இரண்டு ஸ்பூன் தேன் எடுத்துக் கொள்வான். காலையில் ஐந்து பாதாம் பருப்பை ஊறவைத்துச் சாப்பிடுவான். டீ.வி. பார்க்காமல், அவனுக்குப் பிடித்த கதை, ஜோக்குகளைப் படித்து மனதை சாந்தப்படுத்திக் கொண்டு படுப்பான். மூச்சை சீர்படுத்தும் தியானப் பயிற்சியை இருபது முறை செய்வான்.

இப்படிச் செய்ததில் என் குழந்தை படுக்கையில் சிறுநீர் கழிப்பதை சிறு வயதில் நிறுத்தினான்.

(போட்டி முடிவுகள் அடுத்த இதழில் நிறைவுறுகின்றன.)

"அப்பா..."

"ம்..."

"மத்தவங்க வீடுகள்ல இருக்குற எதுவுமே நம்ம வீட்ல இல்லைப்பா..." என்றான் ஆறாம் வகுப்புப் படிக்கும் முரளி.

பேப்பர் படித்துக்கொண்டிருந்த கோபாலன், மகனின் ஆதங்கத்தைக் கேட்டுத் துணுக்குற்றவனாய், அவன் பக்கம் திரும்பி,

"என்ன இல்லை?" என்றான்.

முரளி, பாடப் புத்தகங்களை அடுக்கிக் கொண்டே அப்பாவைக் குறுஞ்சிரிப்புடன் பார்த்து,

"கோவிச்சுக்க மாட்டீங்களே..."

"இல்லே..."

"எல்லார் வீட்லயும் கலர் டீ.வி. இருக்கு. நம்ம வீட்ல இன்னமும் பழைய கறுப்பு - வெள்ளை டீ.வி.தான். மத்த நான் ஏதும் தவறாக் கேட்டுட்டேனா..."

"நீ சொன்னதெல்லாம் சரிதான்..." என்ற கோபால், மகனைத் தன் அருகில் அழைத்து அமர்த்திக்கொண்டு அவன் தலையைக் கோதிவிட்டு,

"உனக்கு நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்..."

"ஆமாமாம். யாரோடும் ஒப்பிட்டுப் பார்த்து வருத்தப்படக் கூடாது. நமக்கு என்ன இருக்கோ அதைக்கொண்டு திருப்திப்பட்டுக்கணும். காலம் வரும் போது நமக்கு எல்லாம் கிடைக்கும். இதைத்தானே எப்பவும் சொல்லுவீங்க..."

"தெரிஞ்சிருந்தும் ஏன் மத்தவங்களோடு ஒப்பிட்டு ஏக்கத்தை வளர்த்துக்கறே..."

"எனக்கொண்ணும் ஏக்கமில்லைப்பா. உங்க சம்பளத்துக்கு என்னை கான்

நாளை வரும் நல்ல காலம்!

வீடுகள்ல மியூஸிக் ஸிஸ்டம் இருக்கு. நம்ம வீட்ல ஓட்டை டிரான்ஸிஸ்டர் மட்டும் தான் இருக்கு. நிறைய வீடுகள்ல கம்ப்யூட்டர் இருக்கு. நம்மகிட்ட கால்குலேட்டர் கூட இல்லை. சாதாரண ஆளுங்கெல்லாம் மொபெட், பைக் வச்சிருக்காங்க. நம்ம வீட்ல இன்னமும் சைக்கிள்தான்" என்று முரளி பட்டியல் இட்டுக்கொண்டே போக, கோபாலன் திகைப்பின் உச்சிக்குப் போய்விட்டான்.

படித்துக் கொண்டிருந்த பேப்பரை அவன் கை அனிச்சையாக மடித்தது.

பிள்ளையைக் கவலையோடு பார்த்தான்.

"என்னப்பா, அப்படிப் பாக்கறீங்க. வென்ட்ல படிக்க வைக்கறதே அதிகம் தான். ஆயிரமாயிரமாய் ஃபீஸ் கட்டவே சரியாயிருக்கும். மத்ததெல்லாம் வாங்க முடியாது. என்ன பண்றது... என் ஃப்ரெண்ட்ஸ் வீட்ல எல்லாம் இருக்கே. புதுசு புதுசா பொருள் வாங்கினா, என்னை வீட்டுக்கு அழைக்கறாங்க. போனால், உங்க வீட்ல இதுபோல இருக்கான்னு கேட்கறாங்க. பதில் சொல்ல முடியலை. ஒண்ணேயொண்ணு கேட்கட்டுமா, நல்ல காலம்ங்கறது எப்போ அப்பா வரும்..." என்று மேலும் ஒரு கேள்வி போட்டுத் திகைக்க வைத்தான் முரளி.

என்ன பதில் சொல்வது என்று கோபாலன் தடுமாறியபோது, நல்ல

வேளையாக கல்யாணி வந்து கை கொடுத்தாள்.

''முரளி... ஸ்கூலுக்கு டயமாகுது... என்ன பண்ணிக்கிட்டிருக்கிறே...'' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தாள்.

முரளி எழுந்து உள்ளே ஓடினான்.



கோபாலன் அயர்வுடன் உட்கார்ந்திருந்தான்.

குழந்தையின் பேச்சு அவன் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தது. அதிகப்பிரசங்கித்தனமாக ஒன்றும் கேட்டுவிடவில்லை. புத்திசாலித்தனமாகக் கேட்கிறான்.

நல்ல காலம் எப்போ வரும் என்று கேட்கிறானே! எப்போ வரும்? தனியார் நிறுவனத்தில் மெஷின்மேனாக பதினைந்து வருடங்கள் சர்வீஸ் செய்ததில் இப்போதுதான் சம்பளம் ஐயாயிரத்தைத் தொட்டிருக்கிறது.

படுதலம் சுகுமாரன்

'ஓவர்-டைம்' பார்த்து உடம்பை வருத்திக் கொண்டால் உதிரியாக மேலும் ஓர் ஆயிரம்.

இந்த வருமானத்தில் வாடகை வீட்டில் இதற்கு மேல் என்ன வசதி வாய்த்துவிடும்.

சொல்லப்போனால், ஐந்தாவது வரை கான்வெண்ட் படிப்பை நிறுத்தி, முரளியை போர்டு ஸ்கூலில் சேர்க்கத்தான் எண்ணியிருந்தான். தொடர்ந்து மெட்ரிக்குலேஷன் பள்ளியில் பணம் கட்டிப் படிக்க வைக்க முடியுமா என்று பயம் வந்துவிட்டது.

கல்யாணி ஒப்புக்கொள்ளவில்லை.

''நான் வேணும்னா ஒரு வேளை சாப்பாட்டைக் குறைச்சுக்கறேன். குழந்தை மெட்ரிக்குலேஷனே படிக்கட்டும்'' என்று விரும்பினாள்.

ப்ரின்ஸ்பால் கூட,

''ப்ரில்லியண்ட் சைல்ட். எதிர்காலத்துல நல்லா வருவான். ஸ்காலர்ஷிப் கிடைக்கும். கவலைப்படாம போங்க...''

என்று சொல்லவே, விட்டுவிட்டான். ஃபீஸ், புத்தகம், நோட்டு எனப் படிப்பு சம்பந்தமான அவன் தேவைகளை முதலில் கவனித்துவிட்டுதான் மற்ற செலவுகளைக் கவனிப்பது.

இந்த நிலையில் டூவீலருக்கும், கலர் டீ.வி.க்கும் எங்கே போவது, என்று யோசித்தான்.

இது குறித்து ஆரம்பம் முதலே குழந்தையிடம் பக்குவமாகப் பல சமயங்களில் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க முயற்சி செய்வான்.

சமயத்தில் அவனுக்கே தன்னுடைய நிலையை நினைத்து அலுப்பும் சலிப்பும் உண்டாகும்போது, குழந்தைக்குக் கேட்பானேன்.

''என்னங்க, உங்களுக்கு ஒரு தரம் சொல்லணுமா... வேலைக்குக் கிளம்பணுமில்ல... எழுந்து வாங்களேன்...'' என்று கல்யாணி நினைவூட்ட, சிந்தனை கலைந்த கோபாலன், இரவல் பேப்பரை பக்கத்து போர்ஷன்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தான்.

முரளி, குளித்துவிட்டு டிரஸ் போட்டுக் கொண்டிருந்தவன், அப்பாவைப் பார்த்து,


''ஃபீல் பண்ணாதீங்கப்பா... நான் படிச்சுப் பெரியவனாகி, பெரிய்ய வேலைக்குப் போய் நிறைய சம்பாரிச்சு, வேண்டிய எல்லாம் வாங்கிடறேன்...'' என்றான்.

''ரொம்ப சரி...'' என்று அவன் தலைமுடியைக் கோதிவிட்டு நகர்ந்தான் கோபாலன்.

''அம்மா டிஃபன்...'' என்று முரளி குரல் கொடுப்பதும்,

''பொறுடா... அம்மியில அரைச்சுக்கிட்டிருக்கேன். சட்டுனு போட்டு எடுக்க மிக்ஸியா இருக்கு...'' என்று கல்யாணி அங்கலாய்ப்பதையும்,

''சரி சரி... அதையுந்தான் வாங்கித் தாரேன்...'' என்று முரளி பதில் சொல்வதையும் கேட்டுச் சிரித்துக்கொண்டே பக்கெட்டில் இருந்த தண்ணீரை மொண்டு தலையில் விட்டுக்கொள்ளத் துவங்கினான் கோபாலன். ●



பாட்டியுடன் மௌலாவாலி...

சபாஷ் மௌலாவாலி!

ஆடு மாடு மேய்க்க ஆளில்லை என்ற ஒரே காரணத்துக்காக எந்தப் பெற்றோராவது தன் குழந்தையைப் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று தடுப்பார்களா? ஆனால், அப்படியும் செய்திருக்கிறார்கள் ஒரு பெற்றோர்.

கர்நாடக மாநிலம், தார்வாடி வட்டத்திள்ள ஒரு சின்ன கிராமம் துப்பன்மரடி. அந்த ஊரின் ஆரம்பப் பள்ளியில் படித்து வந்த மௌலாவாலி என்ற சிறுவனுக்குத்தான் இந்தக் கொடுமை நிகழ்ந்திருக்கிறது.

அந்த ஊர்ப் பள்ளியில் மதிய உணவு திட்டம் வந்ததும்தான் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மௌலாவாலியைப் பள்ளிக்கு அனுப்பச் சம்மதித்தனர்.

பள்ளியின் சிறந்த மாணவனாக விளங்கிய மௌலாவாலி, கூடல சங்கமா நகரில் நடைபெற்ற குழந்தைத் தொழிலாளர் பரிவர்த்தனையில் கலந்துகொண்டு சிறந்த மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். கூடவே ஜெர்மனிக்கு பக்கத்திலுள்ள 'லக்ஸம்பர்க்' என்ற நாட்டில் நடைபெறும், சிறுவர் கலாசாரப் பரிவர்த்தனை விழாவில் கலந்துகொள்வதற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான்.

'லக்ஸம்பர்க் நாட்டிலுள்ளவர்களிடம் நீ என்ன சொல்வாய்?' எனக் கேட்டால், தெளிவாகச் சொல்கிறான் ''எங்கள் நாட்டில் மாடு மேய்க்கும் சிறுவர்கள்கூட புத்திசாலிகள்!''

— அனிதா ராமச்சந்திரன்



சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்

ஜோதிடத்தில் **50** வருட அனுபவம் கொண்ட

"ஜோதிட வாணி"

ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து, சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம், அனைத்தும் பார்க்கப்படும்.

அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

வெளியூரில் வசிப்பவர்கள் அதிகபட்சமாக 5 கேள்விகள் வரை கேட்க ரூ.500/- கட்டணத்தை முன்னதாகவே அனுப்பவும்.

V.சரோஜா, 45/18, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மேற்கு மாம்பலம்,
அயோத்யா மண்டபம் அருகில்,
பிள்ளையார்கோவில் அருகில் உள்ள தெரு.
Ph: 23716892, Cell: 9444230523, 9444684006, 9444506218

“சேச்சே... என்னண்ணே நீங்க? அந்தாளு ஒரு கொசு. அவனுக்குப் போயி துப்பாக்கி அது இதுன்னுகிட்டு. வெத்து வேட்டுண்ணே. இன்னியவரைக்கும் உங்க மூஞ்சி முன்னால வந்து நின்னு ஒரு வார்த்த பேசியிருப்பாரா? உங்கள பாத்தாலே பேதியாயிரும்ணே. தள்ளி நின்னுக்கினு கொலைக்கறாரு. தொண்டத்தண்ணி வத்தினா தன்னால அடங்கிருவாரு.”

முதலில் ஒரு கணம் பயந்தாலும் முத்துராமன் சுதாரித்துக்கொண்டான். கொன்றுவிடு என்பது ஒரு வெறுப்பில் சொல்லப்படும் வார்த்தை. அதன் பின்விளைவுகள் குறித்து யோசிக்கத் தெரியாத அளவுக்கு எம்.எல்.ஏ. தங்கவேலு அத்தனை அடிமுட்டாள் இல்லை. ஆனால், வட்டம் போகிற போக்கைப் பார்த்தால் எப்படியும் யாராலாவது பெரிய இழப்பு இருந்தே தீரும் என்றே அவனுக்குத் தோன்றியது. ஒரு பெரிய மாநிலம் தழுவிய மாநாடு நடக்கப்போகிறது. கட்சி வரலாற்றில் 1962க்குப் பிறகு அத்தனை பெரிய மாநாடு திட்டமிடப்பட்டதில்லை என்று பேசிக்கொண்டார்கள். சில மிக முக்கிய முடிவுகளை எடுக்கவிருப்பதாகவும் எம்.எல்.ஏ. சொன்னார். அதிலொன்று தலைவன் ஓய்வு அறிவிப்பாக இருக்கலாம் என்றும் பேசப்பட்டது.

“வயசாயிருச்சிரா முத்து. இதெல்லாம் காலாகாலத்துல கல்யாணம் மாதிரி நடந்துரணும். இல்லன்னு வெச்சிக்க, பின்னால ஒருத்தனும் மதிக்கமாட்டான். அதுவுமில்லாம ரெண்டாம் மட்டத்துல போட்டி, பொறாமை சாஸ்தியாயிருச்சி. ஒருத்தனை ஒருத்தன் எப்ப, எப்படி கவுக்கலாம்னு பாத்துக்கினு கிறானுங்க. ஒண்ணு சொன்னா நம்புவியா? நம்ம பீர்க்கங்கரணை ஜெயபாலு, வேளச்சேரி ராமகிருஷ்ணன், மருங்காபுரி தணிகாசலம் மூணு பேரும் எதிர்க்கட்சிக்குப் போனாலும் போயிருவாங்க போலருக்குது.”

“ஐயோ, என்னண்ணே சொல்றீங்க? நாம ஆண்டுக்கிட்டிருக்கும் இப்ப. எப்படி அவங்க...!”

“அதான் அரசியல்.



கொசு

அடுத்த எலக்சன்ல செயிக்கமாட்டம்னு ஒரு கணக்கு. போறும் இவனுகளுக்கு வோட்டுப் போட்டதுன்னு மக்கள் நினைச் சிட்டாங்கன்னு வையி... அவ்ளோதான். ஆனாலும் சனங்களுக்கு சமயத்துல போரடிச்சிரும். மாத்திப் போட்டுப் பாப்ப மேன்னு புத்திக்குள்ள ஒரு குட்டிச்சாத்தான் கொரலு வுடும்.''

''அது சரிண்ணே. அதுக்காகக் கட்சி மாறு வாங்களா? ஒரு காரணம் வேணாங்களா?''

''அதான் சொல்லுறனே... போரடிச் சிரும். மினிஸ்டரா இருக்கறதும் போரடிக் கத்தான் செய்யும். கணக்குப் போட்டுப் பாரு. பத்தொம்பது வருசம் இருந்திருக் காங்க. அடுத்தக் கட்டம்னு ஒண்ணு கெடி யாது. மினிஸ்டர், அவ்ளோதான். எப்ப ஆட்சி அமைச்சாலும் ஒரு சீட்டு கேரண்டி. ஒரு அம்பாசிடர் காரு கேரண்டி. ஒரு கட் டத்துக்கு மேல பணம்கூட போரடிக்கும் முத்து. ஆறு மாதிரி ஓடிக்கினே இருந் துட்டு, சடாருன்னு குட்டையா குந்திக் கிட்டா எப்பவுமே பேஜாருதான். நானெல் லாம் நேத்திக்கி வந்தவன். நீ நாளைக்கு வரப்போறவன். நமக்கு இதெல்லாம் கெடி யாதுன்னு வையி. கொட்டை போட்ட வனுக நெலைமை கஸ்டம்தான்.''

''என்னண்ணே இவ்ளோ சாதாரணமா சொல்லுறீங்க?''

''கட்சில நெறைய பொகைச்சல் இருக் குதுய்யா. இந்த மாநாட்டுல நீத்துரணும்னு தலைவர் நினைக்கறாரு. நாலஞ்சு பேரை கட்சிப்பணிக்கு வாங்கன்னு ஒப்பனா கூப்ட்டுக்கிட்டு, அவரும் ரிசைன் பண்ணிரு வார்னு சொல்றாங்க. புச்சா நாலஞ்சு மினிஸ்டர்ஸ் போடப்போறாங்க. அதுல ஒண்ணு நானு. இன்னொண்ணு பாளையங்கோட்டைக்காரரு. இது ஆல் மோஸ்ட் ஃபிக்ஸ்டு. நடுவால கொஞ்சம் பேஜார் பார்ட்டிங்க தொந்தரவு இருக்குது. அதுக்குத்தான் உன்னாண்ட சொன்னேன்.''

''அது ஒரு மேட்டரே இல்லண்ணே. நான் வெள்ளிக்கெழம போயிடுறேன். தலைவர் ஃபேமிலி முழுக்க என் மேற் பார்வைலதான் இருக்கும்னு அங்க அண் ணன் சொல்லிருக்காரு. ஜாலியா, தமாஸா பேசிக்கினே இருக்கச் சொன்னாரு. கத்தி கத்தி கொடநாடு எஸ்டேட்டு வெவகாரத்த வெளில எடுக்கணும்னாரு. நூறு ஏக்கரு ரெடியா இருக்குது, வேணும்னா முடிச்சிர லாம்னு எம்.எல்.ஏ. சொல்லிவுட்டிருக் காரும்மா, விருப்பமான்னு கேட்டுக் கறேன். சரின்னாங்கன்னா மிச்சத்த நீங்க பாத்துக்கப்போறீங்க.''

''அதாண்டா. இப்ப நானே கேட் டுருவேன். அடுத்த மினிஸ்டரா ஆக்கப் போறாங்கன்னு கட்சிக்குள்ளார பேசிக்கிட் டிருக்கறப்ப, நான் போய் அம்மிணி யாண்ட பேசினேன்னு தெரிஞ்சிதுன்னா, எவனாச்சும் குடிய கெடுப்பான். எனக்கு வேண்டப்பட்டவன், பக்கத்துலயே இருக் கறவன் எவனாச்சும் போனாலும் பிரச் னைதான். அதான் முன்னப்பின்ன மூஞ்சி தெரியாத ஒன்னிய இந்த வேலைக் குப் போட்டேன். அதுவுமில்லாம விசுவாச மானவன். உங்கப்பாரு காலத்துலேருந்து உங்க ஃபேமிலிய தெரியும். நீயும் நாலு காசு சேக்க வேணாமா?''

''அதெல்லாம் இருக்கட்டும்ணே. எப் படியாச்சும் நீங்க

பா.ராகவன்

மினிஸ்டர் ஆயிட்டிங்கன்னா எங்க குப்பத்துக்கு அப்பவாச்சும் ஒரு நல்லது நடக்காமலா போயிரும்?''

தங்கவேலு சிரித்தார். ''என்னா பயடா நீ? அப்பமும் குப்பத்தத்தானா யோசிப்ப? தபாரு, ஆட்சி கையில வந்திச்சின்னா மாநிலமே ஒரு குப்பம்தாண்டா.''

''பொதுவா அப்படித்தாண்ணே நினைக்கறது. ஆனா எப்பவும் குப்பங்கள யாரும் கண்டுக்கறதில்லண்ணே.''

''சைக ப்ராப்ளம்டா. எது செஞ்சாலும் நம்மாளுங்களுக்குப் பெரிசா தெரியணும். நாப்பதுக்கு அறுவது சைகல ஃப்ளெக்ஸ் அடிச்சி போர்டு வெக்கணும்.''

முத்துராமன் அமைதியாக நின்றிருந்தான்.

''அதான். எல்லா குப்பத்துலயுமே இதான் பிரச்னை. செய்யற வேலை வெளில தெரியாம போயிரும். ஒண்ணு சொல்லுறென். எந்த அரசியல்வாதியும் சனங்க நல்லா இருக்கணும்னு நினைச்சி வேலை செய்யறதில்ல இப்ப. இருவதாம் நூற்றாண்டு நடுவுலேருந்து ஒலக தருமம் மாறிடுச்சி. தான் நல்லா இருக்கணும். தின்னுட்டு ஏப்பம் வந்தப்பறம் கையில இருக்கற பொறைல கொஞ்சம் கிள்ளிப் போடுறது. தின்னது தெரியாம, போட்டது மட்டும் தெரியற மாதிரி நடந்துக்கறது. இது மக்களுக்கும் பழகிருச்சி. அவங்க கேள்வி கேக்கறதில்லடா. கேக்கலைன்னா கிடைக்காதுன்னு இன்னொரு தருமம் இருக்குது. அது இயேசுநாதர் காலத்துலேருந்து இருக்கற தருமம். தெரியும்ல?''

முத்துராமன் சிரித்தான். இதுதான் தன் சந்தர்ப்பமா? சரி கேட்டுவிடலாம் என்று முடிவு செய்து, ''தப்பா எடுத்துக்கா தீங்கண்ணே. நான் இப்ப கேக்குறேன். என்னிய ஒரு கவுன்சிலராக்குவீங்களா?''

தங்கவேலு அட்டகாசமாகச் சிரித்தார். ''அப்படி போட்றா அருவாள. சரியாத்தான் வளத்திருக்காரு உங்கப்பா.''

''இல்லண்ணே. நான்...''

''டேய், இப்படி வெளிப்படையா பேசின பாரு. இதான் உன்னாண்ட எனக்குப் புடிக்குது. சேவைதான் செய்யிறேன், ஒண்ணும் வேணாம்னு டயலாக் வுட்டிருந்தன்னா உன்னிய நம்பியிருக்க மாட்டேன். இப்ப பேசுன பாரு. இது கரெக்டு. உன்னிய நம்பலாம். சாவறவரைக்கும் நம்பலாம். சொல்லு. என்னா வேோணும் உனக்கு? கவுன்சிலர் ஆவணுமா?''

''அப்படி இல்லண்ணே. நான் அரசியலுக்குப் புதுசு. எடுத்ததும் கட்சில பெரிய பதவியெல்லாம் நினைக்கவே முடியாது. உங்க நிழல்ல இருக்கணும். அதேசமயம் நானும் வளரணும். அப்பால.. கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்காங்கண்ணே. மாநாடு முடிஞ்ச பத்தாவது நாள் கல்யாணம்... நீங்கதான் வந்து நடத்திக் குடுக்கணும்.''

''தெரியும் தெரியும். கேள்விப்பட்டேன். நல்லாரு. ஆனா ஒண்ணு தெரிஞ்சிக்க. கவுன்சிலர் ஆவுறது பெரிய விசயமில்ல. எப்ப அது பெரிய விசயமில்லியோ, அப்ப பெரிசா லாபமும் இல்ல. கொஞ்சம் வெயிட் பண்ணின்னா வேற ரூட்ல போட்டுருவேன். அரசியல்னு எறங்கிட்டா சம்பாதிச்சிரணும் முத்து. நாளைக்கு என்னா ஆவுமோ, ஏதொ? இருக்கறப்ப, கிடைக்கறப்ப சம்பாதிச்சிரணும்.''

''புரியுதுண்ணே.''

''எதுனா தொழில் வெச்சிக்கிறியா?''

''ஒண்ணுமில்லண்ணே. டைலரிங் பண்றேன். மாசம் அறுநூறு ரூவா வந்தா பெரிசு. ''

''எனுக்கு பினாமியா வேலை பண்றியா? இங்க மடிப்பாக்கத்துல ஒரு

"நான் அரசியலுக்குப் புதுசு. எடுத்ததும் கட்சில பெரிய பதவியெல்லாம் நினைக்கவே முடியாது. உங்க நிழல்ல இருக்கணும்."



''இங்க எதப் பத்தி கருத்துக் கணிப்பு நடத்தறாங்க?''
''கருத்துக் கணிப்பு வேணுமா, வேண்டாமான்னு!''
- சீர்காழி வி.ரேவதி

லேஅவுட் போடப்போறேன். ரியல் எஸ்டேட்டு. எடுத்து ஒழுங்கா செஞ்சிக் குடுக்கறியா? நல்ல சில்லறை வரும்.''

''சரிண்ணே'' என்றான் உடனடியாக. ''அப்படியே அந்த கவுன்சிலர் போஸ்டு...''

''செய்யலாம்டா. பெரிய விசயமில்ல. ஆனா அட்ரஸில்லாம போயிருவ. கொஞ்சம் வெயிட் பண்ணன்னா பெருசா அறுவடை பண்ணலாம். படிப்படியா வரணும்ங்கறது ஒரு இது. டமால்னு வர்றது வேற வழி. என் வழி ரெண்டாவதுதான். படிப்படியா வரணும்னு நெனச்சித்தான் அந்தப் பரதேசி இன்னிக்கி வட்டச் செயலாளரா ரிடையர் ஆவப்போறான். அதுவும் சொம்மா இல்ல. நாறிப்போய் வெளில போவப் போறான் பாத்துக்கினே இரு.''

அவர் பேசிக்கொண்டே இருந்தபோது போனடித்தது. எடுத்து 'ஹலோ' என்றார். அப்படியா, அப்படியா என்று கேட்டுக்கொண்டார். சந்தோஷமும் குழப்பமுமாக முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை முத்துராமன் கவனித்தான். வைத்ததும், ''என்னண்ணே'' என்று கேட்டான்.

''அது ஒண்ணுமில்லடா. அந்தப் பரதேசியோட ஒட்டல எவனோ கொளுத்திட்டானாம். பத்திக்கிட்டு எரியுதாம். சைதாப்பேட்டையே வேடிக்கை பாக்குதாம். பாக்கட்டும், பாக்கட்டும். அதுக்கு வேண்டியதுதான். அத்தவிடு. நாளைக்குக் காலைல இங்க வந்துரு. ஒரு முக்கியமான சோலி இருக்குது. தலைமையகத்துக்குப் போவணும். பெரிச பாத்துட்டு வரவேண்டியிருக்குது'' என்று அலட்சியமாகச் சொன்னார்.

முத்துராமனுக்கு திக்கென்றிருந்தது. மேற்கொண்டு சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்துவிட்டு, வெளியே வந்து பைக்கில் தாவி ஏறி உதைத்தான். இருபது நிமிடத்தில் சைதாப்பேட்டை. கேட்டை கிராஸ் செய்து அந்தப் பக்கம் போய் மார்க்கெட்டில் நுழைந்து சந்துகளில் நெளிந்து ஹோட்டல் வளாகத்தைத் தொட்டபோது பாதி எரிந்துவிட்டிருந்தது. தீயணைப்பு வண்டி ஒன்று தண்ணீரைப் பீய்ச்சி அடித்துக்கொண்டிருந்தது.

பதறி அருகே ஓடியபோது வட்டம் அவனை வெற்றுப் பார்வை பார்த்தபடி நடுவில் நின்றுகொண்டிருந்தார்.

''அண்ணே...'' என்று அருகே போனான்.

''திருப்தியாடா இப்ப? கொளுத்திட்டல்ல? கொளுத்திட்டில்ல? அவன் சொன்னதை முடிச்சிட்டல்ல? மறக்க மாட்டண்டா. சத்தியமா மறக்க மாட்டேன்!'' என்று காதோரம் சொன்னார்.

(தொடரும்)

மேஷம்: வீடு மாற்றம் உண்டாகும். பணச் சுமை விலகும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். ஆஞ்சநேயர் சுவாமியை சனிக்கிழமைதோறும் வழிபட்டு வர நற்பலன் உண்டாகும். ராகு/ கேது/குருவுக்கு விளக்கு ஏற்றி வருதல் நற்பலனை அளிக்கும்.

ரிஷபம்: திருமண காரியம் கைகூடி வரும். பொருளாதார சிரமம் இருக்காது. மகப்பேறு பாக்கியம் உண்டாகும். வீடு/ மனை வாங்க இது நல்ல காலம். வேலையில் உயர்வு கிட்டும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ராகு/கேது வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மிதுனம்: போட்டியில் வெற்றி கிட்டும். சொசைட்டியில் நல்ல மதிப்பு பெருகும். பணக்கஷ்டம் விலகும். சுபகாரியம் நடக்கும். ஆடை, ஆபரணப் பொருட்கள் சேரும். உடல் நலம் நன்றாக இருக்கும். குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கடகம்: திருமணம் கைகூடும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் உஷார். நெருங்கியவர்களை விட்டு விலகிப் போக நேரிடும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

சிம்மம்: உத்தியோகத்தில் இடம் மாற்றம் உண்டாகும். தடை விலகித் திருமணம் கைகூடும். மருத்துவச் செலவு உண்டாகும். சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும். விருப்பமான கல்லூரியில் இடம் கிடைக்கும். குரு/ராகு/ கேதுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்யவும்.

என் பெண்ணுக்கு எப்போது வரன் கிடைக்கும்? பரிகாரம் வேண்டுமா?

- ஜி. உத்திராடம், சீர்காழி

உங்கள் பெண்ணுக்கு இருபத்து மூன்று வயது ஆரம்பத்தில் திருமணம் நடக்கும். ஒரே பையன். உறவு கிடையாது. கும்ப லக்னத்தில் கன்னி ராசியில் செவ்வாய் 8ல் இருப்பது தோஷம் ஆகாது.

ஸ்ரீதர் என்னும் ஜாதகருக்குக் குழந்தை பாக்கியம் உண்டா?

- கமலா சடகோபன்,

ஸ்ரீதர், ப்ரியா ஜாதகங்களை ஆய்ந்த வகையில் 9.7.2007க்குப் பிறகு ஆண் மகவு பிறக்கும்.

பரத்வாஜ் பதில்கள்



நந்தைச பரத்வாஜ்

கன்னி: கடன் தொல்லை தீரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சுப காரியம் கைகூடும். வேலையில் நற்பெயர் கிட்டும். மனச்சலனம் விலகும். தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவீர்கள். வீடு/மனை வாங்க நல்ல தருணம். குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

துலாம்: பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்குக் கூட்டாளிகளுடன் மனவருத்தம் உண்டாகும். ராகு/கேது வழிபாடு செய்து வரவும்.

விருச்சிகம்: பணச் செல்வாக்கு மிகுந்து காணப்படும். புதிய தொழில் முயற்சி கை கொடுக்கும். செலவுகள் கட்டுக் கடங்கி இருக்கும். சுபகாரியம் கைகூடும். வேலைப் பளு அதிகரிக்கும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

தனுசு: புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடல் நலம் சீராகும். வேலையில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். மறைமுக, வேலைப்பளு அதிகரிக்கும். விரும்பிய பாடம் கல்லூரியில் கிடைக்கும். எதிர்பாராத தனம் கிட்டும். சனி/குரு வழிபாடு செய்து வர நற்பலன் கிடைக்கும்.

மகரம்: வேலைப்பளு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது உஷார். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை அவசியம். யாருக்கும் ஜாமீன் போடுவது/கடன் கொடுப்பது கூடாது. சனி/ராகு/கேது வழிபாடு செய்து வரவும்.

கும்பம்: தொழில் துறையில் நற்பெயர் உண்டாகும். கடன் தொல்லை குறையும். வராத நிலுவைகள் வசூலாகும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். வீடு மாற்றம்/தொழில் மாற்றம் ஏற்படும். புதிய பணி கிடைக்கும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர நற்பலன் பெருகும்.

மீனம்: ஆடை, ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். எண்ணங்கள் யாவும் ஈடேறும். மனச்சலனம் விலகும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வீடு, மனை வாங்க நல்ல தருணம். வழக்கு வெற்றி அளிக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும். ○



காதல் நந்தவனம்



தமிழ்நாட்டுல டீ.வி. சேனல் தொடங்கறது பெட்டிக் கடையைத் தொடங்கற மாதிரி ரொம்ப ஈஸியாயிடுச்சுங்க. இதையெல்லாம் பார்த்ததும் நாமளும் ஏன் ஒரு சேனலை ஆரம்பிக்கக் கூடாதுன்னு தோணுச்சு. என் ரெட்டை மண்டைக்குள்ள இருக்கற ஒற்றை மூளையைக் கசக்கி ஒரு திட்டம் போட்டிருக்கேன்.

சேனலோட பேரு 'லவ் டீ.வி.' முழுக்க முழுக்க லவ் வர்ஸ¨க்காக மட்டுமே 'லவ்' ப்ரோகிராமா ஒளிபரப்பும் சேனல் இது. வர்ற பிப்ரவரி பதினாலுல இருந்து ஆரம்பிக்கிற திட்டம். தமிழ்நாட்டுல இருக்கிற அத்தனை காதலர்களும் இதுல பங்குதாரர் ஆகலாம். ஆளுக்குப் பத்தாயிரம் அனுப்பினா போதும். 'கிராஸ்' செக்கா இல்லாம் பேரர் செக்கா அனுப்பினா வசதியா இருக்கும். உள்ளூர்காரங்க நேர்லயே வந்து கொடுக்கலாம்.

சரி, இந்த லவ் டீ.வி.யில் என்னென்ன ப்ரோகிராம் வரப்போகுதுன்னு தெரிஞ்சுக்க விரும்புவீங்க இல்லியா? ஒண்ணு, ரெண்டு சொல்றேன்.

● உங்க காதலிகிட்ட எதுக்காவது ஊடலாகி டூ விட்டுட்டீங்கன்னு வெச்சிக்கங்க, நேரா நம்ம ஸ்டேஷனுக்கு வந்துடுங்க. 'மன்னிச்சுடுங்க மகராசி' அப்படின்னு ஒரு ப்ரோகிராம்ல கேமரா முன்னாடி நின்னு, உங்க மனசுல இருக்கறதைக் கொட்டலாம். 'ஓ'ன்னு அழுது மன்னிப்புக் கேட்கலாம். அதை 'லைவ்வா' ரிலே பண்ணுவோம்.



● 'தினம் ஒரு பொய்'ங்கற ப்ரோகிராம்ல காதலன் / காதலியைப் பார்க்க லேட்டா போய்ச் சமாளிக்க, எப்படிப் பொய் சொல்லலாம்னு சொல்லித் தருவோம்.

● 'காதல் ஸ்பாட்'ங்கற ப்ரோகிராம்ல தமிழ்நாட்டுல எந்தெந்த ஊர்ல காதலர்கள் சந்திக்கும் இடங்கள் இருக்குன்னு காட்டுவோம்.

...இப்படி ஏகப்பட்ட திட்டங்கள் இருக்கு கைவசம்.

மதனராஜன்


இந்த வாரம் காதல் நந்தவனத்தை அலங்கரிக்கும் ஜோடி :

கவிதா - நெல்சன்

போட்டோவை அனுப்பியவர் : கவிதாவின் பாட்டி எஸ்.தனலட்சுமி.

(போனவாரம் அம்மா, இந்த வாரம் பாட்டின்னு காதல் நந்தவனத்துக்குப் பெரியவங்க ஆதரவு கூடிக்கிட்டே போறதைப் பார்க்கறப்ப சந்தோஷமா இருக்குங்க)

சில காதல் மொழிகள் : அனுப்பியவர் கன்னி



வாடி ஆர்.ஆர்.பூபதி

★ நாம் காதலிக்கும் பெண் சொல்வதும் செய்வதும்தான் எப்போதும் சரியாக இருக்கும்.

ஆல்ஃபிரெட் எத முஸ்ஸே

★ 'நாம் மட்டுமே காதலிக்க முடியும், நம்மைப் போல் இதற்கு முன்பு எவரும் காதலித்தது இல்லை. நமக்குப் பின்னும் எவரும் காதலிக்க இயலாது' என்று நாம் நம்பும் பருவம்தான் காதலின் உண்மையான பருவம்.

- யொஹன் கேத்தே

★ தன்னைக் காதலிப்பவனை விடப் புறக்கணிப்பவனையே பெண் தேர்ந்தெடுக்கிறாள். விவேகத்துடன் புறக்கணிப்பவன் ஒருநாள் காதலிக்கக் கூடும்.

- ஜான் ஹே

★ இன்னும் அதிகமாகக் காதலிப்பதைத் தவிர காதலைக் குணப்படுத்த வேறு வழி இல்லை.

- ஹென்ரி டேவிட் தோரோ

போன வாரம் சனிக்கிழமை எடிட்டோரியல்ல ஒரு கவியரங்கம் நடந்தது. கவிஞர் நா.வே.அருள், வைகைச்செல்வி வந்திருந்தாங்க. கல்கி ஆசிரியர் உட்பட கல்கி ஊழியர்கள் பலர் கலந்துக்கிட்டு கவிதைகளைப் பொளந்து கட்டிட்டாங்க. ரொம்ப சீரியஸா போய்ட்டிருந்தப்ப ஆசிரியர் 'இத்தனை இளைஞர்கள் இருக்கீங்க... யாரும் காதல் கவிதையே சொல்லலையே, காதல் கவிதை சொல்லுங்கப்பா'ன்னாங்க. உடனே குற்றால அருவி மாதிரி ஆளாளுக்குக் கொட்டினாங்க பாருங்க அடடா! அதுல லே-அவுட் ஆர்ட்டிஸ்ட் ச.கார்த்திகேயன் சொல்ல, நான் ரசித்த கவிதை :

சில பாதங்களை
கொலுசுகள் அலங்கரிக்கும்
சில பாதங்கள்
கொலுசுகளை அலங்கரிக்கும்
உன் பாதங்களோ
என் பார்வைகளை அலங்கரிக்கிறது.

(இதே மாதிரி நீங்களும் அனுப்புங்க.) ○



■ மருதன்




'அலுவலக நேரத்தில் ஊழியர்கள் யாரும் அலுவலகத்துக்குள் இருக்கக் கூடாது. மீறினால், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.'

பங்களாதேஷில் உள்ள கிரமீன் வங்கியின் (Grameen Bank) நுழைவாயிலில் இருக்கிறது இந்த அதிசய வாசகம்! 2006-ஆம் ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசு கிரமீன் வங்கிக்கும், அதன் நிறுவனரான முகமது யூனுஸுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. வெனிசுலா தேசத்து உயரிய விருதை (Order of the Liberator in First Class with Grand Decoration) யூனுஸ் சமீபத்தில் பெற்றிருக்கிறார். பிராக்கெட்டில் போட்டால் கூடப் புரியாத வேறு பல விருதுகளையும் அடுத்தடுத்து அள்ளியிருக்கிறார் இவர்.

தவிரவும், இரண்டு வாரங்களுக்கு முன்பு ஹிலாரி கிளிண்டனைச் சந்தித்து விரிவாகப் பேசிவிட்டுத் திரும்பியிருக்கிறார் யூனுஸ். ''பங்களாதேஷில் நீங்கள் பெற்ற வெற்றி மகத்தானது. எங்கள் நாட்டிலும் பல ஏழைகள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்விலும் மாற்றம் ஏற்படட்டும். அமெரிக்காவிலும் கிரமீன் வங்கியின் கிளையொன்றை தொடங்குங்கள்'' என்று யூனுஸிடம் விண்ணப்பித்திருக்கிறார் ஹிலாரி.

எல்லாம் சரி, கட்டுரையின் ஆரம்பத்தில் பார்த்த அந்த விநோத வாசகம் ஏன்? எந்த வங்கியாக இருந்தாலும், அதிகாரிகளும் ஊழியர்களும் அலுவலகத்தின் உள்ளே அமர்ந்து தானே வேலை செய்ய வேண்டும்? புதிதாக வந்து சேரும் பலரும் குழப்பத்துடன் முகமது யூனுஸிடம் முணுமுணுத்திருக்கிறார்கள். ஒரு முறையல்ல, இரு முறையல்ல. பல முறை.



■ முகமது யூனுஸ்

அவர்களிடம் யூனுஸ் தெளிவாக விளக்குகிறார்:

'உங்கள் அலுவலகம் உள்ளே அல்ல. வெளியில் இருக்கிறது. நீங்கள் சந்திக்க வேண்டியவர்களின் பட்டியல் உங்களுக்கு அளிக்கப்படும். அவர்களுடன் தான் நீங்கள் இருக்க வேண்டும்.'

அதெல்லாம் சரி, அப்புறம் அலுவலகத்தில் யார்தான் இருப்பார்கள்?

'கணக்கு வழக்கு பார்ப்பவர்களும், கம்ப்யூட்டர் ஆபரேட்டர்களும் மட்டுமே.'

கிரமீன் என்றால் கிராமத்திலிருந்து, கிராமத்தைச் சார்ந்த, கிராமத்துக்காக. கிரமீன் வங்கியைத் தொடங்குவதற்கு முன்னால் பங்களாதேஷில் உள்ள அத்



ஹிலாரி கிளிண்டனின் விண்ணப்பம்!

தனை வங்கிகளுக்கும் ஒரு நடை சென்று பார்த்து வந்திருக்கிறார் யூனுஸ். மேனேஜருக்குத் தனி அறை. வங்கி ஊழியர்களுக்கு அழகிய குளுகுளு கேபின்கள். கை மட்டும் உள்ளே நுழையும்படி ஒரு எலிப் பொந்து இருக்கும். வெளியில், வாடிக்கையாளர்கள் வரிசையாக நின்று கொண்டிருப்பார்கள். பொந்துக்குள் கையை நீட்டிப் பணத்தைப் பெறலாம், செலுத்தலாம்.

கிரமீன் வங்கி நிச்சயம் இப்படி இருக்கக்கூடாது என்று அன்றே முடிவு செய்துவிட்டார் யூனுஸ். மற்ற வங்கிகள் செய்யும் எந்தவொரு காரியத்தையும் கிரமீன் செய்யாது. முழுக்க முழுக்க அடித்தட்டு மக்களுக்கான நண்பனாக இது இருக்கப்போகிறது. பங்களாதேஷில் உள்ள வங்கிகள் அனைத்தும் இருப்பவர்களுக்கே அள்ளிக் கொடுக்கின்றன. பணம் இல்லாத ஏழைகள் கடன் கேட்டால், கையை விரித்து விடுகிறார்கள்.

பங்களாதேஷில் எழுபத்தைந்து சதவிகித மக்கள் ஏழைகள். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். கிரமீனில் வாடிக்கையாளர்கள் யாரும் எதிலும் கையெழுத்து போடத் தேவையில்லை. எந்த அப்ளிகேஷனையும் ஃபில் அப் செய்யத் தேவையில்லை. வங்கி அலுவலகத்துக்கு வர வேண்டியதில்லை. க்யூவில் நிற்க வேண்டியதில்லை. டோக்கன் கிடையாது. மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

கிரமீனில், வாடிக்கையாளர்கள் அக்கவுண்ட் நம்பராகப் பார்க்கப்படுவது கிடையாது. நகமும் சதையும் ரத்தமும் ஆன்மாவும் கொண்ட உயிராகப் பார்க்கப்படுகிறார்கள். அலுவலகத்தைத் தேடி அவர்கள் வரக்கூடாது. வங்கி ஊழியர்கள்தான் அவர்களை நாடிப் போக வேண்டும். வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை அக்கறையுடன் ஆய்வு செய்யவேண்டும். தேவைப்படுபவர்களுக்குக் கடன் வழங்க வேண்டும்.

'இந்த மாதம் எத்தனை ஆட்களைப் பார்த்தாய், எத்தனை பேருக்குக் கடன் கொடுத்தாய்? எத்தனை பேரிடம்



வசூலித்தாய்? நம் வங்கியின் அருமை பெருமைகளை எத்தனை பேரிடம் பரப்பினாய்?'- கிரமீன் வங்கி ஊழியர்களை இப்படியெல்லாம் கேட்க மாட்டார் யூனுஸ். அவருடைய கேள்விகள் வேறு மாதிரியானவை.

பணியில் சேர்ந்தது முதற்கொண்டு எத்தனை ஆட்களைச் சந்தித்தாய்? கிரமீன் வங்கியில் இணைந்தபோது, குறிப்பிட்ட வாடிக்கையாளரின் பொருளாதார நிலை எப்படி இருந்தது? அவர் வீடு எப்படி இருந்தது? எத்தனை முறை அவரைச் சென்று பார்த்தீர்கள்? எத்தனை வார, மாத இடைவெளியில்? கடன் பெற்றுக்கொண்ட பிறகு, எந்த வகையில் அவர் முன்னேறியிருக்கிறார்?

'குழந்தை குட்டிகளுடன் சுகமாக இருக்கிறார்' என்று பதிலளித்துவிட்டு தப்பிக்க முடியாது! மேலும் பல கேள்விகள் வரும். 'சௌக்கியமாக இருக்கிறார் என்று எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள்? என்ன மாற்றங்களைக் கண்டீர்கள்? ஏதாவது சிறுதொழில் ஆரம்பித்திருக்கிறாரா? தொழில் நன்றாக நடக்கிறதா? லாபம் கிடைக்கிறதா? அவர்கள் வீட்டுக் குழந்தைகள் எத்தனை முறை சாப்பிடுகிறார்கள்? என்ன சாப்படுகிறார்கள்?'

வாடிக்கையாளர்களுடன் இரண்டறக் கலந்தால் மட்டும்தான் இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கும். பேடில் சில வெள்ளைத் தாள்களைச் செருகிக்கொண்டு ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டு விடை கண்டு பிடித்துவிட முடியாது. 'அலுவலகத்தில் இருக்காதீர்கள், வெளியில் செல்லுங்கள்' என்று வங்கி ஊழியர்களிடம் யூனுஸ் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு இதுதான் காரணம்.

"கடன் கொடுத்து என்னத்தை அடையப் போகிறீர்கள் என்று சிரித்தவர்கள், இன்று அவரை மரியாதையுடன் பார்க்கிறார்கள்!"

Micro credit- இன்று உலகம் அதிகம் உச்சரிக்கும் வார்த்தை இதுவாகத்தான் இருக்கும். காரணம், முகமது யூனுஸ்! பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்குக் கடன் கொடுத்து என்னத்தை அடையப் போகிறீர்கள் என்று சிரித்தவர்கள், இன்று அவரை மரியாதையுடன் பார்க்கிறார்கள்.

இன்று மொத்தம் 1,050 இடங்களில் கிரமீன் வங்கியின் கிளைகள் பரவியிருக்கின்றன. 35,000 கிராமங்களில் தேனீக்கள் போல் பறந்துகொண்டிருக்கிறார்கள் அதன் ஊழியர்கள். இரண்டு மில்லியன் வாடிக்கையாளர்களில் 94 சதவிகிதம் பெண்கள். ஒவ்வொரு மாதமும் ஆயிரம் புதிய வாடிக்கையாளர்கள் கிரமீனுடன் இணைகிறார்கள். ஒவ்வொரு மாதமும் 30 மில்லியன் முதல் 40 மில்லியன் டாலர் வரை கடன் அளிக்கிறார்கள். மலேஷியா, பிலிப்பைன்ஸ், ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா என்று உலகெங்கும் கிரமீன் பரவிக்கொண்டிருக்கிறது. ●





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்



திருமாவளவனுடன் ஒரு நாள்!

''அண்ணன் மூணு மணிக்குத்தான் படுத்தார்'' என்று தயங்கியபடியே சொல்லும் அவர்களின் கண்களில் தூக்கத்தின் சாயல் படிந்திருந்திருக்கிறது. ஹாலில் பேச்சொலியைக் கேட்டு, கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன். சிவப்பு டீ ஷர்ட், வெள்ளை பேன்ட்டில் ட்ரிம்மாக இருப்பவரின் முகத்தில் பத்து நாள் தாடி!

''என்ன ஏதாவது தேவதாஸ் விவகாரமா?'' என்றால்,

''அந்த மாதிரி வம்புதும்பில் மாட்டிக் கொள்கிற ஆள் இல்லை நான். என் திரைப்பட நண்பர் ஒருவர், கொஞ்சம் வளர்ந்த தாடியுடன் உங்களை ஸ்டில்ஸ் எடுக்க வேண்டும் என்றார். அதுதான் இப்படி...'' என்றபடியே சென்னை அசோக் நகர் எஸ்.பி.லிங்கம் தெருவிலுள்ள அவரது வீட்டிலிருந்து, தெருவுக்கு வந்தவர், சுறுசுறுப்பாக நடக்கத் துவங்குகிறார்.

''உங்க படம் 'அன்புத் தோழி' என்ன ஆச்சு?''

''வெளியீடு கொஞ்சம் தாமதமாகிக் கொண்டு வருகிறது. அடுத்து ஒரு படத்திலும் தலைகாட்டியிருக்கிறேன்.''

தெருவில் பேசிக்கொண்டே அருகில் இருந்த பூங்காவை நோக்கிச் செல்கிறார் திருமா. சமீபத்தில் மூக்கில் சைனஸ் ஆபரேஷன் செய்து கொண்டிருக்கிறார். ''இந்த ஆபரேஷனுக்காக மீசையையும் எடுக்க வேண்டியதாகிவிட்டது'' என்கிறார் வருத்தத்துடன்.

சட்டென்று, ''கொஞ்சம் சீரியஸாகவே நடக்கலாம்; பேச்சு வேண்டாம்'' என்றவரின் நடையில் கிடுகிடு வேகம். அடுத்த அரை மணி நேரமும் வியர்வை சொட்டச் சொட்ட பூங்காவைச் சுற்றி வருகிறார்.

ஆச்சர்யமாகப் பார்க்கும் நம்மிடம், ''நமக்கு ஆரோக்கியம்தான் சொத்து!'' என்று சொல்லும் திருமாவளவனுக்கும்

கைவிட்டுப் போன சூர்ய நமஸ்காரம்!



ஒரு ஹெல்த் பிராப்ளம் - ஆட்டிப் படைக்கும் மைக்ரேன் தலைவலிதான் அது!

''சமயத்தில் மேடையில் பேசும் போதே அந்தத் தலைவலி வந்துவிடும். அப்போது சமாளிப்பதற்குள் போதும், போதும் என்றாகிவிடும்'' என்றவாறே பூங்கா பக்கத்துத் தெருவோர டீக்கடைக் குள் நுழைகிறார்.

சூடாகத் தேநீர் அருந்திவிட்டு வீட்டுக் குத் திரும்பியதும், வயிற்றுப் பகுதியை சமதளமாக்கும் மிஷினில் பயிற்சி தொடர்கிறது. சாப்பாட்டைக் குறைப்பதால் வயிற்றுச் சதை குறையாதாம்! வாக்கிங் மட்டுமே வயிற்றுச் சதை குறைக்குமாம்! அடுத்து உடலுக்குப் புத்துணர்ச்சியூட்டும் அக்குபஞ்சர் மிஷின் அதிர்வு களில் பத்து நிமிடங்கள் பயிற்சி!

அதற்குள் தோழர்கள் காலை தினசரிகளை அறைக்குள் வைத்துவிட்டுப் போக, திருமாவின் கவனம் திரும்புகிறது. செய்தித்தாள்களைப் புரட்டத் துவங்குகிறார். மது விலக்காரத்தில் டாக்டர் ராமதாஸ் சீரியஸாக இறங்கிப் பிரசாரம் செய்யும் செய்தியை வியப்புடன் பரிமாறிக் கொள்கிறார்.

பேச்சோடு பேச்சாக, ''என்ன ஆச்சு உங்க கல்யாணம்?

“தினமும் இயக்கப் பணிகள், சுற்றுப்பயணம் என்று இருக்கும் நான் திருமணம் செய்து கொண்டால், கணவனுக்குரிய நியாயமான கடமைகளை நிறைவேற்ற முடியுமா என்று பயமாக இருக்கிறது!”



கலைஞர் பெண் பார்க்கிறார் என்றுகூடச் செய்தி வந்ததே'' என்றோம்.

''ஆமாம்... நேற்றுகூட கலைஞர், 'என்னப்பா... பொண்ணு பார்க்கிறாங்களா... அல்லது நான் பார்க்கலாமா?' என்று கேட்டார். எப்போதும் இயக்கப் பணிகள், சுற்றுப்பயணம் என்று அலைந்து கொண்டிருக்கும் நான் திருமணம் செய்து கொண்டால், ஒரு கணவனுக்குரிய நியாயமான கடமைகளை நிறைவேற்ற முடியுமா என்று பயமாக இருக்கிறது''என்று கூறும் திருமா, சென்ற வருடம் ஜக்கிவாசுதேவ் ஆஸ்ரமத்துக்குச் சென்று சூரிய நமஸ்காரம் பயிற்சியை எட்டு நாட்கள் செய்திருக்கிறார்.

''எனக்கே ஆச்சர்யம். அந்த எட்டு நாட்கள் கதிர் வணக்கம் (சூரிய நமஸ்காரத்துக்கு திருமா வைத்திருக்கும் பெயர்) பயிற்சியில் நான்கு கிலோ எடை குறைந்து போனேன். ஆனால், வருத்தமெல்லாம் பயிற்சியைத் தொடர்ந்து செய்ய முடியவில்லையே என்பதுதான்! காலையில் எழுந்தவுடன், தொலைபேசியிலோ அல்லது நேரிலோ பல பிரச்னைகள் என் கவனத்துக்கு வந்து, என் சிந்தனையைப் பிடித்துக்கொண்டு விடுகின்றன'' என்கிறார்.

இதற்குள் வெளியே தோழர்களின் பேச்சொலி, விசிட்டர்கள் வந்து விட்டதைச் சொல்ல, அவசர அவசரமாகக் குளித்துவிட்டு ட்ரஸ் செய்துகொண்டு ஹாலுக்கு வருகிறார். வேலைவாய்ப்பு, ஆஸ்பத்திரிக்கு அனுமதி என்று பலவித கோரிக்கைகள்! நின்றபடியே கடிதம் எழுதிக் கையெழுத்துப் போடுகிறார்.

''இப்போது ஒரு தொலைக்காட்சிப் பேட்டிக்குச் செல்கிறேன். அப்புறம் மாலை மாநாடு, பெரம்பலூர் கூட்டம்... நாளை நாகப்பட்டினம், திருவாரூர், சீர்காழி, மாயவரம்'' என்று தொடர் நிகழ்ச்சிகள் இருப்பதை திருமா சொல்லும்போது, நமக்கே தலை சுற்றுகிறது. கலைஞர் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் மாநாடு நெல்லையில் நடக்கிறது. அதற்கான பணிகளும் திருமாவை அழுத்துகின்றன.

காரில் ஏறப் போகிறவரிடம் ''அண்ணே, அக்கா டிஃபன் கொண்டு வந்துட்டாங்க. சாப்பிட்டுப் போங்க'' என்று உதவியாளர் சொல்ல, ''இப்பவே நேரம் ஆச்சு; டிஃபனை காரிலேயே சாப்பிட்டுக்கிறேன், கொடுங்க'' என்றபடி கைகூப்பி விடைபெறுகிறார்.

- ப்ரியன்

படங்கள் : ஸ்ரீஹரி

லட்ச ரூபாய் பரிசுப் போட்டி முடிவுகள்


சர்வஜித் போட்டி ஐந்தாக வாசகிகளிடம் இன்பமும் - துன்பமும் கலந்த அனுபவங்களைக் கேட்டிருந்தோம். எழுதிக் குவித்துவிட்டார்கள். சிறந்தவையாகத் தேர்வு பெற்று தலா ஒரு மிக்ஸி பரிசு பெறும் அனுபவங்களில் மூன்று இந்த இதழில்.... இரண்டு அடுத்த இதழில்...

தென்றலாய் வருடிய வார்த்தைகள்!

எனக்கு ஒரே பெண். டாக்டராக இருந்தாள். திடீரென்று காலன் அவள் மேல் காதல் கொண்டு, ஒரு நிமிடத்தில் என்னிடமிருந்து பறித்து விட்டான். அதிர்ச்சியிலும், துக்கத்திலும் துவண்ட எனக்கு அவள் அடிக்கடி கூறும் 'மக்கள் சேவை, மகேசன் சேவை' என்ற வார்த்தைகள் காதில் தென்றல் போல் வருடின. ஐம்பது வயதான நான், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான டீச்சர்ஸ் கோர்ஸில் சேர்ந்து படித்து, பாஸாகி, கடந்த பதினான்கு வருடங்களாக ஒரு பள்ளியில் பணிபுரிந்து அந்தப் பள்ளியின்



லட்ச ரூபாய் பரிசுப் போட்டி முடிவுகள்



வளர்ச்சிக்குப் பாடுபட்டேன். அந்தச் சேவை, என்னைத் துக்கத்திலிருந்து உலுக்கி, சரி செய்து, பைத்தியம் ஆகாமல் காத்தது.

- சரோஜா ஸ்ரீநிவாஸன்,
பெங்களூர் - 42

எனக்குத் திருமணம் ஆனதும் முதலில் வந்த விசேஷம் தலைப் பொங்கல். பட்டுச் சேலையும், நகையும் அணிந்து, அருகில் புதுக் கணவருமாக மகிழ்ச்சியுடன் தோப்பில் உள்ள கோயிலுக்குப் பொங்கல் வைக்கச் சென்றிருந்தேன். நல்ல நேரத்தில் உலை பொங்கி வரும் போது, புதுப் பெண்ணாகிய என் கையால் அரிசியைப் போடப் போகும்போது, அலறியபடி என் கணவருடைய உறவினர் ஒருவர் ஓடி வந்தார். எனது பெரிய மாமனாரின் மகனும், மருமகளும் ஒரே இடத்தில் கார் விபத்தில் பலியான செய்தியைக் கேட்டதும் அனைவரும் எல்லாவற்றையும் அப்படியப்படியே போட்டு விட்டு ஓடத் துவங்கினார். எனக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை தோப்புக் காவலாளியிடம் அரிசியைக் கொடுத்து விட்டு நானும் ஓடினேன். யாரேனும் 'மருமகள் வந்த நேரம் சரியில்லை!' என்று ஏதாவது கதை கட்டி விடுவார்களோ என்று எனக்குப் பயம்! ஆனால், என் அத்தை ''அழாதேம்மா! நாங்கள் யாரும் எதுவும் நினைக்க மாட்டோம்! அவர்கள் வாங்கி வந்த வரம் அது! கவலைப்படாதே!'' என்று வாஞ்சையுடன் கூறினார். எனக்கு அதுவே மிகப் பெரிய ஆறுதலாக இருந்தது.

- பா.மலர், மதுரை -14

கல்கி பொன்விழா (ஜோக்) போட்டியில் ஜெயித்த என் கணவருடன் சிங்கப்பூர் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதுவும் கல்யாணமான மூன்றாம் வருடத்தில்!

சிங்கப்பூரில் இறங்கிய மறுநாள்... முஸ்தபா சென்டருக்குச் சென்றிருந்தோம்! 'பார்க்கப் பார்க்கப் பரவசம் என்பார்களே...' அங்கே நுழைந்த கணத்தில் இந்த உணர்வின் ஆதிக்கம்தான் எனக்குள். வாட்ச் செக்ஷனை பார்த்தோம்! 'அது என்ன விலை...? இது என்ன விலை?' என்ற ஆர்வக் கொப்பளிப்பில், ஆசை தீர விலையை விசாரித்து விட்டு அடுத்த செக்ஷனுக்குப் போனோம்! அப்போதுதான் ஞாபகம் வந்தது. 'ஹேண்ட்பேக்?!' கிட்டத்தட்ட அலறி விட்டேன். காரணம், அந்த பேக்கில் தான் எங்களின் பாஸ்போர்ட், விசா, டாலர் எல்லாம் இருந்தன. வாட்ச் செக்ஷனுக்குப் பரபரக்க ஓடிப்போய்க் கேட்டால் கார்டிடம் போய் கம்ப்ளெய்ண்ட் பண்ணச் சொன்னார்கள். ஓடிப்போய்ச் சொன்ன அடுத்த இருபதாவது நிமிடத்தில் எங்களுக்கு அழைப்பு வந்தது. 'இந்த பேக்தானே..? சரியாக இருக்கிறதா, பாருங்கள்'' என்றார்கள். எல்லாம் அப்படியே இருந்தது.

''ரியல்லி யூ ஆர் லக்கி'' என்று உளமுருகச் சொன்னதோடு நில்லாமல் ஸ்பெஷல் டீ கொடுத்து உபசரித்து மகிழ்வித்தார்கள்! வாழ்நாளில் மறக்கவே முடியாத அற்புத, ஆனந்தத் தருணம் இது!



- கஸ்தூரி, அகஸ்தியர்பட்டி

நினைவுகளைக் கிளறிய வெயில்!

கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருக்க, தான் இயக்கிய 'வெயில்' படத்தினை பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற 'கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிட்டு விட்டு மனசு நிறைய சந்தோஷத்துடன் திரும்பி இருக்கிறார் இயக்குனர் வசந்தபாலன். அவரது கேன்ஸ் அனுபவங்கள்:

“கேன்ஸ் நகரத்தில் உலகம் முழுவதிலுமிருந்து திரண்டு வந்த ரசிகர்கள் சினிமாவையே திருவிழா மாதிரி கொண்டாடி மகிழும் மேம்பட்ட ரசனையைப் பார்த்து வியந்தேன். பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசிலிருந்து மூன்று மணி நேர விமானப் பயணம் செய்தால் நீஸ் என்ற நகரம். அங்கே இருந்து காரில் சுமார் இருபது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது கேன்ஸ். கடலை ஒட்டிய சிறிய ஊர். சின்னஞ்சிறு பெட்டிக் கடைகளில் கூட திரைப்பட விழா பற்றிய விளம்பரம். கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு இது அறுபதாவது ஆண்டு. எனவே இந்த வருடம் ஸ்பெஷலாக அறுபதாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்தியாவின் திரைப்படங்களுக்கு ஸ்பெஷல் கௌரவம் அளித்தார்கள். 'உலக சினிமா' என்ற பிரிவில் இரண்டு நாட்கள் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு திரைப்படங்கள் திரையிடப் பட்டன. அவற்றில் ஒன்றுதான் வெயில்.

இயக்குனர் ஷங்கர், நடிகர் பசுபதி இருவருடன் நானும் சென்றிருந்தேன். மணிரத்னம், மனீஷா கொய்ராலா, ப்ரீத்தி ஜிந்தா உட்பட பலரும் வந்திருந்தார்கள். இரண்டரை மணி நேரப் படத்தை திரைப்பட விழா விதிப்படி 'தோற்றவன் வாழ்க்கை' என்ற கோணத்தில் பசுபதியின் கேரக்டருக்கு வலுவூட்டி, வேறு சில காட்சிகளை வெட்டி, இரண்டு மணி நேரமாகக் குறைக்க வேண்டி இருந்தது. வெயில் படத்தைப் பார்த்துவிட்டு ஒரு பெண்மணி, 'சிறு வயதில் என் மகன் எங்களை விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டான். உங்கள் படம் என் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டு, உணர்ச்சிவசப்படச் செய்துவிட்டது' என்று சொல்லிக் கண் கலங்கினார்.

கேன்ஸ் திரைப்பட விழாவில் என்னை மிகவும் அதிசயத்துக்குள்ளாக்கிய விஷயம், பிரபல அமெரிக்க இயக்குனரான மைக்கேல் மூருக்குக் கிடைத்த வரவேற்புதான். அமெரிக்காவில் கடைபிடிக்கப்படும் இன்சூரன்ஸ் திட்டங்களைக் கடுமையாக விமர்சனம் செய்து 'சிக்கோ' என்று ஒரு படம் எடுத்திருக்கிறார். சுமார் ஐம்பதாயிரம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய பிரம்மாண்டமான ஓர் அரங்கில் அந்தப் படம் திரையிடப்பட்டது. படத்தின் ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரே கைத்தட்டல்தான். படம் முடிந்த பிறகு அனைவரும் எழுந்து நின்று எழுப்பிய கரகோஷ ஒலி, இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது”

– கௌதம்ராம்



வசந்தபாலன்


* சுக்ரவார அம்பாள், கிள்ளப்பெற்ற ஸோமஸ்கந்தர், பொன்னனையாள்

கன்னத்து வடுவும்

கண்ணப்ப நாயனார் காளஹஸ்தீசருக்குத் தமது கண்ணையே பிடுங்கிக் கொடுத்தது பக்தியின் உச்சம். பொன்னனையாள் என்ற தேவதாஸி பெண்ணோ, ஈசனின் கன்னத்தில் வடு ஏற்படுத்திவிட்டாள்! அன்பு மீதூறியதால்தான் இந்த உரிமையை அவள் எடுத்துக் கொண்டாளாம். 'நமக்கு உரிமைப்பட்டவன்' என்று இறைவனை ஏற்றுக் கொண்டுவிட்டால் அவனை நாம் எப்படி வேண்டுமானாலும் 'ஆட்டிப் படைத்து' ஆனந்தப்பட தடையேயில்லை போலும்!

பொன்னனையாள் கிள்ளிய வடுவை, இன்னமும் கன்னத்தில் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார் திருப்பூவணத்து புஷ்பவனநாதர்.

சீதா ரவி

மதுரையிலிருந்து ராமேசுவரம் செல்லும் சாலையில் போனால் சுமார் 22 கி.மீ. தொலைவில் உள்ளது திருப்பூவணம் என்கிற சிற்றூர். இங்கேயுள்ள புஷ்பவனேசுவரர் கோயிலின் ஸோமாஸ்கந்த வெண்கல வார்ப்புச் சிலையின் வலது கன்னத்தில், மெல்லிய பிறைச் சந்திரன் வடிவில் இருக்கிறது பொன்னனையாளின் விரல் நக வடு! இந்த ஸோமாஸ்கந்த மூர்த்திக்கு வலது பக்கத்தில் சுக்ரவார அம்பாள் - சௌந்தர நாயகி என்ற பெயருக்கேற்ப அழகு சொட்டும் வடிவம். இடது பக்கத்தில் வார்ப்புச் சிலை வடிவில் அந்தப் பொல்லாத பொன்னனையாளும் இருக்கிறாள்!

ஏன் கிள்ளினாளாம்

கரத்து திரிசூலமும்!

அவன் கன்னத்தை..?

பொன்னனையாள் ஏழைப் பெண். அன்றைய நாளில் 'தேவர் அடியாள்' என்று வழங்கப்பட்ட, ஆலய நாட்டிய மங்கைகளுள் ஒருத்தி. சிவபெருமான் மீது அளவிட முடியாத பக்தி கொண்டவள். தினமும் அவனைக் கோவிலில் தரிசித்து, ஆனந்தக் களிப்பில் ஆடித் தீர்த்தாலும் தன் வீட்டிலும் அவன் வடிவத்தை வைத்து வழிபட வேண்டும் என்பது அவள் ஆசை. ஆனால், வசதி இல்லை. சிலை வார்க்க வேண்டுமானால் வெண்கலம் வேண்டுமே, அதற்கு எங்கே போவது?

''நீதான் எப்படியாவது என் ஆசையை நிறைவேற்ற வேண்டும்'' என்று சிவபெருமானிடமே மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

ஒரு நாள் வீட்டு வாசலில் ஒரு வழிப்போக்கர் வந்து நின்று, தட்டுமுட்டுத் தகரங்களை வாங்கிக்கொண்டு அவற்றுக்கு ஈடாக ஐம்பொன் தருவதாகச் சொல்லியிருக்கிறார். பொன்னனையாளும் பழசையெல்லாம் தேடியெடுத்துக் கொடுத்திருக்கிறாள். ஈடாகக் கிடைத்த ஐம்பொன்னைக் கொண்டுபோய் ஸ்தபதி ஒருவரிடம் தந்து சிலை வடிக்கும்படி கேட்டிருக்கிறாள். அவரும் சில நாட்களில், அழகான ஸோமாஸ்கந்த (சிவன்-பார்வதி-நடுவே சுப்ரமண்ய சுவாமியுடன் அமர்ந்திருக்கும் வடிவம்) மூர்த்தியை வார்த்துக் கொடுத்திருக்கிறார்.

சிலையின் அழகைக் கண்டு விளைந்த களிப்பு ஒரு பக்கம்; ஈசனே மனம் இரங்கி தகரத்தை ஐம்பொன்னாக்கித் தந்து தன் ஆசையைப் பூர்த்தி செய்துவிட்ட நெகிழ்ச்சி ஒரு பக்கம், கனவு மெய்ப்பட்டுவிட்ட ஆனந்தம் வேறு... எல்லாமாகச் சேர்ந்து பொன்னனையாளை தன்வயமிழக்கச் செய்தன. நீண்ட நாள் பிரிந்த தோழன் / தோழியை மீண்டும் காண்கிறபோது வார்த்தைகளற்றுப் போய்



★ ராஜகோபுரம்

கன்னத்தில் ஒரு கிள்ளு கிள்ள மாட்டோம்...? அந்த மாதிரி அழுத்தி ஒரு கிள்ளு கிள்ளிவிட்டாள்!

சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள் ஒன்றாகச் சொல்லப்படுகிறது இந்தப் புராணம். தகரத்தைப் பொன்னாக மாற்றித் தந்த ரஸவாத நாடகத்தின் அடையாள உத்ஸவம் பங்குனி உத்திரத்தன்று இவ்வூரில் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. மதுரையிலிருந்து இதற்காகவே மீனாக்ஷியும் சுந்தரேசுவரரும் இங்கே புறப்பட்டு வருவார்களாம். ஆனால் கடந்த பல வருடங்களாக இந்த மரபு வழக்கொழிந்து போய் விட்டதாம்.

''எப்படியாவது மீண்டும் அந்தப் பெருமை திருப்பூவணத்துக்கு நிலைநாட்டப்பட வேண்டும்'' என்று நம்மிடம் தெரிவித்தனர் ஆலய சிவாச்சார்யர்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கை சொக்கநாதர் - மீனாக்ஷி காதுகளில் விழாமல் இருக்காது; அதிகாரிகள் - அலுவலர்கள்தான் மனம் வைக்க வேண்டும்.



* பூவணநாதர்

புஷ்பவனேசுவரருக்குப் பங்குனியிலும் அம்பாள் சௌந்தராம்பிகைக்கு ஆடியிலும் உத்ஸவங்கள் கோலாகலமாக நடப்பதுடன், இவ்வூரில் ஐப்பசி மாதம் தீபாவளியையொட்டி கோலாட்டத் திருவிழாவும் கர்ண பரம்பரையாக நடைபெற்று வருகிறது. நல்ல மழை பெய்ய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சுவாமியை வீதி வலம் வரச் செய்து ஊரார் கோலாட்டம் ஆடியபடி வந்தனம் செய்வார்களாம். இந்தத் திருவிழா இன்றைக்கு ஒரு அடையாளச் சடங்காகச் சுருங்கிவிட்டது என்கிறார்கள். சிதம்பரம் நாட்டியாஞ்சலிக்கு நடனக் கலைஞர்கள் அழைக்கப்பட்டு, அது ஒரு கலை விழாவாகவே ஆகிவிட்டதுபோல இந்தக் கோலாட்ட உத்ஸவமும் ஓர் அரிய நடனக் கலை விழாவாக ஜொலிக்க வாய்ப்புகள் உள்ளன-நாட்டியக் கலைஞர்கள் முன் வந்தால்.

மிகப் புராதனமானது புஷ்பவனேஸ்வரர் கோயில். நால்வராலும் பாடப் பெற்ற தலம். மூவேந்தர்களும் வழிபட்ட க்ஷேத்திரம். வைகையாற்றங்கரையில் அழகான நிலைக்களனில் அமைந்திருக்கிறது.

ஆற்றில் நீர் ஓடிய காலத்தில், அரச மர நிழலும் அதையொட்டிய கோயிலும் எப்படி ஜிலுஜிலுவென்று இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்துத் திருப்திகொள்ள வேண்டியதுதான்.

கிழக்கு நோக்கிய ஐந்து நிலை ராஜ கோபுரத்தைப் பார்த்தால் கோயிலின் புராதானம் நமக்குப் புலப்படாது. சற்றே இறக்கத்தில் சரிந்து செல்லும் நுழை வாயிலினுள் சென்று விட்டாலோ, பழை மையும் பக்தியும் வரலாறும் கமழும் ஓர் அற்புத உலகம் நம்மை ஆட் கொள்ளும்.

நுழைவு மண்டபத் தூணில் பொன் னனையாளின் உருவச் சிலை வணங்கி நிற்கிறது. அதை வியப்புடன் பார்த்துவிட்டு நந்தி பகவானைக் கடந்து போனால், சற்று

> **முறையான் முடிசேர் தென்னர்**
> **சேரர், சோழர்கள் தாம் வணங்கும்**
> **திறையார் ஒளிசேர் செம்மை**
> **ஓங்கும் தென் திருப்பூவணமே**
>
> -ஞானசம்பந்தர்

உயர்ந்த மேடை போன்ற அமைப்பில் ஏறி புஷ்பவனேசுவரரின் கருவறையை அடைய வேண்டும். நுழைவாயில் இறக்கமாக இருந் தாலும் கருவறை வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படாத உயரத்தில் இருக்கிறது. பிராகார தேவதைகள் வழக்கமான சிவாலய முறைப்படி இடங்கொண்டிருக்கின்றனர். இங்குள்ள 'ராக்ஷஸ கண்ணன்' என்றொரு தேவதை பலருக்குக் குலதெய்வமாக இருந்து அருள் செய்து வருகிறார்.

பூவணநாதர் என்ற தமிழ்ப் பெயர் கொண்ட புஷ்பவனநாதர் வழக்கமான தோற்றத்தாராக அன்றி, அகன்ற உருவின ராகக் காட்சியளிக்கிறார். அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டுகிறபோது, குருக்கள் திருநீற்றுப் பட்டையையும் ருத்திராக்ஷ மாலைகளையும் விலக்கிக் காட்டுகிறார்கள். சிவலிங்க வடிவத்தில் பளீ ரென்று திரிசூல வடிவம் தெரிகிறது.

'வடிவேறு திரிசூலம்
தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம்
தோன்றும் தோன்றும்'

என்று சிலிர்ப்புடன் அப்பர் பெருமான் திருத்தாண்டகம் பாடியது இங்கேதான்!

அம்பாள் சௌந்தரநாயகி சிறியவளாக இருக்கிறாள். அவளுடைய வதனத்தின் தீர்க்கமான நாசியும் கண்களும் காலங் காலமாகச் செய்த அபிஷேகத்தில் தேய்ந்து மறைந்து போயிருக்கின்றன என்றாலும் தீபங்களின் ஒளியில் தெரியும் அவளுடைய மின்னல் கீற்றுப் புன்னகை மின்னனையாள் என்ற அவளது தமிழ்ப் பெயரை விளம்பிக் கொண்டிருக்கிறத!

தனிக்கோயிலில் 'பக்கத்துக் கட்டில்' இருக்கிறாள் இந்த அம்பாள். ஈசுவரன் சன்னதியிலிருந்து திறந்தவெளி கடந்து அவள் கோயிலுக்குப் போகையில், சுவாமி சன்னதிக்கு மேல் உள்ள விமான அமைப்பு தெரிகிறது. 'பாஸ்கர விமானம்' என்ற அபூர்வமான கட்டமைப்பு.

அம்பாள் சன்னிதி விசாலமாக இருக் கிறது. வலக் கையில் அல்லி மொட்டு ஏந்திக் கொண்டிருக்கிறாள். இடது கை மதுரை மீனாக்ஷியினுடையதைப் போல் துவண்டு நீண்டிருக்கிறது. திருமேனியின் மூன்று வளைவுகள் 'திரிபங்கி' வடிவத்தை தீர்க்கமாக வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

''ஸிந்தூர அருண விக்ரஹாம்'' என்று ஸ்ரீ லலிதாவுக்கான தியான சுலோகத்தைச் சொல்கிறார் குருக்குள். அந்த வர்ணனைக்கு முழுமையாய் உரியவளாய் மெல்லிய கீற்றுப் புன்னகையுடன் காட்சி தருகிறாள் அம்பாள். ''சுகார ரூபா கல்யாணி, கல்யாண குணசாலினி'' என்ற திரிசதி அர்ச்சனை, ஆரம்பிக்கிறார். தீப ஆராதனையுடன் அர்ச் சனை நிறைவுற நம் மனமும் நிறைந்து கண் தளும்புகிறது - அனாதி காலமாய் எத்தனை கோடி மக்களுக்கு இந்த பூவண ஈசனும் இந்த சௌந்தர நாயகியும் அருள் பொழிந்து வருகிறார்கள் என்பதை எண்ணி.

கனிமொழி கரெக்ட் சாய்ஸ்

எதிர்பார்த்தபடி அரசியலுக்கு வந்துவிட்டார் கவிஞர் கனிமொழி! நடுநிலையாளர்கள் மத்தியிலும் தி.மு.க.காரர்கள் மத்தியிலும் சிறிது சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் கனிமொழியின் அரசியல் பிரவேசம் குறித்து அவரது நண்பர்களிடம் கருத்துக் கேட்டோம்.

“சரியான நேரத்தில் கலைஞர், கனிமொழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்'' என்கிறார் கனிமொழியின் நண்பரும் விடுதலைச் சிறுத்தைகள் சட்டமன்ற உறுப்பினருமான ரவிக்குமார்.

''எங்கள் நட்புக்கு அடிப்படை இலக்கியமே! அவரது 'கருக்கும் மருதாணி' கவிதைத் தொகுப்புக்கு நான் முன்னுரை எழுதியிருக்கிறேன். ஏழை, எளிய மக்களின் மேல் கனிவு கொண்டவர் கனிமொழி. இன்றைய இளைய தலைமுறையின் தேவைகள் என்னென்னவென்று புரிந்து வைத்திருப்பவர். அவருடன் பேசும்போது புதிய சிந்தனைகள் ஒளிக்கீற்றாக விழுவதைப் பார்த்துப் பலசமயங்களில் பிரமித்திருக்கிறேன்.

'தி.மு.க.வில் தம் குடும்பத்தினரை கலைஞர் கைதூக்கி விடுகிறார்' என்று குற்றச்சாட்டு வைக்கிறார்கள். ஆனால், ஒருவரிடம் இருக்கும் ஆற்றலையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கனிமொழியைவிட ஆற்றல் குறைந்த பலருக்கு தி.மு.க.வில் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனவே, கலைஞரின் மகள் என்பதற்காக, ஆற்றல் மிகுந்த அவரை ஒதுக்கிவைக்கத் தேவை



யில்லை. இனி வரும் காலத்தில் தம் செயல்பாடுகள் மூலம், தாம் தேர்ந்தெடுக்கப்பட்டது சரியே என்று கனிமொழி நிரூபிப்பார். பொதுவாகப் பெண்கள் மத்தியில் தி.மு.க.வுக்குச் செல்வாக்குக் குறைவு என்ற பேச்சு உண்டு. இனி அந்தக் குறையைப் போக்குவதற்கும் கனிமொழியின் அரசியல் பிரவேசம் உதவும்.

கடந்த சில வருடங்களாக, அவரது செயல்பாடுகள், அவரது சமூக அக்கறையை வெளிப்படுத்துவனவாக அமைந்து வருகின்றன. நாட்டுப்புறக் கலைகள் மீதும், கலைஞர்கள் மீதும் அக்கறை கொண்டே சென்னை சங்கமத்தை முன்னின்று நடத்தினார். இப்போது நடந்து கொண்டிருக்கும் தி.மு.க. ஆட்சியில் பல திட்டங்களுக்கு அவர் வித்திட்டிருக்கிறார். குறிப்பாக, உடல் ஊனமுற்றவர்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப கட்டடங்களும், பேருந்துகளும் வடிவமைக்கப்பட வேண்டும்' என்ற அவரது யோசனை செயல்வடிவத்துக்கு வந்திருக்கிறது. சென்னையில் நூறு கோடி செலவில் பிரம்மாண்ட நூலகம் வர இருப்பதும் அவரது சிந்தனையின் வெளிப்பாடே! இப்படிச் சமூக அக்கறையுள்ளவர்; புதிய சிந்தனையாளர் நேரடி அரசியலுக்கு வருவது முற்றிலும் சரியே!'' என்கிறார் ரவிக்குமார்.

கனிமொழியின் தோழியும் கவிஞருமான தமிழச்சி என்ன சொல்கிறார்?

''எனக்கும் கனிமொழிக்கும் 2000-ஆம் ஆண்டுதான் நட்பு நெருக்கமானது. எனக்கும் கனிமொழிக்கும் பல்வேறு விஷயங்களில் எண்ண ஓட்டங்கள் ஒரே அலைவரிசையில் இருந்தமையால், புரிதல் சுலபமானது.

தம்மைச் சுற்றி எந்த ஒளி வட்டமும் இருக்கக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார். ரொம்ப சகஜமானவர்; பகட்டு, படாடோபம், ஆடம்பரம் என்பதை அவரிடம் பார்க்க முடியாது. பளபளக்கும் ஷாப்பிங் மால்கள், ஐந்து நட்சத்திர ரெஸ்டாரண்ட்கள் ஆகியவற்றுக்குச் செல்வதை விட, கடற்கரைக்குச் சென்று வருவதில் விருப்பம் உடையவர். சமீபத்தில் நாங்கள் இருவரும் 'மொழி' படத்துக்குச் சென்றிருந்தோம். தாமே கவுன்டருக்குப் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு மக்களோடு மக்களாகக் கலந்து விட்டார். அவருடன் நட்பாக இருப்பதில் சிறப்பு என்னவென்றால், நீங்கள் நீங்களாகவே இருக்கலாம். அவரது விருப்பு வெறுப்புகளை உங்கள் மீது திணிக்க மாட்டார்.



✱ ரவிக்குமார்



✱ தமிழச்சி

நகைச்சுவை உணர்வு அதிகம். கோபம் வந்தாலும் அதை ஆர்ப்பாட்டமாக வெளிப்படுத்தாமல், உறுதியாக வெளிப்படுத்துவார். வெளியூர்களுக்குப் போனால் கட்சிக்காரர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதில் மரியாதை வரிசையைக் கடைபிடித்து, யாருக்கும் எந்த வருத்தமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வார். ஒடுக்கப் பட்டவர்களுக்காக ஏதேனும் செய்ய வேண்டுமென்ற துடிப்புடையவர். புதிதாக வந்திருக்கும் இந்த ராஜ்யசபா உறுப்பினர், பொறுப்பைக் கொஞ்சம் தயக்கத்துடனேயே அவர் ஏற்றுக் கொண்டிருப்பார் என்பது என் கருத்து! என் தோழி கனிமொழிக்கு இது துவக்கம் தான்; பல சிகரங்களை அவர் தொடுவார். அதற்கான திறமை அவரிடம் நிறைய இருக்கிறது. கனிமொழி நிச்சயம் கரெக்ட் சாய்ஸ்'' என்கிறார்

- ப்ரியன்

படங்கள்: ஸ்ரீஹரி

கம்ப்யூட்டரால் முடியாதது என்ன?

● **மாதங்கி, கோவை**

உங்கள் புது நாடகம் என்ன கிரேஸி...?

'கண்டேன் கடவுளை' அல்லது 'சன் ஆஃப் சூப் பர்மேன்' எழுத ஆரம் பித்து விட்டேன்... ஜூலை யில் தங்கமேடையில் (வெள்ளித்திரை மாதிரி) கடவுளைக் காணலாம்... சங்கு, சக்கரத்துக்குப் பதி லாக செல்ஃபோன், லாப்-டாப் கம்ப்யூட் டர் ஏந்தி 'கஸ்டமர் - சர் வீஸுக்காக' கதாநாயகன் மாதுவைச் சந்திக்க வரு கிறார் கடவுள். இதற்கு மேல் கதையைச் சொல்ல மாட்டேன்... ஏன்னா எனக்கே தெரியாது... முதன்முறையாக சினிமாவுக்காக எழுதும் ஸ்பெஷல் நாடகம் இது...

● **ஆனந்தி, நங்கநல்லூர்**

அன்பே சிவம் .... அப்போ சக்தி...?

அந்த அன்பை வெளிப்படுத்தும் பண்பே - சக்தி...

● **எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்**

தொப்பையுடன் அதிகம் காணப்படுவது ஆண்களா...? பெண்களா...?

ஆணின் தொப்பை கர்வம்...! பெண்ணின் தொப்பை கர்ப்பம்... நான் தொப்பையும், தப்பையும் பார்ப் பதில்லை...

● **எஸ்.சுவாமிநாதன், மன்னார்குடி**

முன்னே பின்னே பார்க்காமல் காரியம் செய்ததுண்டா...?

ஸாரி... நான் ஆட்டோ ஓட்டியதில்லை...!

● **மதுரவல்லி, குடியாத்தம்**


'காஃபி டைம் வித் அனு' எப்படி இருக்கு கிரேஸி...?


அனுவின் 'அனு'சரணையான பேச்சால் காஃபி டைம் டிகிரி காஃபியாக மணக் கிறது.

● **ரங்கராஜன், டெல்லி**

? கம்ப்யூட்டரால் முடியாதது என்ன...?

போன மாதம் மனைவியோடு ஒரு திரு மணத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு வந்த நடுத்தர வயதுப் பெண்மணியைக் காட்டி, 'அவளை ஞாபகமிருக்கா... அதாங்க பத்து வரு ஷம் முன்னாடி நம்ம வத்ஸலா வளைகாப்





* சொல்ல முடியாத 'சே'!



* டிகிரி காஃபி!

புல பாத்தோமே... ராமர் கலர் புடவைக் குத் துளிகூட மேட்ச் இல்லாம கழுதை கலர்ல ஜாக்கெட் போட்டுக்கிட்டிருந் தாளே... நெத்தியில குங்கும டப்பாவை கவுத்த மாதிரி யானை பாதம் சைசுக் குப் பொட்டு வச்சுட்டு... ஹை-ஹீல் ஷூபோட்டுட்டு விந்தி விந்தி 'தத்தக்கா பித்தக்கா'ன்னு நடந்தாளே... அட அவ ஹஸ்பெண்ட் - அந்த நெட்டைக் கொக்கு, சாப்பிடும்போது ஏகமா ரஸத்தை இலைல விட்டு அது விழலுக் கிரைத்த நீர்போல எல்லார் இலைக்கும் ஓடிச்சே... மறந்துட் டீங்களா!''... பர்சனல் மனைவியின் இந்த 'ஞாபக சக்தி' பர்சனல் கம்ப்யூட் டருக்கு உண்டா...?

● **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

குழந்தையின் மழலைப் பேச்சு... குடி காரனின் உளறல் பேச்சு... என்ன வித்தி யாசம்...?

முன்னது வள்ளுவனின் 'குழல்' இனிது... பின்னது கள்ளுவனின் 'குழு றல்' கொடிது...

● **ப்ரதீப், பங்களூர்**

அண்ணே... முத்தத்தைக் கண்டு பிடிச்சது யாரு...?

வேற யாரு... வாயுள்ள புள்ளையும் வயசுக்கு வந்த பொண்ணுமாத்தான் இருக் கணும்... ஏன் தம்பி, கண்டுபிடிக்க முத்தம் என்ன எக்ஸிபிஷன்ல காணாமப் போன குழந்தையா... இல்லை ஆர்க்கிமெடிஸ் பிரின்ஸிபிளா...

● **என்.குப்புசாமி, கோவை**

'சோ'விடம் தங்கள் மனம் கவர்ந்த விஷயம்...?

பூதக் கண்ணாடி வைத்துத் துருவிப் பார்த்தாலும் 'சே' என்று சொல்ல முடி யாத ஒரே எழுத்தாளர் 'சோ'.

● **வீ.பெரியசாமி,தேளூர்**

மொட்டைக் கடுதாசி எழுதியிருக் கிறீர்களா...?

முடி உதிரும் வேகத்தைப் பார்த்தால் (இப்ப எனக்குத் தலையுதிர் காலம்) 2008ல் நான் எழுதும் எந்தக் கடுதாசியும் மொட்டைக் கடுதாசியாகத்தான் இருக் கும் போலிருக்கிறது. பள்ளி நாளில் என் னைப் பாடாய்ப்படுத்திய பூகோள வாத் யாரைப் பற்றி ஒரு 'மொ.க.' எழுதி னேன். எழுத்து சுவாரஸ்யத்தில் கடுதாசி யின் கடைசியில் 'இப்படிக்கு, பெயர் சொல்ல விரும்பாத மாணவன் மோகன்' என்று எழுதி மாட்டிக்கொண்டேன். பூகோள வாத்யார் என் முதுகில் அறைந் தது இன்னமும் 'மேப்' போல அழியா மல் இருக்கிறது.

● **குப்புசாமி, இந்திரா நகர்**

'தராசு - பதில்கள்' 'கிரேஸியைக் கேளுங்கள்' ஒப்பிடவும்...

முன்னது சீர் தூக்கிப் பார்க்கும் 'தராசு'... பின்னது சிரிக்க வைக்க முய லும் 'தமாசு'...

படங்கள்: பொள்ளாச்சி சுந்தரம்


கிரேஸியைக் கேளுங்கள்...

1. கன்னிக்கோவில் இராஜா, சென்னை - 18

? ''உங்களையும் உறவினர்களையும்விட நாட்டை முதலிடத்தில் வையுங்கள்'' என அப்துல்கலாம் நம் அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளாரே...?

! அப்துல் கலாமை, வைக்கிற இடத்தில் வைத்து விடுவார்கள்.

* வைக்கும் இடம்!




2. சோம.தேவராசன், நாச்சியார்கோவில்

? வரப் போகும் கலைஞர் டீ.வி., சன் டீ.வியை முந்துமா?

! சிவாஜியைப் பொருத்தமட்டில் முந்திவிட்டதே!

* பெயரிலும் சாகசம்!



3. லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? எம்.ஜி.ஆர். என்ற படத்தில் விஜயகாந்த் நடிப்பது பற்றி...?

! விஜயகாந்த் நடிப்பிலே ஸ்டன்ட் நிறைய உண்டு... இப்போது தலைப்பிலும்!

4. ஆர்.ராஜதுரை, சீர்காழி


? தமிழக அரசின் கலைமாமணி விருதுகள் அறுபது பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலானவர்கள் தி.மு.க. ஆதரவு கலைஞர்கள்; மற்றும் விடுதலைப் புலி ஆதரவாளர்கள்... இது சரியா?

! ''பட்டாணி, வேர்க்கடலை, சுண்டே...ல்'' என்று கூவி விநியோகிக்கப்படும் 'கலைமாமணி' விருது மட்டும்தானா கட்சி சார்புடன் வழங்கப்படுகிறது? இலவச டீ.வி. முதல் ராஜ்யசபா எம்.பி. பதவி வரை எல்லாமே கட்சிக் கண்ணோட்டம்தான், ராஜதுரை!

5. ப.இராம்முருகன், சிவகங்கை

? கலைஞருக்கு உமறுப்புலவர் விருது...?

விருதுப் பணம் ஒரு லட்சத்தை மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையாக அறிவித்தது போற்றுதலுக்குரியது; 'முஸ்லிம் மாணவர்களுக்கு' என்று வரம்பு விதித்ததுதான் இடிக்கிறது.



* ஒழுங்கு...

* ...நடவடிக்கை



6. கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை - 42

? யோகா பயிற்சி முடித்தவர்களைத்தான் அரசுப் பள்ளிகளில் யோகா ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று யோகா பயிற்சி ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியுள்ளார்களே?

! முறையாக யோகாசனம் பயிலாதவர்கள்

நீங்கள் கேட்டவை

அதனைக் கற்றுத்தரக் கூடாது என்பதில் சந்தேகமில்லை.

7. என்.கௌரி, செல்வபுரம் ❐

? ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்த நெருக்கத்தை நர்ஸ் ஜெயலட்சுமி இப்போது கூறி, கர்நாடக அரசியலில் பரபரப்பை உண்டாக்குவது சரியா?

! அக்கிரமம்தான் என்றபோதிலும் பா.ஜ.க. எம்.பி.யின் நடத்தையை நியாயப் படுத்திவிடாது. பொது வாழ்வில் இருப்பவர்கள் அப்பழுக்கற்ற ஒழுக்கம் உடையவர்களாக இருப்பது சமுதாயத்துக்கு அவசியம்; அவர்களுக்கும் நல்லது.

8. ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? உலகமே அறியாத இரண்டு வயதுக் குழந்தையைப் பள்ளியில் சேர்ப்பது சரியா?

! பெரும்பாலும் 'ஒரு குழந்தை குடும்பங்க'ளாகிவிட்ட இக் காலகட்டத்தில், குழந்தைகள் விளையாட சக குழந்தைகள் வேண்டுமல்லவா? அதற்கு இப்பள்ளிகள் இரண்டு - மூன்று மணி நேரம் வரை உதவலாம். ஆனால், அவற்றில் வசூலிக்கப்படும் கட்டணம் வாட்டுகிறது!



★ இடிக்கிற வரம்பு!

கலைஞர் டி.வி, சன் டி.வி.யை முந்துமா?



★ முந்திக் கொண்ட கலைஞர்!

9. எஸ்.சங்கர், மதுரை - 5

? தினகரன் நாளிதழில், வைகோவுடைய படத்துடன் செய்திகள் வரத் தொடங்கியுள்ளன; கவனித்தீர்களா?

! அடுத்து, சன் டி.வி.யிலும் தடை உத்தரவு நீக்கப்படும்!

10. அ.அப்துல் காதர், விளாத்திக்குளம் ★

? பல ஆண்டுகள் உடல் - உள்ளத்தால் இணைந்து கணவன் - மனைவியாக வாழ்ந்தவர்களுக்கிடையே சின்னச் சின்ன சிக்கல் ஏற்பட்டால்கூட மூன்றாவது நபர் வந்துதான்

தராசு

தீர்த்து வைக்க வேண்டும் என்கிற சூழ்நிலை இன்று ஏற்பட்டிருப்பது பற்றி...?

! தவறில்லை. 'கணவன் கூறுவது வேத வாக்கு' என்று கருதிய காலம் மலையேறி விட்டது. தம்பதி இடையே இறுக்கம் அதிகமாகிறபோதும் சுயபச்சாதாபத்தினாலும் பார்வை கோணலாகி விட வாய்ப்புகள் அதிகம்! நடு நோக்கரிடம் - அதிலும் மனோதத்துவம் தெரிந்தவரிடம் - செல்லும் போது, அவர்கள் நம்மையே நமக்கு உணர்த்தி சரி செய்ய முடியும்.



✱ நீங்கிய தடை!



✱ குறள் வாசகம்!

11. க.ராமநாதன், புதுக்கோட்டை

? விடுதலைப் புலிகள் தமிழர்களைக் கடத்தி, தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டது சரியா?

! பெரும் தவறு அல்ல; பெரும் குற்றம்! அதைவிடப் பெரிய குற்றம், அதைக் கண்டிக்காமல் மௌனம் சாதிக்கிற, தமிழகத்தில் உள்ள புலி ஆதரவுத் தலைவர்களின் போக்கு.

12. ஜே.துரைராஜ், சென்னை - 116

? அச்சுதானந்தன், பினராயி விஜயன் இருவரும் தங்கள் கருத்துகளை வெளிப்படையாக மோதவிட்டது தவறு என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்களே?

! 'பொலிட் பியூரோ' (அரசியல் கொள்கை நிர்ணயக் குழு)விலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களே! தவறை ஒப்புக் கொள்ளவில்லையெனில் பதவிகளே பறிபோயிருக்குமே!

13. பி.இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

? அழகிரியின் பிறந்த நாளின்போது, மதுரையெங்கும் 'அகர முதல எழுத்தெல்லாம் அழகிரி முதற்றே உலகு' என்று டிஜிட்டல் பேனர்கள் காணப்பட்டனவாமே... காக்காய் பிடிக்கவும் ஐஸ் வைக்கவும் ஓர் அளவே இல்லையா?

! 'வாழும் வள்ளுவர்' இயற்றித் தந்த குறளாகக்கூட இருக்கலாம்! யாருக்குத் தெரியும்?

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:
என்.கௌரி, செல்வபுரம், கோவை

★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
அ.அப்துல் காதர், விளாத்திகுளம், தூத்துக்குடி

வாசக தராசுகளே!

இந்த வாரம் நீங்கள் மிகவும் ரசித்த பதில் எது? ஒரு போஸ்ட் கார்டில் அதன் எண்ணை எழுதி, முகவரிப் பகுதியில் வாசக தராசு 10.6.07 என்று குறிப்பிட்டு 9.6.07 தேதிக்குள் அனுப்புங்கள். மிக அதிக வாக்குகளைப் பெறும் பதிலைக் குறிப்பிட்டு எழுதிய வாசகர்களுள் ஒருவருக்குக் குலுக்கலில் ரூ.100/- பரிசு.

20.5.07 கல்கி இதழில் வெளியான போட்டியில் பரிசு பெறும் வாசகர்:
எஸ். இரமணி, மதுரை,
அதிக வாக்குகள் பெற்ற கேள்வி எண்: 6

வட்டமேஜை

எப்போதும் முதல்வர்!

கணினி சாம்ராஜ்யத் தலைவன் பில் கேட்ஸ் தொழில் ரீதியாக ஓய்வு பெற்றாலும், சமூகப் பணிகளில் எப்போது முதல்வராக விளங்குவதும் சாதனைதான்.

- எஸ்.ஜானகி, உடுமலை

உலகின் பெரும் பணக்காரர் என்ற பட்டியலில் இருந்து பெயர் வெளியேற்றப் பட்டாலும் மனித சரித்திரத்திலேயே மிக அதிகளவு தானம் கொடுத்தவர் பட்டியலில் பில் கேட்ஸின் பெயர் இடம்பெறும் எனப் படித்தபோது, பெருமையாகத்தான் இருந்தது.

- தர்மன் பெரியசாமி, சென்னை

என்.சொக்கனின் தொடர் படிக்கப் படிக்கச் சுவையாக அமைந்தது. அதுவும் கடைசி பத்தியை பொன்னெழுத்துகளில் பொறிக்க வேண்டும்!

- அ. முரளிதரன், மதுரை - 3

'**கு**ண்டர்கள் ராஜ்ஜியம்' தலையங்கத்துக்கு மணிமகுடம்போல இருந்தது பிள்ளையின் கார்ட்டூன்!

- சங்கர், மதுரை

சில்மிஷ சினிமா கம்பெனிகள் செய்யும் தவறால் ஒருவர் நடிகனாவதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பதைப் பார்த்திபன் மிகத் தெளிவாக விளக்கி விட்டார்.

- ஏ.ஜி.கல்யாணசுந்தரம், மணியக்காரன்பாளையம்

கருத்துக் கணிப்புகள் கேலிக்கூத்தாகி விட்டதை 'கருத்துக் கடுப்பு' சிறுகதை நன்கு உணர்த்தியது.

- பி.சிவா, பாளையங்கோட்டை

'**ரே**ஷன் கார்டு பெறுவது எப்படி?' விளக்கம் சிறப்பானது. பாண்டிக்கு மாறுதலாகிச் சென்ற எனது உறவினரால் இன்னும் புதிய ரேஷன் கார்டு பெற இயலவில்லை. அவருக்கு கல்கி இதழ் வாங்கி அனுப்பிவிட்டேன்!

- ஆர். இராமமூர்த்தி, சிதம்பரம்

'**ம**துரை நிகழ்வுக்குப் பிறகு கலைஞரின் பொன் விழாவே நடந்திருக்கக் கூடாது' என்ற தராசுவின் ஆணித்தரமான பதில் அசர வைத்துவிட்டது.

- சாத்தூர் சபாபதி, திருச்சி

ஹாக்கியை இந்திய அரசு தகுதியிறக்கம் செய்திருப்பது, தடுமாறிக் கொண்டிருக்கும் இந்திய ஹாக்கியை கீழே தள்ளியதற்குச் சமம்.

- சிவா, பாளையங்கோட்டை



உங்கள் ஊரில் கல்கி

அன்பு வாசகர்களே!

கல்கி நிறுவனத்திலிருந்து மதிப்புமிக்க வாசகர்களாகிய உங்களைச் சந்திக்க உங்கள் ஊருக்கே வருகிறது கல்கி ஆசிரியர் குழு. இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு அவசியம் கலந்து கொண்டு, 'கல்கி' வார இதழைப் பற்றிய உங்களுடைய மேலான யோசனைகளையும் கருத்துகளையும் பரிமாறி, ஆக்கபூர்வமான யோசனைகளின் மூலம் கல்கி இதழை மேலும் மிளிரச் செய்ய உதவ வேண்டுகிறோம்.

இதயத்தை இதமாக்கும் 'கலகல' நிகழ்ச்சிகளும், இன்ப அதிர்ச்சியூட்டும் பரிசுப் போட்டிகளும் உண்டு. அவசியம் கலந்துப்பீங்கதானே!

– ஆசிரியர் குழு

ஞாபகமிருக்கா ரீடர்ஸ்!

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

வாசகர் சந்திப்பு

சனிக்கிழமை - 09.06.07
சேலம்
இடம்: ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்,
ஸ்ரீ சுகவனேஸ்வரர் கோயில் அருகில்,
சேலம் - 1. தொலைபேசி: 2451494
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 10.06.07
வேலூர்
இடம்: டார்லிங் ரெஸிடென்ஸி,
118, ஆபீஸர்ஸ் லைன், வேலூர்-1.
தொலைபேசி: 2213001
நேரம்: மாலை 4.25

சனிக்கிழமை - 23.06.07
கும்பகோணம்
இடம்: ஹோட்டல் வெங்கட்டரமணா (மாடி),
டி.எஸ்.ஆர். பெரிய தெரு,
காந்தி பார்க் அருகில்
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 24.06.07
திருச்சி
இடம்: ஹோட்டல் அஜந்தா,
மத்தியப் பேருந்து நிலையம் அருகில்
நேரம்: மாலை 4.25

ச்சியும்... கலைஞரும் திருச்சியும்... கலைஞரும் திரு ... ருச்சியும்...



கல்கி

குடும்பத்துடன் படிக்க...

10.6.2007

இணைப்பு




3 பெயர் மாற்றிக் காட்டியவர்!



5 மாநாடுகளும் திருச்சி மாநகரமும்...



10 உள்ளாட்சியில் மலர்ந்தது நல்லாட்சி!



12 கலைஞரும் அன்பிலாரும்...

கல்கி



எழுத்துப் பூக்களை, வார்த்தை நார்களில் வண்ணமிகு மாலையாக்கி, வடிவழகு வள்ளுவக் கலைஞருக்கு நாள்தோறும் சூட்டி மகிழ்கிறேன். 'தமிழர் வாழ்வும், தமிழர் வளமும் மங்காத கலைஞரென்று சங்கே முழங்கு' என புதுக்கவிதை பாடிட விழைகிறேன். அகவை எண்பத்து நான்கில் அடியெடுத்து வைக்கும் கலைஞருக்கு, தமிழர்களின் அடி மனத்தில் அவசியம் இடமிருந்தே ஆகுமென இறும்பூதெய்துகிறேன்.



நுழைவாயில்

ஏற்றத்தாழ்வுகள் இல்லாது ஒழிந்திட, தைப்பொங்கல் நன்னாளில் எங்கும் சமத்துவப் பொங்கல் வைத்திட, சரித்திர ஆணையிட்ட சமத்துவக் கலைஞர் அவர்.

சென்னையிலிருந்து திருச்சி வருபவர்களுக்கு, மாநகர நுழைவாயில் காவிரி ஆறு. கலைஞரின் அரசியல்களத்துக்கு நுழைவாயில் ஆனதோ திருச்சி மாவட்டம். கலைஞரும் திருச்சியும்... என்கிற இந்தப் பதினாறு பக்க வண்ண மலரோ, ஏற்றமிகு கலைஞருக்கு இந்த எளியோனின் அன்புப் பரிசு.

இப்படிக்கு,
கழகத் தொண்டன்
ப.கதிர்வேல்

* மல்லியம்பத்து கிராமத்தில் சமத்துவப் பொங்கல்...





பெயர் மாற்றிக் காட்டியவர்!

மும்முனைப் போராட்டங்களில் ஒன்றாக முகிழ்த்ததுதான் கல்லக்குடி போராட்டம். 1953, ஜூலை 15 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. புகை வண்டி நிலையத்துக்கு ஏற்பட்டிருந்த 'டால் மியாபுரம்' என்கிற பெயரினை, தமிழில் 'கல்லக்குடி' என மாற்றிட வேண்டுமென துவங்கிய போராட்டம் அது.

அதனை அவரது சொல்லோவியத்தில் காண்போம்:

'அந்த நாளும் வந்தது. அலறியவாறு புகை வண்டியும் வந்து நின்றது. அந்தப் புகை வண்டி புறப்பட ஆயத்தமானது. என் தலைமையின் கீழ் இருந்த இருபத்தைந்து நபர்களை ஐந்து பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியினரும் புகை வண்டியின் முன்பே படுப்பது என்று தலைவன் என்கிற முறையில் கட்டளையிட்டேன். முதலில் ஐவர். நான், முல்லை சக்தி, கஸ்தூரி, குமாரவேல் மற்றும் குழந்தைவேல் என ஐவரும் தண்டவாளத்தினைத் தலையணையாக்கி, இருப்புப் பாதையினைப் பஞ்சு மெத்தையாக்கிப் புகைவண்டிக்கு வெகு அருகிலே சாய்ந்தோம்!'



✱ கல்லக்குடி திறப்புவிழா!

காவல்துறையினரால் கலைஞர், கவியரசு கண்ணதாசன் உட்பட முப்பத்து நான்கு நபர்களுக்கு ஐந்து மாதம் கடுங்காவல் தண்டனையும், முப்பத்தைந்து ரூபாய் அபராதமும் விதிக்கப்படுகின்றன. திருச்சி மத்திய சிறைச்சாலையில் அவர்கள் அனைவரும் அடைக்கப்படுகின்றனர்.

தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அதன் கோரிக்கையினை சட்ட வடிவில் நிறைவேற்றிடப் பெரிதும் முயற்சிகள் மேற்கொண்டார் கலைஞர்.

'டால்மியாபுரம்' என்பது 'கல்லக்குடி' எனப் பெயர் மாற்றம் பெற்றது. அதற்கான பாராட்டு விழா கல்லக்குடியில் நடந்தது. புகைவண்டி நிலையத்தில் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் 'கல்லக்குடி - பளங்காநத்தம்' பெயர்ப் பலகையை 18.1.1970 அன்று முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார். விழாவில் கலைஞருக்கு 'கல்லக்குடி கொண்டான்' என்கிற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.



✱ கல்லக்குடி போராட்டம்!



தொடர் வெற்றிக்கு வித்திட்ட முதல் வெற்றி!



* கவுண்டம்பட்டி முத்து

தி.மு.கழகம் அரசியல் கட்சியாக உருவெடுத்து 1957 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக முடிவானது. அப்பொழுது திருச்சி மாவட்டம் குளித்தலை தொகுதியில், கலைஞர் போட்டியிடுவதென முடிவானது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் தியாகி கே.ஏ.தர்மலிங்கம். வாக்கு சேகரிக்கச் செல்லும் கிராமங்களில் எல்லாம் கலைஞருக்கு அமோக வரவேற்பு! நங்கவரம் பண்ணைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த விவசாயிகளின் ஏகோபித்த ஆதரவு (தேர்தலில் வெற்றி பெற்றுச் சென்று, சட்டப் பேரவையில் கலைஞர் ஆற்றிய முதல் உரையே, நங்கவரம் பண்ணை விவசாயிகளின் கோரிக்கைகளை மையமாகக் கொண்டுதான் அமைந்தது).

வாக்குச் சேகரிப்பில் கலைஞருக்கு உற்ற துணையாக கவுண்டம்பட்டி முத்து, குளித்தலை முத்துகிருஷ்ணன், இளமுருகு பொற்செல்வி, உப்பிடமங்கலம் எட்டியண்ணன் எனப்படும் எட்டியப்ப கவுண்டர், தண்ணீர்ப்பள்ளி பெரியசாமி, மருதூர் தர்மலிங்கம், வதியம் முத்துசாமி, காக்காவாடி ராமசாமி ஆகியோர் கடும் பணியாற்றினர்.

கலைஞருக்கு 22,785 வாக்குகள் கிடைத்தன. கே.ஏ.தர்மலிங்கத்துக்கு 14,489 வாக்குகள். ஏராளமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் கலைஞர்.

''வெற்றி பெற்றவுடன் கலைஞர், அண்ணாவிடம், 'இந்த வெற்றி என்னாலும் கிடைக்கவில்லை; உங்களாலும் கிடைக்கவில்லை. அரும்பாடுபட்ட குளித்தலை தொகுதி கழக முன்னணியினரால் கிடைத்தது' என்று கூறினார். குளித்தலை தேர்தலிலிருந்து (1957) இன்று (2007) வரை கலைஞரிடம் பழகி வருபவன் நான். தமிழகச் சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் இன்றுவரை கலைஞர் தொடர்ந்து வெற்றி பெற்றுவருவதற்கு, அன்றே வித்திட்டது குளித்தலை!'' என்கிறார் கவுண்டம்பட்டி முத்து.



* 1957 தேர்தல் ஆலோசனைக் கூட்டம் : அண்ணா, கலைஞர் மற்றும் கழக முன்னணியினர்



மாநாடுகளும், திருச்சி மாநகரமும்!

★ 'கழகம் முகிழ்த்த நான்கு மாதங்களுக்கெல்லாம் கூடுகிறது முதல் முறையாக' என்று அண்ணாவால் வர்ணிக்கப்பட்ட முதல் தி.மு.க. மாநாடு, 1.1.1950 அன்று திருச்சியில் நடைபெற்றது. இம்மாநாடு வாயிலாக தி.மு.கழகத்தின் வரலாற்றில் முதல் அத்தியாயத்தை எழுதித் துவக்கி வைத்தது திருச்சி மாவட்டம்.

★ இரண்டாவது மாவட்ட மாநாடு 25.4.1953 அன்று இரு தினங்கள் திருச்சி மாவட்டம், இலால்குடியில் நடைபெற்றது. மாநாட்டில் சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர். இருவரின் நாடகங்கள் அரங்கேறின.

★ தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாடு 1956-ஆம் ஆண்டு மே மாதம் 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்கள் திருச்சியில் நடைபெற்றது. தேர்தலில் தி.மு.க. போட்டியிடுவதா அல்லது வேண்டாமா என்கிற வாக்கெடுப்பு மாநாட்டுப் பந்தலிலே நடத்தப்பட்டது. தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்ற வாக்குகள் அடங்கிய சிவப்புப் பெட்டியில் 56,942 வாக்குகளும், பங்கேற்க வேண்டாம் என்கிற கறுப்புப் பெட்டியில் 4,203 வாக்குகளும் இடப்பட்டிருந்தன.



★ அன்பில் தர்மலிங்கம்

★ 26.1.1960 அன்று திருச்சி தேவர் மன்றத்தில், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் மாநாடு நடைபெற்றது.

★ 19.2.1970 அன்று திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் தி.மு.க. மூன்றாவது மாநில மாநாடு நடைபெற்றது. 'மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி!' என்கிற முழக்கத்தினை முதன் முதலாக இம்மாநாட்டில்தான் கலைஞர் வெளியிட்டார்.

★ 23.12.1978-ல் திருச்சியில் நான்காவது மாநில மாநாடு. அது இந்தி எதிர்ப்பு மாநா



★ 1970 மாநாடு மேடையில் கலைஞருக்கு வெள்ளிச் செங்கோல் அளிக்கிறார் எம்.ஜி.ஆர்.



★ வி.பி.சிங் வியந்த பேரணி! (1990)

டாக அறிவிக்கப்பட்டது.

★ 1990 பிப்ரவரி 9, 10, 11 தேதிகளில் தி.மு.கழக ஆறாவது மாநில மாநாடு திருச்சி, காஜாமலை இராணுவத் திடலில் நடைபெற்றது. மாநாட்டுச் செயலாளர் கே.என்.நேரு. 'திருச்சி திருப்புமுனை' மாநாடாக அது அறிவிக்கப்பட்டது.

★ 1990 மாநாட்டில் இளைஞரணிப் பேரணி. பல மணி நேரம் நடைபெற்ற கட்டுப்பாடான பேரணி ஊர்வலம் கண்டு, வி.பி.சிங் வியந்து பாராட்டினார்.

★ 1996-ல் தி.மு.க.வின் எட்டாவது மாநில மாநாடு ஜனவரி 26, 27, 28 தேதிகளில் திருச்சி விமான நிலையம் அருகே கொட்டப்பட்டில் நடைபெற்றது. மாநாட்டுச் செயலாளர் கே.என்.நேரு.

★ 2006-ல் தி.மு.க.வின் ஒன்பதாவது மாநில மாநாடு திருச்சி விமான நிலையம் அருகே நடைபெற்றது. மாநாட்டுச் செயலாளர் கே.என்.நேரு. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்றனர். காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி சோனியா காந்தியும் மாநாட்டில் கலந்து கொண்டார்.

★ குறிப்பாகச் சொல்வதென்றால், தி.மு.கழகத்தின் மாநில மாநாடுகளில் பெரும்பாலானவை திருச்சி மாநகரில்தான் நடைபெற்றுள்ளன. இந்தப் பெருமை திருச்சி மாநகரை மட்டுமே சாரும்.

திருச்சியில் தி.மு.க. நிகழ்வுகள்...

★ 1949 செப்டெம்பர் 17, சென்னை ராபின்சன் பூங்காவில் தி.மு.கழகம் உதயம்.

★ 31.12.49 திருச்சியில் தி.மு.க.வின் முதல் பொதுக்குழுக் கூட்டம். அண்ணா, கலைஞர் உட்பட 80 பேர் பங்கேற்றனர்.

★ 15.7.1953 டால்மியாபுரத்தைக் கல்லக்குடி எனப் பெயர் மாற்றம் செய்யக் கோரி, டால்மியாபுரம் ரயில் நிலையத்தில் கலைஞர் கருணாநிதி தலைமை தாங்கி மறியல் செய்தார்.

★ 25.1.1965 கருணாநிதி கரூரில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

★ 2.3.1967 தமிழக அரசில் அமைச்சராகப் பொறுப்பேற்ற கருணாநிதி, திருச்சி பெரியார் மாளிகையில் பெரியாரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

★ 17.9.1968 திருச்சி சிந்தாமணியில்



★ 1990 மாநாடு

அண்ணா சிலையினைத் திறந்து வைத்தார் கருணாநிதி.

★ 2.3.1969 முதலமைச்சராக மு.கருணாநிதி பதவியேற்றதும், முதன் முறையாக திருச்சி டவுன்ஹால் பொதுக்கூட்டத்தில் கலைஞருக்கு அன்பில் தர்மலிங்கம் வெள்ளிச் செங்கோல் பரிசளித்தார்.

★ 18.1.1970 டால்மியாபுரம் ரயில் நிலையத்தில் 'கல்லக்குடி - பளங்காநத்



தம்' பெயர்ப் பலகையை அன்பில் தர்ம லிங்கம் தலைமையில் கருணாநிதி திறந்து வைத்தார்.

★ 23.5.1982-ல் கலைஞர் கருணாநிதியின் 25 ஆண்டு கால சட்டப்பேரவை பணியினைப் பாராட்டி, அவருக்கு அறுபது பவுன் பொன்னாரம் குளித்தலையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

★ 7.9.1989 குழுமணர் 'அன்பில் தர்ம



★ 1991... தி.மு.க. திருப்புமுனை மாநாட்டில் கலைஞர் சிறப்புரை!

லிங்கம் வேளாண்மைக் கல்லூரி' அடிக்கல் நாட்டு விழா. அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் முதல்வர் கருணாநிதி அடிக்கல் நாட்டினார்.

★ திருச்சி மாவட்டத்தில் திராவிட இயக்கத்தின் வேராகத் திகழ்ந்தவர் எம்.எஸ்.மணி. 1957-ல் இம்மாவட்டத்தின் ஜாம்பவானாக இருந்த டாக்டர் மதுரத்தைத் தோற்கடித்து தொடர்ந்து மூன்று சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர்.

★ துறையூர் து.பா.அழகமுத்து. 1962 முதல் தொடர்ந்து மூன்று முறை சட்ட மன்ற உறுப்பினரானவர். தி.மு.க. கொறடாவாகச் சிறப்பாகப் பணியாற்றியவர்.

★ திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன். கலைஞர் எழுதிய பல நூல்களை முதன்முறையாக வெளியிட்டது திராவிடப் பண்ணை. அண்ணா - கலைஞர் - நாவலர் என மூன்று தலைவர்களிடமும் நெருங்கிப் பழகியவர் முத்துகிருஷ்ணன்.

★ குளித்தலை இளமுருகு பொற்செல்வி. தற்போதும் குளித்தலையில் இயங்கி வரும் தமிழ் கா.சு.பிள்ளை நூலகம், ஓர் ஆவணக் காப்பகமாக இருந்து வருகிறது.

★ புதுக்கோட்டை பெரியண்ணன். 1974 முதல் பல்லாண்டு காலம் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றியவர். 1989 முதல் 1996 வரை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்.

★ அன்பில் பொய்யாமொழி. அன்பில் தர்மலிங்கத்தின் மூத்த மகன், இளைஞர் அணி துவக்கப்பட்டபோது 1984-ல் அதன் மாவட்டச் செயலாளராக பணியாற்றத் துவங்கினார். 1989-ல் திருச்சியில் 2ஆவது தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார். 1996-ல் மீண்டும் அதே தொகுதியில் வெற்றி பெற்றார். மு.க.ஸ்டாலினின் இணை பிரியா உயிர் நண்பராகத் திகழ்ந்தவர்.

தகவல் உதவி : 'நடந்தாய் வாழி திருச்சிராப்பள்ளி' - புத்தகம்

★ 1996- பேராசிரியர், ஆற்காட்டாருடன் கலைஞர்





திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டத்தில் காணக்கிளிய நல்லூர் கிராமம். அங்கு பிறந்த எனக்கு, வேறு எங்குமே காணக் கிடைக்காத தலைவராக வாய்க்கப் பெற்றவர் தலைவர் கலைஞர். முழுக்க முழுக்க அவர் வார்ப்பு நான். கடந்த இருபதாண்டுகளாக அவரைச் சந்திக்கும்போதெல்லாம் அந்த முதல் சந்திப்பின் படபடப்பினை நான் உணர்வேன். அந்த இயல்பான படபடப்பினை, தூய வெண்பட்டு மலர் போல எனக்குள் பாதுகாத்து வருகிறேன்.

இதோ... அந்த முதல் சந்திப்பு:

1986 உள்ளாட்சி மன்றத் தேர்தல். புள்ளம்பாடி ஒன்றிய சேர்மன் தேர்தலுக்கு, கழகத் தலைமையிடம் மனுச் செய்திருந்தேன். நேர்காணலின்போது என்னை அவர் 'நீ எந்தச் சாதி?' எனக் கேட்டிருந்தார். பிறப்பின் வாயிலாக அறியப்பட்ட என் சாதியைக் கூறுகிறேன். 'அந்தப் பகுதியில் வேற்றுச் சாதியினர்தானே அதிகமாக வசிக்கின்றனர். நீ எப்படி அங்கு வெற்றி பெற முடியும்?' என வினவினார் தலைவர். 'அனைத்து சாதியினரிடமும் சமத்துவாய்ப் பழகி வருகிறேன். மேலும் சேரி மக்கள் எனக்கே வாக்களிப்பர்' எனப் பதில் கூறினேன். தலைவர் முகம் மாறிப் போனது. 'சேரி மக்கள் என்று இன்னொரு தடவை சொல்லாதே. அவர்களை ஆதிதிராவிடர் என்றே குறிப்பிடு!' எனக் கூறினார் தலைவர்.

அன்றிலிருந்து இன்றுவரை என்னை வளர்த்து வருபவர் தலைவர். அவரைப் போலவே அவருக்கு

கலைஞரும் காணக்கி



ணையாக, எல்லா நேரங்களிலும் எங்களை
ழி நடத்திச் செல்பவர் தளபதி.

புள்ளம்பாடி ஒன்றிய சேர்மனாக 1986-ல்
வற்றி பெற்றேன். 1989 பொதுத் தேர்தலில்
ால்குடி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி
பற்ற எனக்கு மின்துறை அமைச்சர்
பாறுப்பு தந்தார் கலைஞர். 1996-ல் மீண்டும்
ால்குடியில் வெற்றி கிட்டியது. 2006-ல்
ருச்சி இரண்டாவது சட்டமன்றத் தொகுதி
றப்பினர் ஆகி, கலைஞரின் ஆசியுடன்
பாக்குவரத்துத் துறை அமைச்சராகப்
ணியாற்றி வருகிறேன்.

எந்தப் பணியினைச் செய்தாலும், அதனை
கவும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ப
ல் கலைஞருக்கு இணை கலைஞரே என்று
ான் கூற வேண்டும்:

திருச்சியில் மாநாட்டு வேலைகள் வெகு
வகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.
துரையிலிருந்து காரில் திருச்சி வருகிறார்
லைவர். நள்ளிரவு நேரம். அவரை வர
வற்க திருச்சி சங்கம் ஓட்டலில் நாங்கள்
ல்லோரும் காத்திருக்கிறோம். நேரம்
ஆகிறது. கலைஞர் வந்து சேரவில்லை. இரவு
ங்கிவிட்டு காலையில் மாநாட்டுப் பந்தல்
வேலைகளைப் பார்வையிடுவதாக ஏற்பாடு.
தனால் கலைஞர் நேராக இங்குதான்
ங்கம் ஓட்டல்) வருவார் என்று நாங்கள்
ன்று காத்திருந்தோம். ஆனால், வரும்
ழியில் கலைஞர் காரை நிறுத்தி, அந்த
ள்ளிரவு நேரத்தில் மாநாட்டுப் பந்தலைப்
ார்வையிட்டுக் கொண்டிருப்பதாக எங்களுக்
த் தகவல் வந்தது.

எல்லோரும் பரபரப்பாகி காரில் பறந்
தாம். காரை விட்டிறங்கி ஒரு கி.மீ. தூரம்
டந்து சென்று மாநாட்டுப் பந்தலின் மையப்
குதியில் நின்று பார்வையிட்டுக் கொண்
ருந்தார் தலைவர்! மின் விளக்குகள் எதுவும்
திகமாகப் போடப்படவில்லை. கொஞ்சம்
இருட்டாகத்தான் இருந்தது.
'பந்தலில் சவுக்குக் கம்பங்கள் ஒரே
நேர் வரிசையில் இல்லை. ஒவ்
வொன்றும் நேர் வரிசையிலிருந்து
விலகி விலகி இருக்கிறது. இப்படி
இருந்தால் பார்வையாளர்களுக்கு
மேடையின் முழுப் பகுதியும் தெரி
யாது. சவுக்குக் கம்பங்களை ஒரே
நேர் வரிசையில் நட்டு வையுங்கள்'
என்று எங்களிடம் கூறினார்
தலைவர்.

அந்த இரவு நேரத்தில் அந்தக்
குறையானது எங்கள் பார்வைக்குப்
படவேயில்லை. மறுநாள் காலை
விழுந்தடித்துச் சென்று பார்த்தோம்.
கலைஞர் கண்டு சொன்ன குறை
பாடு அப்போதுதான் எங்கள் பார்
வைக்குப் பட்டது. 'அதுதான்
கலைஞர்!' என்கிற வியப்பு, இந்த
காணக்கிளிய நல்லூர் வாசிக்குள்
இன்னமும் நிலைத்து நிற்கிறது.

கே.என். நேரு போக்குவரத்துத் துறை அமைச்சர்



ரிய நல்லூரும்!



* திருவளர்ச்சிப்பட்டியில் மு.க.ஸ்டாலின்...

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து, இயங்கி வருகிறது ஓர் ஊராட்சி. அவ்வப்போது தேவைகளைக் கேட்டுணர்ந்து பூர்த்தி செய்து வருகிறார் அந்த ஊராட்சி மன்றத் தலைவர். மத்திய - மாநில அரசுகளின் ஊராட்சி நிதிகளைப் பெற்று மக்கள் நலப் பணிகளை நிறைவேற்றுவதுடன், பல சமயங்களில் தமது சொந்த விவசாய வருவாயிலிருந்தும் கணிசமான தொகையினைக் கொண்டு கிராம மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறார் அவர்.

உள்ளாட்சியில்

திருச்சி மாவட்டத்தில் மல்லியம்பத்து ஊராட்சி. அதன் தலைவர் ப.கதிர்வேல். வழக்குரைஞர். தி.மு.க. இளைஞர் அணியின் திருச்சி மாவட்டத் துணை அமைப்பாளர்.

செங்கதிர்ச்சோலை, பெருங்குடி, மல்லியம்பத்து, அமிர்தராஜநல்லூர், இராமநாதநல்லூர், ஆளவந்தான்நல்லூர், அம்மையநல்லூர் ஆகிய சிறு கிராமங்களை உள்ளடக்கியது மல்லியம்பத்து ஊராட்சி. ஆயிரத்து இருநூற்றைம்பது வீடுகள். மக்கள் தொகை சுமார் ஐந்தாயிரம்.

உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பு, செங்கதிர்ச்சோலை - மல்லியம்பத்து பகுதியில் சாலை இருபுறங்களிலும் முட்செடிகள் படர்ந்து, ஒற்றையடிப் பாதையாக ஆக்கி வைத்திருந்தது. தேர்தலில் வெற்றி பெற்றதும் செய்த முதல் வேலை, பொக்லைன் எந்திரம் வைத்து அவற்றை வேரோடு அகற்றி, சாலையின் அகலத்தைக் காப்பாற்றியது. தினசரி பத்து மணி நேரம் எனப் பதினைந்து நாட்கள் வேலை ஆகியுள்ளது பொக்லைன் எந்திரத்துக்கு! இதன் முழுச் செலவையும் ஊராட்சி மன்றத் தலைவர் ப.கதிர்வேல் தன் சொந்தப் பொறுப்பில் ஏற்றிருக்கிறார்.



* ப.கதிர்வேல்

குடிநீர் மேல்நிலைத் தொட்டி



கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறைதான் சுத்தம் செய்யப்பட்டு வந்தனவாம் அங்கு! அந்த முறை அடியோடு மாற்றப்பட்டுள்ளது. மல்லியம் பத்து ஊராட்சிக்குள் அமைந்திருக்கும் எட்டுக் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளும் தற்போது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தவறாது சுத்திகரிப்புச் செய்யப் பட்டு வருகின்றன. "கிராமப்புற மக்களுக்கு நல்ல தூய்மையான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியது ஓர் ஊராட்சியின் முக்கிய கடமை" என்கிறார் அவர்.

பழுதடைந்து இற்று கீழே விழும் நிலையில் இருந்த நாற்பது மின் கம்பங்கள் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதில் புதிய மின்கம்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. நானூறு தெரு விளக்குகள். அவற்றில் ஏதேனும் பழுதானால் மறுநாளே மாற்றிப் பொருத்தப்படுகிறது. பத்து லட்ச ரூபாய் ஒதுக்கீட்டில் கான்கிரீட் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. இதில் ஐந்து லட்ச ரூபாய் திருச்சி எம்.பி. எல்.கணேசனின் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி, தமது சொந்தப் பணத்திலிருந்து ஒரு லட்ச ரூபாய் அளவிலான மக்கள் நல உதவிகளைச் செய்து தந்திருக்கிறார் ப.கதிர்வேல். இலவச மருத்துவ முகாம், பெண்களுக்கு இலவச தையல் எந்திரம், கிராம மக்களின் ரத்தப் பிரிவு அறியும் மருத்துவ முகாம் என விரிந்து செல்கின்றன.

"சமீபத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஸ்டாலின் திருச்சி வந்திருந்தார். இரவு

* திருவளர்ச்சிப்பட்டி கிராமத்தில்...
இலவச தையல் இயந்திரம் - மல்லியம்பத்து



மலர்ந்தது நல்லாட்சி!

ஆகிவிட்டது. திருச்சி ஏர்போர்ட் அருகே திருவளர்ச்சிப்பட்டி கிராம மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை மனு ஒன்றினைத் தந்திருந்தனர். அதனைப் படித்துவிட்டு அவர்களை உடனே பின் தொடரும்படிக் கூறிவிட்டு, திருவளர்ச்சிப்பட்டி கிராமத்துக்குச் சென்றார் ஸ்டாலின். நள்ளிரவு நேரம்... கிராம மக்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களை எழுப்பிக் குறைகளைக் கேட்டறிந்தார். அந்த கிராமத்தைத் தத்தெடுத்து எல்லா தேவைகளையும் செய்து தரும்படி மாவட்ட நிர்வாகத்திடம் ஆணையிட்டார். அவ்வப்போது அங்கு சென்று பார்வையிட்டு வருகிறார். இதுவே எங்களைச் சிறப்பாகப் பணியாற்றிடத் தூண்டியுள்ளது!" என்கிறார் ப.கதிர்வேல்.

கலைஞரும் அன்பிலாரும்!



* அன்பில் தர்மலிங்கம்

சுமார் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக நட்பு பூண்டுள்ளன இரு குடும்பங்களும். சென்னையில் கலைஞர் குடும்பம்; திருச்சியில் அன்பில் தர்மலிங்கம் குடும்பம். இரண்டும் வேறு வேறு குடும்பங்கள் அல்ல என்கிற அளவில் பாசப் பிணைப்புக்குள் கட்டுண்ட குடும்பங்கள் அவை.

அன்பில் தர்மலிங்கம் எது குறித்தும் சுதந்திரமாகக் கருத்துச் சொல்லக் கூடியவர். அனைத்துக் கட்சியினரையும் அரசியல் களத்தில் அரவணைத்துச் செல்லக்கூடியவர். இதனால் அவருக்கு சர்வ கட்சித் தலைவர் என்கிற செல்லப் பெயரும் உண்டு.

1967-ல் சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கிறது தி.மு.க. அப்போது கடலூர் தொகுதியில் தோல்வியைத் தழுவுகிறார் அன்பில். 'தர்மு இல்லாத அமைச்சரவையா?' என வினவிய அண்ணா, மேலவை உறுப்பினராகி அமைச்சர் பொறுப்பேற்குமாறு வற்புறுத்துகிறார். 'கொல்லைப்புறம் வழியாக வருவதற்கு எனக்கு விருப்பமில்லை' என்று மறுத்து விடுகிறார் அன்பில். 1967-ல் அன்பில் இல்லாத அமைச்சரவையே அமைகிறது!

1971 சட்டமன்றத் தேர்தலில் திருச்சி 2-ஆவது தொகுதியில் வெற்றி பெறுகிறார்; வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகிறார். அப்போது திருச்சி மாவட்டத்தில் சுமார் இருபத்தைந்து

* அன்பில் பெரியசாமி





அமைப்புகளில் பதவி வகித்து வந்தார். அத்தனையையும் ராஜினாமா செய்துவிட்டே அமைச்சர் பொறுப்பேற்றார் அன்பில்.

மறைந்த எனது அண்ணார் பொய்யாமொழி அவர்களின் மகன் திருமண நிகழ்ச்சியில், ஒரு விஷயத்தை நினைவுபடுத்திப் பேசினார் கலைஞர். '1952-ல் காவிரி - கொள்ளிடத்தில் பெரு வெள்ளம். கொள்ளிடக்கரை. ஒரு கரையில் திருக்காட்டுப்பள்ளி. மறுகரையில் அன்பில். எனக்கு அப்போது வயது இருபத்தி ஒன்பது. கொள்ளிடத்திலோ காட்டாற்று வெள்ளம் வந்து கொண்டேயிருக்கிறது. ஆற்றிலே இறங்கி நடந்து சென்று மறு கரைக்குச் செல்ல வேண்டும் நாங்கள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்பில் ஒருவிதமான முரட்டுத் துணிச்சல்காரர். ஆற்றிலே இறங்கிக்கொண்டு என்னை வருமாறு அழைத்தார். தம் தோளில் என்னைச் சுமந்தபடி ஆற்று வெள்ளத்தைக் கிழித்தபடி நடக்கத் துவங்கிவிட்டார். மறுகரையில் என்னைப் பத்திரமாகக் கொண்டு வந்து இறக்கிவிட்டார். அந்த வகையில் என் உயிர் காத்த நண்பர் அவர்!' என்று கலைஞர் குறிப்பிட்டார்.



* அன்பில் பொய்யாமொழி - மு.க. ஸ்டாலின்... இணைபிரியாத நட்பு...

அன்பிலார் - கலைஞர் நட்பு போலவே, தளபதி - பொய்யாமொழி நட்பும் வலம் வந்தது தமிழகத்தில்'' எனக் கூறுகிறார் திருச்சி 1ஆவது சட்டமன்ற உறுப்பினரும் அன்பிலாரின் மகனுமான அன்பில் பெரியசாமி.



2000-ல் திருச்சியில் தமிழ்நாடு திருக்குறள் பேரவை நடத்திய உலகத் திருக்குறள் மாநாட்டில் கலைஞருக்கு 'திருக்குறள் முதல்வர்' விருதினை வழங்குகிறார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

ஆல்பம்




திருச்சியில் உடல் ஊனமுற்ற பெண்ணுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கிறார்...



திருச்சி, பெரியார்-மணியம்மை மேல்நிலைப் பள்ளி விழாவில் மாணவிகளுடன்...

தி.மு.க.வின் கோட்டை திருச்சி!

1962-ல் திருச்சி 1 தொகுதியில் தி.மு.க.வின் முதல் வெற்றியைத் துவக்கி வைத்தவர் எம்.எஸ்.மணி. அதிலிருந்து நடைபெற்ற பதினொரு சட்டமன்றத் தேர்தல்களில் எட்டு முறை வெற்றி பெற்றிருக்கிறது தி.மு.க.! திருச்சி 1, திருச்சி 2, திருவெறும்பூர், லால்குடி சட்டமன்றத் தொகுதிகளில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் தி.மு.க. அதிக முறை வெற்றி பெற்றிருக்கிறது. 'கழகத் தீரர்கள் நிறைந்த கோட்டை திருச்சி. அதுதான் வெற்றிக்குக் காரணம்' எனக் கூறுகிறார் திருச்சி மாவட்ட ஒன்றியக் குழு கவுன்சிலரான பி.ஆர். சிங்காரம்.





திருச்சியில் 2006-ல்
நடைபெற்ற தி.மு.கழக
மாநில மாநாட்டில்,
அன்னை
சோனியாகாந்தியுடன்
கலைஞர்...



2007-ல் திருச்சியில் புதிய
பேருந்து வழித்தடம் ஒன்றில்
பேருந்து ஓட்டுகிறார்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
மு.க.ஸ்டாலின்



சுனாமி நிவாரண நிதியாக ஒரு
லட்ச ரூபாய் தொகையை
திருச்சி மாவட்ட ஆட்சியரிடம்
வழங்குகிறார் மல்லியம்பத்து
ப. கதிர்வேலின் தந்தை
வை. பழனியாண்டி. உடன்
கதிர்வேலின் சகோதரர்கள்.



அவர் ஒரு கம்யூனிஸ்ட்!

“சிம்கோ மீட்டர் தொழிலாளர்களின் பிரச்னைகளுக்காக, 1978-ல் சட்டமன்றத்தில் குரல் தந்தவர் கலைஞர். விவசாயத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்களின் பிரச்னைகளுக்காக உரிமைக் குரல் தந்தவர் அவர். தொழிலாளர் தினமான மே தினத்துக்கு உரிய கௌரவம் பெற்றுத் தந்தவர். மத்திய அரசில் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, திருச்சி பாய்லர் ஆலை பங்குகள் விற்பனைக்குத் தடை பெற்றுத் தந்தவர். அவர் தம்மை ஒரு கம்யூனிஸ்ட் ஆகப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்!” என்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாவட்டச் செயலாளர் எஸ்.ஸ்ரீதர்.




தோழமை உணர்வு கொண்டவர்!

"1957-ல் குளித்தலையில் முதன்முதலாக வெற்றி பெறும் கலைஞர், தொகுதி விவசாயிகள் பிரச்னைகளுக்காக கம்யூனிஸ்ட் இயக்கங்களுடன் இணைந்து போராடினார். கலைஞரின் அப்போதைய தோழமை உணர்வே, திருச்சி மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொகுதி உடன்பாடு செய்துகொள்ள வழி வகுத்துத் தந்தது!" எனக் கூறுகிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாவட்டச் செயலாளர் எம்.செல்வராஜ்.



1967-ல் பொதுப்பணித்துறை அமைச்சராக பொறுப்பேற்ற கலைஞர், திருச்சி பெரியார் மாளிகையில் பெரியாரைச் சந்தித்து ஆசி...



திருச்சியில் 1974-ல் 'பெரியார் சிந்தனைகள்' நூல் வெளியீட்டு விழாவில் கலைஞர், கல்வியாளர் நெ.து. சுந்தரவடிவேலு



திருச்சி தேவர் ஹாலில் நடந்த நாடகத்தில் கலைஞர்...



திருச்சியில் கோளரங்கத் திறப்பு விழாவில் கலைஞர், பேராசிரியர்

தொகுப்பு: ஜி.கே. முரளிதரன், திருச்சி - 2.



இந்த 'அன்பு' போதும்!

"1989-ல் திருச்சி நகர இளைஞர் அணி அமைப்பாளர் பதவிக்கு அப்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்த மலர்மன்னன் அவர்களின் மகனுக்கும் எனக்கும் போட்டி! அவரது மகன் பெயர் அன்பு. 'அந்த (மலர்மன்னன் மகன்) அன்பு வேண்டாமய்யா, இந்த (என்னை) அன்புவே போதுமய்யா!' - இவ்வாறு கழக முன்னணியினரிடத்தில் சொல்லியிருந்தார் கலைஞர்" என்று நினைவுகூர்கிறார் திருச்சி மாநகரத் துணை மேயர் மு.அன்பழகன்!

10.6.2007 இதழுடன்
இணைப்பு 16 பக்கங்கள்

+16

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



கலைஞரும் திருச்சியும்...

கலைஞரின் 84-ஆவது பிறந்த நாள் சிறப்பு மலர்!

வழங்குபவர்:

ப. கதிர்வேல், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர்,
ஊராட்சி மன்றத் தலைவர், மல்லியம்பத்து ஊராட்சி, திருச்சி மாவட்டம்.



“ தங்கத் தலைவரே!
எங்கள் திருச்சி மாவட்டம்
மேலும் வளம்பெற
தங்கள் வருகை
வித்திடட்டும்! ”
-கே.என்.நேரு
தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர்



ஒட்டுமொத்த தமிழ்க் குலத்தின்
ஒன்றுபட்ட முக விலாசமே!
எண்பத்து நாலாம் அகவை தொட்டுத் தமிழர்களின்
துன்பத்தைத் துடைத்திடும் தூய நல் தலைவா!

அகிலமே போற்றும் அன்னை சோனியா
தகப்பனாய்ப் போற்றும் தங்கத் தலைவா!

நயனங்கள் எங்கு நனைந்து கிடந்தாலும்
தேடிப் போய்த் துடைக்கும்
பூந்துவாலை நீ!

தட்டுவோர் தளிர்க் கரங்களுக்குத்
திறந்திடும் மணிக்கதவு நீ!

பொறுமையின் சிகரம் நீ!
பொங்குமாங் கடலும் நீ!

கழக நலனுக்காகக் கட்டுப்பாடு
காப்போர்க்கு 'ஹலோ' சொல்வாய்!
கடமை தவறி கண்ணியம்
இழப்போர்க்கு 'சலோ' சொல்வாய்!



ஜி.கே.முரளிதரன்
மாநிலச் செயலாளர்,
தமிழ்நாடு காங்கிரஸ்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under
PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 10.6.2007




Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

ஹேர்டை எஃபெக்ட்



Indica™ HERBAL HAIR COLOUR எஃபெக்ட்



வழங்குகிறோம் புதிய இண்டிகா ஹெர்பல் ஹேர் கலர்

சாதாரண ஹேர்டைகள் உங்கள் கூந்தலை வறண்டதாகவும் கடினமாகவும் செய்யும்போது, புதிய இண்டிகா உங்கள் கூந்தலை 2 மடங்கு மென்மை ஆக்குகிறது. ஏனெனில், புதிய இண்டிகா ஒரு புரட்சிகரமான ஹேர் சாஃப்ட்னருடன் வழங்கப்படுகிறது. நெல்லி, மருதாணி, வெந்தயம், பிருங்கராஜ் மற்றும் செம்பருத்தி போன்ற பிரத்யேக மூலிகைகளினால் ஆன இந்த ஹேர் சாஃப்ட்னரானது உங்கள் கூந்தலுக்கு இயற்கையான கருமை அளித்து அதை 2 மடங்கு மென்மை ஆக்குகிறது. விரையுங்கள், உங்கள் கூந்தலுக்கு இயற்கை நிறத்தை அளிப்பதோடு அதற்கு பட்டு போன்ற மென்மை அளித்திடுங்கள்.





ஹேர் சாஃப்ட்னர்களுடன்